Regd. No. 2975

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் 329

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

SRI RAMANUJAN

Editor:
Mahamahimopadhyaya
P. B. ANNANGARACHARYA, KANCHIPURAM-631503

வருஷச் சந்தா ரூ. 10. ஜீவியச் சந்தா ரூ. [illegible]0

பேரருளாளன் பெருந்தேவித்தாயார்
திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

1975௵ நவம்பர், கார்த்திகை௴

ஐப்பசித் திருமூல மஹோத்ஸவம்


செந்தமிழ்வேதியர் சிந்தைதெளிந்து சிறந்துமகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர் செய்தருள்நற்கலை தேசுபொலிந்திடுநாள்
மந்தமதிப்புவி மானிடர்தங்களை வானிலுயர்த்திடுநாள்
மாசறுஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வுமுளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில் சூழ்குருகாதிபர் கலைகள்விளங்கிடுநாள்
காரமர்மேனி அரங்கநகர்க்கிறை கண்கள்களித்திடுநாள்
அந்தமில்சீர் மணவாளமுனிப்பரன் அவதாரஞ்செயுநாள்
அழகுதிகழ்ந்திடு மைப்பசியில் திருமூலமதெனுநாளே.

மணவாளமாமுனிகளின் ஐப்பசித்திருமூல மஹோத்ஸவம் திவ்யதேசங்கள்தோறும் நடைபெற்றாலும், கச்சித் தேவப்பெருமாள் ஸந்நிதியில் நடைபெறும் வைபவம் வேறு எந்த திவ்ய தேசத்திலும் நடைபெறுவதன்று என்பதை அநுபவசாலிகளே அறிவர். 29—10—75 புதன்கிழமை தொடங்கி இந்த மஹோத்ஸவம் தேவப்பெருமாள் ஸந்நிதியில் நடைபெற்றவாறு சுருக்கமாகத் தெரிவிக்கப்படுகிறது. தினந்தோறும் பகல் 11 மணிக்கு அலங்காரத் திருமஞ்சனம், உடனே திவ்யப்ரபந்த ஸேவை ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு கோஷ்டி முடிவு பெறுவது. இரவு 7 மணிக்கு ஸந்நிதிவாசலில் கொட்டகைப் பந்தலில் பக்கியுலாத்தல் ஊஞ்சல் நடைபெ[illegible] உள்ளேயெழுந்தருளி 8 மணி முதல் 10 மணிவரை திருவாய்மொழி ஸேவை சாற்றுமுறை நடைபெறுவது 7—11—75 திருமூல நன்னாளில் நித்யக்ரமங்கள் தவிர, தேவப்பெருமாள் திருமலையில் நின்றும் காலையில் இறங்கி இரவு 8 மணிக்குத் திருவீதிப் புறப்பாடு கண்டருளி, [இன்று வெள்ளிக்கிழமை யாதலால்] பெருந்தேவித்தாயாருடனும் 11 மணியளவில் மாமுனிகள் ஸந்நிதிக்கெழுந்தருளி ஸேவை சாற்றுமுறையாகி மறுநாள்காலை மாமுனிகளோடுங்கூட கண்ணாடியறைக்கு எழுந்தருளி மாமுனிகளுக்கு மரியாதை ஸாதித்து விடைதந்தருள, பெரியதிருவோலக்கத்துடனே ஸந்நிதிக்கு எழுந்தருளி சந்தப்பொடி வஸந்தோத்ஸவமாகி உத்ஸவம் ஸமாப்தியாயிற்று.

திருச்சேறையில் சிறப்பு அர்ச்சனை

சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான திருச்சேறையென்பது ஸாரமயமாக விளங்கும் சிறந்ததொரு திவ்யதேசமாகும். அதாவது இந்த க்ஷேத்ரத்திற்கு ஸாரக்ஷேத்ரமென்று திருநாமம்; இதில் ஸாரபுஷ்கரிணிக்கரையில் விளங்கும் ஸார விமானத்தில் ஸ்ரீ ஸாரநாயகியுடன் ஸ்ரீ ஸாரநாதப் பெருமாள் பஞ்சலக்ஷ்மீ ஸமேதராய் காவேரிக்குக் காட்சி தந்துகொண்டு எழுந்தருளி பக்தவர்க்கத்திற்கு ஸேவை தந்தருளுமழகு ஸாரமாகச் சொல்லில் வாசாமகோசரமென்னத்தகும். இக்கலியில் லோககல்யாணத்தை உத்தேசித்து கால் கோடி அர்ச்சனை செய்விக்கவேணுமென்று ஸங்கல்பித்து பல பெரியார்கள் 9—10—1975 அன்று தொடங்கி நடத்தி வருகிறார்கள். பக்திச்ரத்தைகளுடன் கூடி பக்தர்கள் செய்யும் வழிபாடுகள் ஒருகாலும் வீண் போகாவென்பது சாஸ்த்ரத்திலும் அநுபவத்திலும் கண்ட விஷயமாதலால் ஆஸ்திக மஹாஜனங்கள் உத்ஸாஹத்துடன் இதில் கலந்துகொண்டு எம்பெருமான் திருவருளுக்கு இலக்காக வேணுமென்று அர்ச்சனை குழுவினர் அனைவரையும் வேண்டிக் கொள்கிறார். அர்ச்சனை சீட்டு 1-க்கு கட்டணம் ரூ. 12/- பக்தர்கள்—செயலாளர், கால்கோடி அர்ச்சனைக்குழு, ஸ்ரீஸாரநாதப்பெருமாள் திருக்கோயில், P. O. திருச்சேறை, கும்பகோணம் வட்டம்—என்கிற விலாசத்திற்கு எழுதுக. ...

ஸ்ரீ ராமாநுஜன்—329



ஆசிரியர்:
மஹாமஹோபாத்யாய ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 29 | ராக்ஷஸஸு கார்த்திகைமீ 10—11—75 | ஸஞ்சிகை 5

கார்த்திகைத் திங்களும் கலிகன்றிகளிருவரும்

(இருவரில் முதல் கலிகன்றியாவார் "மஞ்சுலாஞ்சோலை வண்டறைமாநீர் மங்கையார் வாட்கலிகன்றி" என்ற திருமங்கையாழ்வாராவர். இரண்டாம் கலிகன்றியாவார் திருக்கலிகன்றிதாஸரென்று நஞ்சீயரால் திருநாமஞ் சாத்தப்பெற்ற நம்பிள்ளையாவர்) **திருமங்கையாழ்வாரைப்பற்றிய சுருக்கம் வருமாறு:**

கலியன், கலிகன்றி, குறையல்பிரான், வாள்வீசும்பரகாலன், ஆடல்மாவலவன், ஆலிநாடன், மங்கைவேந்தன், மங்கையர்கோன், திருமங்கையாழ்வார் என்றிவை முதலான பல திருநாமங்கள் இவர்க்குள்ளன. திருவாலித்திருநகரியைச் சார்ந்த திருக்குறையலூரில் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நன்னாளில் இவரது திருவவதாரம் "மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூறவவதரித்த" என்ற உபதேசரத்தினமாலையின் படியும், "வேதசதுஷ்டய அங்கோபாங்கங்கள் பதினாலும்போலே இந்நாலுக்கும் இருந்தமிழ் நூற்புலவர் பனுவலாறும் மற்றை யெண்மர் நன்மாலைகளும்" என்ற ஆசார்யஹ்ருதய(43)சூர்ணையின்படியும் அறியவேண்டியவிசேஷமொன்றுண்டு.

வடமொழி வேதத்திற்கு அங்கங்களும் உபாங்கங்களும் இருப்பதுபோல தமிழ் வேதத்திற்கும் அவையுள்ளன; ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்கிற நான்கு வேதங்களுக்கும் சிக்ஷா வ்யாகரணம் ச்சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்கிற ஆறு அங்கங்களும் மீமாம்ஸா ந்யாய புராண தர்மசாஸ்த்ரங்கள் முதலிய உபாங்கங்கள் எட்டும் ஆகப் பதினான்கு உறுப்புக்கள் அமைந்திருப்பது போலவே, நம்மாழ்வாரருளிச் செய்த திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழி ஆகிய தமிழ்மறை நான்கிற்கும் இத் திருமங்கையாழ்வா

ருடைய திவ்யப் பிரபந்தங்களாறும் மற்றையாழ்வார்கள் எல்லாருடைய திவ்யப் பிரபந்தங்களும் அங்கோபாங்கங்களாமென்று ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான பூருவாசாரியர்கள் அறுதியிட்டனர். இவ்வாழ்வாருடைய பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் ஆகிய ஆறு பிரபந்தங்களும் ஆறு அங்கமாகக் கொள்ளப் பட்டன. வடமொழி வேதங்களுக்கு சிக்ஷா வ்யாகரணம் நிருக்தம் முதலியவை அங்கமாகுந் தன்மையை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "சிக்ஷாயாம் வர்ணசிக்ஷா பதனமதிகரோ வ்யாக்ரியா நிர்வசோப்யாம்" இத்யாதி ச்லோகத்தினால் நிரூபித்துக் காட்டியிருப்பது போல நம்மாழ்வாருடைய ஆறு பிரபந்தங்களும் தமிழ்மறைக்கு அங்கமாகுந் தன்மையை நிரூபித்துக் காட்டவேண்டாவோ வென்னில்; சொல்லுவோம்;

அங்காங்கிபாவஸம்பந்தம் பலபடிகளால் பொருந்தும். வடமொழி வேதங்களுக்கும் சிக்ஷாதிகளுக்கும் அங்காங்கிபாவம் எவ்விதமாகப் பொருந்தியிருக்கின்றதோ அவ்விதமாகவே இங்கும் பொருந்தவேணு மென்கிற நிர்ப்பந்தமில்லை. நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தைப் பெரும்பாலும் பின்பற்றியே இவ்வாழ்வார் அருளிச்செய்துள்ளார் என்பதுவே இங்கு முக்கியமாகக் குறிக்கொள்ளத்தக்கது; இதையிட்டே 'மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூற" என்றது. அதனை ஸ்ரீ ராமாநுஜனிலேயே முன்பு வெளிவந்திருக்கிற "அபூர்வார்த்த ரத்நநிதி"யில் மகர வரிசையில் "மாறன் பணித்த" என்ற மகுடத்தின் கீழ்க் கண்டுகளிப்பது. ... ...

நம்பிள்ளை வைபவச் சுருக்கம்

நஞ்சீயருடைய திருவடிகளிலே ஆச்ரயித்தவர்களில் தலைவர் நம்பிள்ளை. இவர்க்கு இயற்கையான திருநாமம் 'நம்பூர் வரதராஜாசார்யர்' என்பது. ஸ்வாசார்யரான நஞ்சீயர் உகந்து சாத்தின திருநாமம் நம்பிள்ளை யென்பது. அந்தத்திருநாமம் சாத்துகைக்கு அடியென்னென்னில்; நஞ்சீயர் பட்டருடைய நியமனப்படி திருவாய்மொழியின் திவ்யார்த்தங்களை ப்ரவசனஞ் செய்வதையே போதுபோக்காகக் கொண்டு வாழ்ந்து வந்தார் திருவரங்கம் பெரிய கோயிலில். அவருடைய காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருந்தவர்களில் நம்பூர் வரதராஜாசார்யரும் ஒருவராயிருந்துவந்தார். இவர் நீறுபூத்த நெருப்புப்போல இருந்து வந்தபடியாலே இவருடைய ஞானவைபவம் முதலிய பெருமைகளை விசேஷித்து யாருமறியாதிருந்தனர்.

இப்படியிருக்கையில், நஞ்சீயர் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய ஆறாயிரப்படியிற்காட்டிலும் சிறிது விரிவாக வொரு வ்யாக்கியான மிடும்படி பட்டருடைய நியமனம் பெற்றிருந்ததனால் ஒன்பதினாயிரப்படி என்றொரு வியாக்கியானம் இட்டருளியிருந்தார். அதைச் செவ்வையாகப் பட்டோலை கொள்ள வல்லாரிடம் கொடுத்து எழுதுவிக்கவேணுமென்று கருதி இதற்குத் தகுந்தவர்கள் யாரேனுமுளரோ வென்று அந்தரங்கர்களை விசாரிக்கையில் 'நம்பூர் வரதராஜரென்றொருவர் ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டிக்குத் தவறாது வருகின்றாரே; அவர் நல்ல விரகர்; எழுத்திலும் வல்லவர். அவரைக்கொண்டு இப்பணியை நிறைவேற்றிக் கொள்ளலாமோ' என்று கூறினார்கள். பிறகு அவரை அருகே வர

வைத்து ஆராய்ந்து பார்க்கையில் அவருடைய பாண்டித்யம் ஒப்புயர்வற்ற தென்று தெரிய வந்தது; அதனால் உள்ளம் பூரித்து அவர்பால் விசேஷ கடாக்ஷம் செய்தருளித் தம்முடைய ஒன்பதினாயிரப்படியை வரியடைவே அவர்க்கு ப்ரவசனமும் செய்து அதை யெழுதித் தரும்படி ஸ்ரீகோசத்தை அவரிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டவவர் தம்மூருக்குச் சென்று எழுதிக் கொண்டு வருவதாகச் சொல்லிப் போகையில் திருக்காவேரியில் நீந்திச்செல்ல நேர்ந்தது; அப்போது திருமுடியில் கட்டிக்கொண்ட அந்த ஸ்ரீகோசம் நெகிழ்ந்து விழுந்து வெள்ளத்திற் போய்விடவே 'இப்படி அபசாரமாய்த் தலைக்கட்டிற்றே' யென்று வருந்த நேர்ந்தது. ஆனாலும் இவர் தாம் அந்த வ்யாக்யானத்தை ஸ்வாசார்யர் திருவடிகளிலே வரியடைவே கற்றிருந்தபடியாலும் அவருடைய கருணை கடாக்ஷத்தை விசேஷித்துப் பெற்றிருந்தபடியாலும் அவருடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே பட்டோலை கொள்ளத் தொடங்கி விரைவில் எழுதிமுடித்து ஸ்ரீகோசத்தை நஞ்சீயர் திருவடிகளிலே கொண்டு வைத்தார். 'நாம் கொடுத்த ஏடு எங்கே?' என்று அவர் கேட்கையில், நடந்தது நடந்தபடியே விண்ணப்பஞ் செய்யவேண்டியதாயிற்று. பிறகு நஞ்சீயர் ஸ்ரீகோசத்தை அவிழ்த்துக் கடாக்ஷிக்கையில், தாமருளிச் செய்த ஸ்ரீஸூக்திகள் விடாமலும் தம்மிடம் அவர் கேட்டிருந்த சில அர்த்த விசேஷங்கள் பொருத்தமாக அமைந்தும் அதிகவிரிவில்லாமலும் இருந்த அழகுக்கு மிகவுகந்து 'வாரீர் நம்முடைய பிள்ளையே!' என்று எடுத்தணைத்துக் கொண்டார். அதுமுதலாக நம்பிள்ளை யென்றே இவர் வழங்கப்பெற்று வந்தார். திருக்கலிகன்றிதாஸர் என்பதும் இவர்க்கு நஞ்சீயர் சாத்தின திருநாமம்.

இவருடைய ஞான வைபவத்தைப்பற்றி நாம் விரிவாக எழுதவேண்டுமோ? பெரிய திருமொழி வ்யாக்யானத்தில் "ஓதுவாய்மையு முவனியப் பிறப்பு முனக்கு முன் தந்த அந்தணனொருவன்" என்ற விடத்து "முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்துப் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளுமதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலேயாம் நம்பிள்ளையைப் போலே" என்று பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி யொன்றே இவருடைய ஞானப்பெருமையை விளக்கக்கூடியது. திவ்யப்ரபந்தங்களுக்கும் இதிஹாஸ புராணாதிகளுக்கும் இன்சுவையே வடிவெடுத்த அர்த்தங்களை யருளிச்செய்வதில் இவர்க்கு ஒத்தாரும் மிக்காருமில்லையென்று ப்ரஸித்தமாயிருந்தது.

லோகாசார்யரென்கிற திருநாமமும் இவர்க்கு உண்டு. அது பற்றிய வரலாறு கேண்மின்: இவர் கோயிலில் வாழ்ந்த காலத்தில் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் இவர் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸகலார்த்தங்களும் கேட்டு வந்தார்கள். 'நம்பெருமாள் கோஷ்டியோ நம்பிள்ளை கோஷ்டியோ' என்னும்படி மிகப்பெரிய சிஷ்ய கோஷ்டீஸம்பத்துடன் வாழ்ந்துவந்தார். அப்போது முதலியாண்டான் திருப்பேரனான கந்தாடை தோழப்பரும் அங்கு வாழ்ந்து வந்தார். அவரும் வித்வானாயிருக்கச் செய்தேயும் அவரிடத்தில் ஒருவரும் ஆச்ரயியாதிருக்கவே அவர்க்குப் பொறாமையுண்டாகி ஒருநாள் நம்பிள்ளையைப் பெருமாள் கோஷ்டியிலே திரஸ்காரமானவார்த்தைகளைச்சொல்லிப் பரிபவித்துவிட்டுத் திருமாளிகைக்கெழுந்தருளினார். அவருடைய தேவிகள் இந்த அஸஹ்யாபசாரத்தை யறிந்து கண்ணும் கண்ணீரு

மாக வந்து 'அந்தோ! இப்படியும் பரமாசார்யர் திருவடிகளிலே அபசாரப்படு வீரோ? உமக்கு உய்யும் விரகுண்டோ? என் செய்தீர்! என் செய்தீர்! ஐயோ!' என்று பலவுஞ் சொல்லி அநுதாபத்தை யுண்டாக்க, தோழப்பரும் அநுதபித்து நம்பிள்ளை திருவடிகளில் க்ஷமைவேண்ட வேணுமென்று பாரித்திருக்க, அதற்குள்ளே நம்பிள்ளை தாமே தோழப்பருடைய திருமாளிகையேற வந்திருந்த வேரற்ற மரம் போலே விழுந்து தெண்டனிட்டு, தேவரீருடைய திருவுள்ளம் கன்றும்படி வர்த்தித்த அடியேனுக்கு தேவரீருடைய க்ஷமையல்லது புகலில்லை யென்று பலவுமருளிச் செய்து க்ஷாமணம் பண்ணிக்கொண்டார். அப்போது தோழப்பர் அந்த மஹாகுணத்திற்கு வியந்து 'ஸ்வாமிந்! தேவரீரை இத்தனை நாளும் சிறிது பேர்களுக்கு ஆசார்யராக எண்ணியிருந்தேன்; இப்போது லோகத்துக்கெல்லாம் ஆசார்யர் தேவரீர் என்று திண்ணமாகக் கொண்டேன்'' என்றார். அதுமுதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்யரென்று திருநாமம் வழங்கிவந்தது: ''துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம் முகப்பால், என்னவுலகாரியனோ வென்றுரைக்க, பின்னை யுலகாரியனென்னும் பேர் நம்பிள்ளைக்கோங்கி, விலகாமல் நின்றதென்றும் மேல்'' என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரம் இங்கே அநுஸந்திக்கத்தகும்

இப்போராசிரியரின் திருவடிகளில் பணிந்து அல்லும் பகலும் ஸகலார்த்தங்களையுங்கேட்டுத் தரித்த வடக்குத் திருவீதிப்பிள்ளையும் பெரியவாச்சான்பிள்ளையும் உலகுக்குச் செய்திருக்கும் உபகாரம் கைம்மாறற்றது. ... ...

எச்சரிக்கை

ஐப்பசி மாதத்து ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் (பக்கம் 564) ஸ்ரீமதுராந்தகம் வித்வானுடைய கைவல்ய விவேசனம் என்கிற சுவடிக்கும் நமது ஸ்ரீராமாநுஜன் பத்ரிகைக்கும் விமர்சனங்கள் கார்த்திகை மாதத்து ந்ருஸிம்ஹப்ரியாவில் வெளியிடப் போவதாகக் கண்டிருக்கிறது. மதுராந்தகம் ஸ்வாமி வெளியிட்ட விவேசனச் சுவடிக்கு அது வெளிவந்த அன்றே அடுத்த க்ஷணத்திலேயே அதற்கு நமது மறுப்பு ஸ்ரீகோசம் ஸ்ரீராமாநுஜனில் வெளிவந்துள்ளதை உலகம் கண்டு களித்திருக்கின்றது. அதற்கும் விமர்சனம் அடுத்த இதழில் வெளிவரப்போவதாக ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா தெரிவித்துள்ளது. அந்த விமர்சனத்தோடு கூடவே, இந்த ஸ்ரீராமாநுஜனில் வெளிவருகின்ற ந்ருஸிம்ஹப்ரியாஸமீக்ஷா என்கிற ஸ்ரீகோசத்திற்கும் விமர்சனம் அவசியம் வெளிவரவேணும். ''இற்பிறப்பறியீர் இவரவரென்னீர் இன்னதோர் தன்மையென்றுணரீர், கற்பகம் புலவர் களைகணென்றுலகில் கண்டவா தொண்டரைப் பாடும்'' என்ற திருமங்கைமன்னன் பாசுரத்தை நினைவூட்டும் வார்த்தைகள் சிலவற்றை இங்கு ந்ருஸிம்ஹப்ரியா எழுதியுள்ளது. அவருடைய சுவடிகளுக்கு (ஒன்று விடாமல்) நாம் எழுதி வெளியிட்டுள்ள ஸ்ரீகோசங்களினால் அவருடைய பாண்டித்யம் எத்தகைத்து? என்பதை உலகமறிந்திருக்கின்றது. போனது போகட்டும். இப்போது இதில் வெளிவருகின்ற ந்ருஸிம்ஹப்ரியா ஸமீக்ஷா ஸ்ரீகோசத்திற்கு கோபதாபங்களின்றியும் உபாலம்பலவலேசமின்றியும் அந்த ஸ்வாமி ''ஸமீக்ஷா பர்யவேக்ஷணம்'' வெளியிட்டருள்வரேல், அவரை நாம் சதுர்வேதசாஸ்த்ரபண்டிதராகப் போற்றி 'மாகந்தநீர்கொண்டு தூவி வலஞ்செய்து கைதொழுதுய்வோமென்பது திண்ணம். அஸ்த்ரத்தே அகாண்டே அவரைத் தூங்கவைப்பதற்கென்றே அவருடைய சுவடிக்கு வெற்றியை ஸம்பாதித்துக் கொடுக்க நினைக்கிறதுபோலும் ந்ருஸிம்ஹப்ரியா. ''உத்ததம் பதமவாப்ய யோ லகுர் ஹேலயைவ ஸ பதேத்'' என்ற (குவலயாநந்தோதாஹ்ருத) சிசுபாலவத ச்லோகத்தையே வித்வான்கள் ஸ்மரிப்பர்கள். ...

வேத ஸ்வரவிசாரப் பகுதி

நைத்திரீயஸம்ஹிதையில் லக்ஷக்கணக்காக ஓதப்பட்டுவரும் பதங்களில் பல பதங்களின் ஸ்வரம் ஓரிடத்திலும் மாறுபடாமல் எங்கும் ஒரேவிதமாக ஓதப்பட்டு வருவதையும், பல பதங்கள் [illegible] மடைந்துவருவதையும், அப்படி பேதமடைந்து வருவது காரண விசேஷத்தோடு கூடியதே யொழிய நிஷ்காரணமன்று என்பதையும் நிரூபித்து வருவது அடியேனொருவனே செய்துவரும் காரிய மென்பதை வைதிகவுலகம் அறிந்தேயுள்ளது. இதைப்பற்றி ஒவ்வொரு மாதத்திலும் ஸ்ரீராமாநுஜன் வெளிவந்தவுடனே பல வைதிகர்கள் தங்கள் தங்கள் ஸந்தோஷத்தை மறைத்து வைத்துக்கொள்ளாமல் — மனச்சாட்சியை வஞ்சிக்காமல் தெரிவித்து வருகிறார்கள். அநேக பிருதாவளீபூஷிதராய் உபந்யாஸ ப்ரவீணராய் ஸலக்ஷணகனபாடி யென்று புகழ்பெற்றவராய், விசேஷித்து என்னிடத்திலும் என்னுடைய வியாஸங்களிடத்திலும் [illegible] விளங்கும் கமலாபுரம். உ. வே. K. V. ஸந்தானகோபாலாசாரியர் 20—10—75ல் ஹைதராபாத் நகரத்திலிருந்து (இது பற்றி) மிக விரிவாக எழுதியுள்ள ஸந்தோஷாதிசய பரீவாஹ பத்ரிகை அவசியம் வெளியிடத்தகுந்ததாயினும் அவகாசமின்மையால் வெளியிடப்படவில்லை. அடியேனுடைய வேதப்பகுதி வியாஸங்கள் அபூர்வமானவை யென்பதையும் மிக மிக ஆவஶ்யகங்களானவை யென்பதையும் மாத்ஸர்ய மற்றவர்கள் மதித்துள்ளார்களென்று மகிழ்கிறோம்.

இப்போது, [illegible], [illegible], [illegible] என்கிற மூன்று பதங்களின் ஸ்வரவிசேஷத்தைப்பற்றின விமர்சத்தை வெளியிடுகிறேன். ([illegible]) என்பது ஸவிஸர்கமான பதம். [illegible] வடிவம். ([illegible]) என்கிற [illegible] பதம் ஸம்புத்தி. ([illegible]) என்கிற பதம் ப்ரதமாவிபக்தியிலும் ஸம்புத்தியிலும் [illegible] வருவது. இவற்றுள் ([illegible]) என்கிற பதம் எங்கும் ஒரே ஸ்வரமாகத்தான் வரும். ஓரிடத்திலும் ஸ்வரபேதம் கிடையாது. *[illegible]* [illegible] காணலாம். எங்கும் [illegible] மேயிது. ([illegible]) என்கிற [illegible] பதம் இருவகையான ஸ்வரத்தோடு ஓதப்பட்டு வருகின்றது. [illegible] பலவிடங்களில். [illegible] [நிஹததமாக]ப் பலவிடங்களில். இது ஸம்புத்தியாகையாலே நிஹததமாக [ஸர்வாநுதாத்தமாக] வருவது இயற்கை. [illegible] மென்றபடி. *[illegible]* [illegible]* இத்யாதியாகப் பல விடங்கள் காணலாம். இந்த பதம் வாக்யத்திலோ [illegible] வந்தால் அவசியம் ஸ்வரம் மாறி விடும். நிஹதமாயிருக்குமிருப்பைவிட்டு [illegible] ஓதப்படும். *[illegible]* *[illegible]* இத்யாதி காண்க.

இனி ([illegible]) என்கிற பதத்தையெடுத்துக் கொள்வோம். இப்பதம் [illegible] மூன்று வகையான ஸ்வரங்கள் பெற்றுவரும். [illegible] ஆகில், ([illegible]) என்கிற ஏகவசநபதம் போலவே நியமேந [illegible] மாகவே

வரும். *[illegible]* *[illegible]* *[illegible]* *[illegible]* இத்யாதி பரஸ்ஸதஸ்தலங்கள் காண்க. இப்பதமே வாக்யத்திலோ வாக்ய [illegible] யிலோ ஸம்புத்தியாக வந்தால் ஸ்வரம் மாறிவிடும். *[illegible]* இத்யாதிகள் காண்க. இங்கு [illegible] மாகவுள்ளது. இதே பதம் [ஸம்புத்தியென்கிற ருகாரம் மாருமல்] வாக்ய [illegible] மாகில் நியமேந நிஹதமாகும். *[illegible]* *[illegible]* இத்யாதி ஸ்தலங்கள் காண்க. ஆக, ([illegible]) என்பதற்கு ஒரே ஸ்வரம் நியதம் [illegible]! என்பதற்கு இரண்டு ஸ்வரங்கள். ([illegible]) என்பதற்கு மூன்று ஸ்வரங்கள்—என்று நிரூபித்தாயிற்று. [illegible], [illegible] என்கிற பதங்களைப்பற்றி அடுத்த இதழில் நிரூபிக்கக் காணலாம். ....

பூர்வாசார்ய திவ்யஸூக்திப் பகுதி

— தத்வ முக்தாகலாப மங்கள ச்லோகம் —

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[நேற்று ஆவணிமாதத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி அஹோபில மடாதிபதி ஸ்ரீ அழகியசிங்கர்க்கு ஸ்ரீ காஞ்சியில் நடந்த பதாபிஷேகமஹோத்ஸவத்தின் சார்பாக நடைபெற்ற மாலோல வித்வத் ஸதஸ்ஸில் அடியேன் ஸ்ரீ ஸ்வாமி நியமனங்கொண்டு ஒன்பதாவது நாள் பிற்பகலில் இரண்டு மணிகாலம் உபந்யஸித்த இந்த ஶ்லோகத்தின் பொருளை இங்கு மிகமிகச் சுருக்கி யெழுதுகின்றேன்.]

— முந்துற முன்னம் இந்த சுலோகத்தைத் தமிழ்ச் செய்யுளாக மொழிபெயர்த்து விஜ்ஞாபித்தேன் ; அச்செய்யுள் வருமாறு ;—

கமலமாமாதின் குவளையொண்மலரேய் கண்களிற் காட்சியாற் கிளர்ந்து
கமலமாங்கொப்பூழ்மிசையினிர் களிவண்டொளிகள்தாங் கைகொடுத்துதவக்
கமழுநற்றுளபமாலையின் சவியின் கனத்தினால் கனத்ததாய் விளங்கும்
கமலைநாதன்றன் யமுனையினெளிகொள் கருமைநம் வறுமையைக் களைக.

(இனி விவரணம்.) சுலோகத்தின் பொருளை விவரித்தால் செய்யுளின் பொருளும் தன்னடையே விவரித்ததாகு மாதலால் சுலோகத்தின் விவரணம் மட்டும் ஈண்டெழுதப்படுகின்றது. [கைடபாரே: வபுஷ: காலிமா அஸ்மாகம் ஸம்பதோகாந் கலயது.] எம்பெருமானுடைய திருமேனியின் கறுப்பு நிறமானது நமக்குச் செல்வங்களை யளித்திடவேணுமென்கிறது. “கண்ணனென்னுங்கருந்தெய்வம் நமக்குச் செல்வமளித்திடுக. என்றே, அவனுடைய கரிய திருமேனி நமக்குச் செல்வங்

கனை அளித்திடுக என்றே ஸாதிக்கலாமாயிருக்க அப்புடைகளில் பணிக்காமல் அப்பெருமானது திருமேனியின் கறுப்பு நிறம் நமக்குச் செல்வமளிக்கவேணு மென்றது கவிகளின் சமத்காரரீதியிற் சேர்ந்தது என்றுமட்டுங் கொள்ளலாகாது, காலிமா என்னும் சொல்லின் பொருளான கறுப்பு நிறம் நிருடலக்ஷணையினால் எம்பெருமானுடைய பரத்துவத்தைச் சொல்லி நிற்கும். ஆழ்வார்களும் ஆசாரியர்களும் திருமேனி நிறங்கொண்டே பரமனுடைய பரத்வத்தை ஸாதிக்கக் காண்கிறோம். ஆழ்வார்களுள் முதல்வரான பொய்கையாழ்வார் தமது திருவந்தாதியில் (5) "அரன் நாரணன் நாமம் ஆன் விடை புள்ளூர்தி, உரை நூல் மறை, உறையுங்கோயில்—வரை நீர், கருமமழிப்பளிப்பு கையது வேல் நேமி, உருவமெரி கார் மேனி யொன்று" என்றும், கடைக்குட்டியான திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் (2.) "ஒருருவம் பொன்னுருவமொன்று செந்தீ ஒன்றுமா கடலுருவமொத்து நின்ற, மூவுருவுங்கண்டபோது ஒன்று ஆஞ்சோதி முகிலுருவமெம்மடிகளுருவந்தானே" என்று மருளிச் செய்தனர். திருப்பாணாழ்வார் "ஒரெழில் நீலமேனியையோ! நிறை கொண்டதென்னெஞ்சினையே" என்கிறார். இங்ஙனே ஒவ்வோராழ்வாருடையவும் பாசுரங்களைப் பன்னியுரைக்குங்காற் பாரதமாம். ஆசாரியர்களில் ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நத்தில் "ஃஸ ஶ்ஶஷ அரிசெடா வாசஜூ ஃஜூஃவெஸ ந ...." என்று நிறத்தையும் வரஸஃஷண ஃயகங்களில் ஒன்றாகக் காட்டியுள்ளார். கூரத்தாழ்வானும் ஸ்ரீ வைகுண்டஸ்தவத்தில் "ஸஃவரி யா வாசயா வாசெண யாதூ....ஃஃதெ ஸஃஃ விவஃஃத ஸஃஃஃஸஃ" என்றருளிச் செய்தனர். ஆகவே ஸூக்துதஶ்லோகத்தில் (காலிமா) என்றதற்குப் பரத்வமென்றே பொருள் கொள்ளத் தட்டில்லை. கறுப்பு என்பதற்குப் பரத்வம் பொருளென்று எந்த நிகண்டில் கூறியுள்ளதென்று ஆக்ஷேபிக்க வருவார்க்கு நாம் கூறுவதொன்றுமில்லை. ஸ்வாமி தாமே ஃயாபாககத்தில் ஃயாளுவான பரம புருஷனுக்குச் சொல்லவேண்டுவதையெல்லாம் ஃயா குணத்தினிடத்திலேயே ஏறிட்டுச் சொல்லுவதை இங்கு ஒருவாறு நினைப்பது. இனி இந்த கறுப்பு நிறத்திற்கு இடப்படுகிற நான்கு விசேஷணங்களும் எம்பெருமானுடைய பரத்துவத்தையே மூதலிப்பனவாகும்.

[லக்ஷ்மீநேத்ரோத்பல ஸ்ரீ ஸததபரிசயாத் ஏஷ ஸம்வர்த்தமாந:] எம்பெருமான் ஸ்ரீயபதியாகையாலே பராத்பரன்—என்பது இந்த விசேஷணத்தின் பரமதாத்பர்யம். "மையார் கருங்கண்ணி கமல மலர்மேல் செய்யாள், திருமார்பினில் சேர் திருமாலே!" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தையும், "வண்டார் பூமாமலர் மங்கை மணநோக்கமுண்டானே!" என்கிற பெரியதிருமொழிப் பாசுரத்தையும், "ஃஃஃஃஃஃஃஃஃ ஃஃஃஃஃஃ ஃஃஃஃ ஃஃஃஃஃஃ" என்கிற பட்டர் ஸ்ரீ ஸூக்திகளையும் இங்குப் பரக்க உபந்யஸித்தேன். [நாபீ நாலீகரிங்கத் மதுகர படலீ தத்தஹஸ்தாவலம்ப] "நாட்டைப் படையென்றயன்முதலாத் தந்த நளிர்மாமலருந்தி வீட்டைப் பண்ணி விளையாடும் விமலனே பராத்பரன் என்பது இந்த விசேஷணத்தின் பரமதாத்பர்யம். நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் "எம்பெருமானுடைய திருநாபிக்கமலமே அவனுடைய பரத்துவத்தை ஸ்தாபிக்கின்றது" என்ற ஒரு பாசுரமருளிச் செய்கிறார்— "முதலாந்திருவுருவம் மூன்றென்பர், ஒன்றே முதலாகும்

மூன்றுக்குமென்பர்-முதல்வா!, நிகரிலகுகாருருவா! நின்னகத்த தன்றே. புகரிலகு தாமரையின் பூ * என்பது: அப்பாசுரத்தை பட்டர் [illegible] மொழி பெயர்த்து ஸ்ரீரங்கநாதனுடைய திருநாபிக் கமலத்தை வருணிக்கிறார்—* [illegible] [illegible] [illegible] என்பது அந்த ஶ்லோகரத்நம். பரமனுடைய பாரம்யத்தை ஸித்தாந்தம் செய்வதற்கு அவனுடைய திருநாபிக் கமலமொன்றே போதுமென்பது நம் ஆழ்வாராசாரியர்களின் திருவுள்ளம். நம்மாழ்வார் திருவாய்மொழியைத் தலைக்கட்டும் போது * மேவித் தொழும் பிரமன் சிவனிந்திரனாதிக்கெல்லாம், நாபிக்கமல முதற்கிழங்கே * என்றருளியது தலையான பிரமாணம். இதையெல்லாமுட்கொண்டே இங்கு * நாபீநாளீகரிங்கதித்யாதி விஶேஷணமிட்டருளினபடி.

[அவிரலதுலஸீதாமஸஞ்ஜாதபூமா] எம்பெருமானுடைய பாரம்யஸ்தாபகங்களான லக்ஷணங்களில் திருத்துழாய் மாலையுடைமையும் ஒன்றாயிருக்குமாயிற்று. அருளிச் செயல்கள் பெரும்பாலும் திருத்துழாய் மயமாயிருக்கும். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் * வக்ஷஸ்ஸ்தல்யாம் துலஸிகமலா கௌஸ்துபைர் வைஜயந்தி ஸர்வேஶத்வம் கதயதி [illegible] * என்கிறார். திருமார்பில் திருத்துழாய், பிராட்டி, கௌஸ்துபம், வைஜயந்தி ஆகிய இந்நான்கும் எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வஸ்தாபகங்களென்கிறார். திருவாய்மொழியில் (8—9) * கருமாணிக்கமலைப் பதிகம் வெகு விலக்ஷணமாக அமைந்துள்ளது; ஆழ்வாராகிற கன்னிகைக்கு விவாஹப்ரயத்நம் நடக்கிறது; அப்போது தோழியானவள் இவளுக்கு ஏற்கெனவே விவாஹம் நடந்துவிட்டாப் போலிருக்கிறதே, நீங்கள் புதிதாக முயற்சி செய்வது தகுதியன்றே என்ன; எங்களுக்கொன்றும் தெரியாமல் விவாஹம் எப்படி ஆய்விடுமென்று அன்னைமார் கேட்க, அப்போது தோழியின் பேச்சு—* அன்றி மற்றோருபாயமென்? இவளந்தண்டுழாய் கமழ்தல்....குட்ட நாட்டுத் திருப்புலியூர் நின்ற மாயப்பிரான் திருவருளாமிவள் நேர்பட்டதே * என்று சொல்லித் தலைக்கட்டுகிறாள். திருத்துழாயின் நறுமணம் எம்பெருமானிடத்தில் மட்டுமன்று; எம்பெருமானோடு அணைந்தவர்களிடத்திலும் கமழும்; * வெறிகொள் துழாய்மலர் நாறும் வினையுடையாட்டியேன் பெற்ற * இத்யாதிகளுங்காண்க. * தாராயினுந்தழைபாயினும் தண்கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்ற மண்ணாயினுங்கொண்டு வீசுமினே * * தன் மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான் * இத்யாதிகள் பலபல காண்க. ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் (9-9) * கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில் கொன்றைகள்மேல் தூங்கு பொன்மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன் * என்றருளிச் செய்துள்ள பாசுரத்தை ப்ராஸங்கிகமாக வெடுத்து விரித்துரைத்தேன் ஸ்ரீஸூக்தியில். இப்பாசுரத்தின் கருத்து மிக ஆழ்ந்தது; திருமாலிருஞ்சோலை மலையில் கொன்றைமரங்களின்மீது தொங்குகின்ற கொன்றைப் பூமாலைகளோடொப்ப நானும் தூங்குகின்றேனென்று கூறுகின்ற ஆண்டாளுடைய உட்கருத்தை மறிந்து அருளிச் செய்த ஆசாரியர்களின் மேதையே மேதை!. திருமாலிருஞ்சோலை மலை

[illegible] ஸாத்விக புருஷர்கள் ஏறிப் போவர்களே யன்றி ராஜஸரும் தாமஸருமான தேவதாந்தர பக்தர்கள் ஏறிப் போகார்கள். அத்திருமலையில் கொன்றைகள் மிக [illegible] பூத்துக்கிடக்கின்றன. அவை சிவனை வழிபடுமவர்களுக்கே பயன்படும்; திருமாலிருஞ்சோலையழகரோ திருத்துழாய் பரிமாறுந் தெய்வம்; கொன்றைப் பூ அவர்க்கும் பயன்படா; பயன்படுத்தக் கூடிய சைவர்களோ அங்கு வருவதில்லை; ஆனால் அம்மலர்கள் அங்கே பூத்து அங்கே வீழ்ந்தொழிவதன்றி வேறொன்றுக்கும் பயன்படாவே. அவற்றின் ஜன்மம் எப்படி வீணோ, அப்படியே என் பிறவியும் பழுதாயொழிந்ததே! என்று நிர்வேதம் காட்டினபடி. இப்பாசுரம் உள்ளுறை பொருள் வகையில் திருத்துழாயின் பெருமையைக் காட்டுதற்கே தோன்றின தென்னலாம்.

[காலிந்திகாந்திஹாரி] இது கடைசியான விசேஷணம். எம்பெருமானுடைய திருமேனியின் கருமை அநவரதம் யமுனையாற்றில் குடைந்தாடியதனாலும் [illegible] பெற்றது—என்பது ஸாமாந்யமான பொருள். எம்பெருமானுடைய பரத்துவம் யமுனைக் கரையிலே மிகமிகப் பொலிந்தது என்பதே முக்கியமாக விவக்ஷிதம். விரஜையாற்றின் கரையிலே இனிது வாழ்ந்த பரம புருஷன் நித்ய விபூதியிருந்து லீலாவிபூதிக்கு எழுந்தருள நினைத்தபோதே அந்த விரஜை இங்கே ஸரயுவாகவும் யமுனையாகவும் வடிவெடுத்தது. ராமாவதாரம் ஸரயூ நதிக்கரையிலேயானாலும் பெருமாள் ஸரயுவிலே திருவடியை வைத்து ஆசமனம் செய்ததாகக் கூடத் தெரியவில்லை. அவதார ஸமாப்தியில்தான் ஸரயுவில் (குப்த [illegible]) இறங்கியதாகக் காண்கிறோம். யமுனையின் பாக்கியமோ நிகரற்றது. கண்ணபிரான் யமுனைத்துறைவனென்றே பேர்பெற்றான். * யமுநாஸாக்ஷிக யௌவநம் * "காளிந்திரஸிகாய" இத்யாதிகள் தேசிகனுடைய திவ்யஸூக்திகள். * யமுனைக் கரைக்கென்னையுய்த்திடுமின் * என்றுளாண்டாள். "சரயுக் கரைக்கென்னையுய்த்திடுமின்" என்று சொன்னாருமில்லை. அது நிற்க கண்ணபிரான் யமுனைக் கரையில் பன்னிரண்டாண்டு வாழ்ந்திருந்து செய்த செய்கைகள் பெரும்பாலும் அவனுடைய பரத்துவத்தைக் காட்டுமவையேயாம் * மச்சொடு மாளிகையேறி மாதர்கள் தம்மிடம்புக்குக் கச்சொடுபட்டைக் கிழித்துக் காம்புதுகிலவை கீறி நிச்சலுந்தீமைகள் செய்வாய் * என்றும், * எண்ணெய்க் குடத்தையுருட்டி இளம்பிள்ளை கிள்ளியெழுப்பிக், கண்ணைப்புரட்டி விழித்துக் கழகண்டு செய்யும் பிரானே * என்றும் சொல்லும்படியாகச் செய்த சிறுச் சேவகங்களில் என்ன பரத்துவம் பொலியும்? என்று கேட்டுவிடவேண்டா. கண்ணன் உரலினிடையாப்புண்டு அழுதேங்கியபோது பலபல முனிவர்கள் வந்து சூழ்ந்து படுகாடு கிடந்து * [illegible] * என்று சொல்லி வணங்கினார்களாம்; அவர் [illegible] பரத்துவத்தையறிய நாமார்! * [illegible] [illegible] (பாகவதம்) என்ற குறத்தியைக் கேட்டாவது உணர்க. கண்ணபிரான் [illegible] யமுனையிலே காட்டின பரத்துவம் எதுவென்றால் * [illegible]

யபௌ * என்னும்படியானதேயாம். * [illegible] * என்ற யாதவாப்யுதய ஸ்ரீ ஸூக்தியுங் காண்க.

ஆக இத்தகைய பெருமை வாய்ந்த [கைடபாரே: காலிமா] எம்பெருமானது கருநிறமானது. [அஸ்மாகம் ஸம்பதோகாங் கலயது] நமக்கு ஸம்பத் ஸம்ருத்தியை யுண்டாக்குக. இதை மொழி பெயர்த்த அடியேனுடைய செய்யுளில் *கருமை நம் வறுமையைக்களைக * என்றுள்ளது. இவற்றல் ஏராளமாகப் பணம் கிடைக்க வேணுமென்று பிரார்த்திக்கிறபடியன்று. ஈசாவாஸ்யோபநிஷத்தின் கடைசிருக்கான *அக்நே நய ஸுபதா ராயே அஸ்மாந் * என்றதில் (ராயே) என்பதை விவரிக்குமிடத்து தேசிகன் * [illegible] * என்றெடுத்துக் காட்டியுள்ள சுலோகத்தை நினைப்பது. குறளாசிரியர் * நுண்ணுணர்வின்மை வறுமை. அஃதுடைமை பண்ணப்பனைத்த பெருஞ் செல்வம் * என்கிறர். அத்தகைய ஸம்பத்தையே ஸ்வாமி விரும்புகிறர்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸமீக்ஷா

(பத்ராதிபர் P. B. A.)

நிகழும் ராக்ஷஸஸ்ஸூ ஐப்பசி மாதத்து ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ஸஹ்ருதயஸஹ்ருந்மணியான ஸ்ரீமதுபயவே. திருக்கள்ளம்ஸ்வாமி "எம்பெருமானின் லீலாவிநோதம்" என்னும் மகுடம் புனைந்த ஒரு கட்டுரையை வெளியிட்டிருப்பது அனைவருமறிந்ததே. அதைப் பலரும் வாசித்திருப்பர்கள். அதில் முடிவிலுள்ள ஒருவாக்யத்தை முந்துற முன்னம் எடுத்துக் காட்டுகிறேன். (அதாவது)

> "விவாதத்தை வளரவொட்டாமல் தடுக்கவேண்டிய பொறுப்பு முழுக்க முழுக்க ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கரம் ஸ்வாமிக்கே உள்ளது என்பதை ஸவிநயம் தெரிவித்துக்கொள்கிறேம்" என்பதாம்.

இந்த முடிவுவாக்கியத்தை மட்டும் காட்டினல் போதுமா? போதாது. இந்தக் கட்டுரை இரண்டே பக்கமுள்ளது; முதற் பக்கம் முழுவதையும் உதாஹரிக்கிறேன்.

"ஸ்ரீ ராமாநுஜ தர்சனத்தில் வடகலை தென்கலை என்ற இரண்டு பிரிவுகள் சில நூற்றண்டுக் காலமாக இருந்து வருகின்றன. இந்த இரண்டு ஸம்பிரதாயங்களுக்குள் சுமார் பதினெட்டு விஷயங்களில் அபிப்பிராயபேதம் இருக்கிறது. தங்கள் கொள்கைதான் சரி என்று இரு தரப்பினரும் பல காலமாக வாதித்து வருகின்றனர். இதனல் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. யாரும் தங்கள் கொள்கையை விட்டுக்கொடுக்கவும் ஸித்தமாக இல்லை. இவர்கள் சண்டையைக் கண்டு மதாந்தரஸ்தர்கள் பரிகசிப்பதுதான் கைகண்ட பலன். தங்கள் ஸம்பிரதாயத்தி

றும் ஸம்பிரதாயக் கொள்கைகளிலும் அசஞ்சலமான பற்று இருப்பது மிகவும், அவசியமே. தங்கள் ஸம்பிரதாயக் கொள்கைகளைப் பத்திரிகைகளின் மூலம் பரப்பு வதும் அத்யாவச்யகமானதே. ஸ்ரீ வைஷ்ணவத்துக்குப் பலரால் பல பிரகாரமாகச் சோதனை ஏற்பட்டு வரும் இந்தச் சமயத்தில் ஸஹோதர ஸம்பிரதாயங்கள் ஒன்றை ஒன்று தாக்கிக்கொண்டு மேலும் அதைச் சோதனைக்கு இடமாக்குவது யுக்தமா? தேசிக ஸம்பிரதாய பத்திரிகைகள் தேசிகனுடைய ஸித்தாந்தங்களை விரிவாக எடுத்துரைக்கலாம். சரணகதி செய்தால்தான் பகவான் மோக்ஷம் கொடுப்பான் என்பதை நன்றாக விவரிக்கலாம். ஆனால் பிள்ளைலோகாசார்யர் நிர்ஹேதுக கிருபையினாலேயே பகவான் மோக்ஷம் அளிப்பதாகக் கூறுகிறார். அது தவறு என்று கண்டிக்கக்கூடாது. இதே மாதிரி தென்னாசார்ய ஸம்பிரதாயத்தைச் சார்ந்த பத்திரிகைகள் கைவல்ய விஷயத்தில் தங்கள் ஆசார்யர்களின் தீர்மானத்தை நன்றாக விளக்கிக் கூறலாம். ஆனால், தேசிகன் ஸாதித்திருப்பது சரியன்று என்று கண்டிக்கக்கூடாது. விவாதக்ரஸ்தமான மற்ற விஷயங்களிலும் இதே நிலையைத் தான் கடைப்பிடிக்க வேண்டும். 'ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா' இதைத்தான் கடைப் பிடித்து வந்திருக்கிறது. ஆனால், தென்னாசார்ய ஸம்பிரதாயப் பத்திரிகையான 'ஸ்ரீ வைஷ்ணவஸுதர்சனம்' கைவல்ய விஷயத்தில் ஸ்ரீ தேசிகனுடைய நிர்ணயம் சரியன்று என்று குறிப்பிட்டிருந்தது. இதைக்கண்ட ஒரு பெரியவர் நமது பத்திரி கைக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதமும், அதற்கான பதிலும் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா'வில் பிரசுரமாகியுள்ளன. அடியேனுடைய பதிலில் 'மேலும் இம்மாதிரி விஷயங்கள் பிரசுரிக்கப்படுமானால் நமது பத்திரிகையும் தான் செய்யவேண்டியதைச் செய்யத் தயங்காது' என்றே குறிப்பிட்டிருக்கிறேன். நடந்த விஷயத்தில் சர்சரவுக்குக் கிளம்புவதாகக் கூறவில்லை."

இதற்குமேல் இரண்டாவது பக்கத்திலிருந்தும் சிலவரிகளை உதாஹரிக்கிறேன்.

"விவாதக்ரஸ்த விஷயங்களில் ஸ்ரீ தேசிகனுடைய நிர்ணயமே சரியானது என்பதை நமது பத்திரிகை நிலைநாட்டும். பாதுகை, ஸேவா, புனர்வஸு முதலிய தேசிக ஸம்பிரதாயப் பத்திரிகைகளும் தங்கள் கடமையை உணர்ந்து, செய்ய வேண்டியதைச் செய்யத் தயங்கா என்று நம்புகிறோம். 'கைவல்ய விஷயத்தில் ஸ்ரீ தேசிகனுடைய நிர்ணயமே யுக்தமானது' என்பது முதலில் ஸ்தாபிக்கப்பெறும். ஸ்ரீ ஸுதர்சனம் தன் கருத்தை மாற்றிக்கொண்டால் ஸ்ரீப்ரியா விவாதத்தில் தலை யிடாது. இல்லையென்றால் எத்தனை வருஷங்களானாலும் நம் பத்திரிகை விவாதத் தைத் தொடர்ந்து நடத்தும். விவாதத்தை ஆரம்பித்து வைத்தவர்கள்தாம் அதை முடிவுக்கும் கொண்டுவர வேண்டும்." [ஆக இவ்வளவும் திருக்கள்ளம் ஸ்வாமி வாசகங்கள்.]

ஸ்ரீமத் திருக்கள்ளம் ஸ்வாமி எழுதியுள்ளவற்றுள் யதார்த்தமும் விலையுயர்ந் ததுமான வார்த்தை ஒன்றே (அதாவது) நிஷ்கர்ஷ்டும் [illegible] ஸம்ப்ரதாய [illegible] என்கிற தேசிக திவ்யஸூக்தியை யெடுத்துக்காட்டி ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளத்தை நிஷ்கர்ஷித்துக் கூறவல்லவர் தேசிகன் தவிர வேறு எவருமில்லை என்றறுதியிட்டிருப்பது. இது ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் என்று எத்தனை

தடவை சொன்னாலும் மிகையாகாது இந்த வார்த்தையில் ஸந்தேஹ விபர்யயங்கள் கொள்பவர் ஸ்ரீ வைஷ்ணவ ஸந்தானத்தில் ஒருவரு மிருக்கமாட்டார்; இருந்தால் அவர் ஸ்ரீ வைஷ்ணவரல்லர். "மானிடவரல்லரென்று என்மனத்தே வைத்தேனே" என்ற திருமங்கைமன்னன் திருவாக்கின்படியும் கூறுவேன்.

இந்த ப்ரகரணத்தில் பலபல விஷயங்கள் விமர்சிக்கவேண்டியவை-விளக்கவேண்டியவை யுள்ளன. விரிவுக்கு அஞ்சாமல் விளக்குகிறேன் ஸ்ரீ தேசிகனுக்கு எழுநூறாண்டு நிறைவு கொண்டாட்டம் ஸமீபத்தில் விசேஷமாக நடந்திருப்பதால் தேசிகனுடைய காலம் அனைவர்க்கும் தெரிந்திருக்கிறது. அந்த காலம் முதற்கொண்டு தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளைக் கையாண்ட ஆசாரியர்களும் வித்வான்களும் தென்கலை ஸம்பிரதாயத்தில் எத்தனைவர்? என்பதற்கு ஒரு ஜாபிதா எடுக்கவேண்டும். கேண்மின். தேசிகனுடைய ஸமகாலஸ்தரும் தேசிகனை விட பிராயத்தில் மூத்தவருமான வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர் தாம்பணித்த தத்வதீப தீபப்ரகாஶ நூல்களில் தேசிக ஸூக்திகள் பலவற்றைக் கையாண்டிருக்கிறார். தேசிகன் பரமபதித்த வருஷத்திற்கு அடுத்த வருஷத்தில் திருவவதரித்தவரான மணவாளமாமுனிகள் தம்முடைய வியாக்கியான க்ரந்தங்களில் தேசிக ஸூக்திகளைக் கையாண்டிருக்கிறார். (விளக்கம்.) ரஹஸ்யத்ரய ஸாரத்திலிருந்து பல வாக்யச்ரேணிகள்; "ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ" இத்யாதி ந்யாஸ விம்ஶதி ச்லோகம் பூர்த்தியாக. தத்வமுக்தாகலாபத்திலிருந்து "[illegible]" என்கிற ச்லோகவண்டம். இத்யாதி .... மணவாள மாமுனிகளுக்குப் பிறகு சோளஸிம்ஹபுரம் தொட்டயாசார்ய ஸ்வாமியைப் பற்றி எழுதவேண்டுமோ? அவர்க்குப் பிறகு ஏறக்குறைய இற்றைக்கு நானூறு வருஷங்களுக்கு முன்பு எழுந்தருளியிருந்தவரும் காஞ்சீபுரம் கீழகோபுரவாசலில் விளங்கும் மடத்திற்கு ஸ்தாபகருமான ஸ்ரீமத் பரமஹம்ஸ. அழகியமணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி பணித்ததும் பகவத்விஷய ஸ்ரீகோஶங்களில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளதும் உத்க்ரந்தங்களில் பரிகணிதமுமான [illegible] த்தின் தொடக்கத்தில் "[illegible]" என்கிற சுலோக முள்ளது. இதன் பொருள் யாதெனில், ஆழ்வான், அவருடைய திருக்குமாரரான பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, மணவாள மாமுனிகள் முதலானோரும், ச்ருதப்ரகாஶிகாபட்டர், நிகமாந்தகுரு, தொட்டயாசார்யர் முதலானோருமான உபயவேதாந்தப்ரவர்த்தகாசார்யர்கள் என்னுள்ளத்துள்ளே உறையக்கடவர்கள் — என்பதாம் .... இந்த ஜீயர் ஸ்வாமிக்குப்பிறகு மைஸூர் மண்டயம் அனந்தாழ்வான் ஸ்வாமி தாம்பணித்த வேதாந்தவாதாவளியில் தேசிகஸூக்திகளை அபரிமிதமாகக் கையாண்டிருக்கிறார். இவர்க்குப்பிறகு ஸ்ரீ காஞ்சீபுரியில் அறுபது வருஷங்களுக்கு முன்பு எழுந்தருளியிருந்தவரும் வித்வத் ஸார்வபௌமராய் விளங்கினவரும், குன்றபாக்கம் சீமாச்சார் ஸ்வாமியென்று ஜகத்ப்ரஸித்தருமான ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி தாம் பணித்துத் தாமே அச்சிடுவித்த([illegible])தத்வரத்தாவளீக்ரந்தத்தில் "[illegible]" என்று ச்லோகமிட்டிருக்கின்றார்.

ஆக இப்படி தென்கலை ஸம்ப்ரதாயஸ்தர்கள் அந்நாள் தொடங்கி [illegible] [illegible] தேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளைக் கையாண்டும் அவரைத் துதித்தும் வந் திருக்கிறார்களென்பதை நாமெடுத்துக் காட்டினது போல, ஸ்ரீமத் திருக்கள்ளம் [illegible] எடுத்துக்காட்டவேண்டுவது – வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்களிலும் இங்ஙனே [illegible] – என்பதாம். இதையெடுத்துக்காட்டவேண்டுவது மிகமிக அவசிய [illegible] வடகலை ஸம்ப்ரதாயத்தில் கோபாலதேசிகன் என்றும் திருக்குடந்தை [illegible] என்றும் வழங்கப்பட்டு வருகிற ஒரு ஸ்வாமிக்கு முன்னே – ஆழ்வார்களை [illegible]ஸ்தாபித்தவரோ, ஆளவந்தார் எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் முதலான [illegible] ஸ்தாபித்தவரோ, கிம்பஹுநா? வேதாந்ததேசிகனை ஸ்தா[illegible] ஒரு வ்யக்தியும் கிடையாது. காட்டமுடியாது என்பதை ஆணையிட் [illegible]. காட்டப்புகுந்தால் தேசிகன் திருக்குமாரரான நயினாராசார்ய [illegible] காட்டலாம். இதை நாம் ஆக்ரஹத்தினால் எழுதுகிறோமல்லோம். [illegible]* என்றதையும், *[illegible]* என்றதையுமறிந்திருந்தும் தத்வஜிஜ்ஞாஸயா எழுதின [illegible] வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்கள் புதிதாகத் தோன்றினவர்களென்று நாம் [illegible]கின்றிலோம், நெஞ்சிலுமெண்ணுகின்றிலோம். தேசிகனோடு தொடர்பை [illegible]க்கொண்டது புதிது, 200 – 250 ஆண்டுகட்குப் பிற்பட்ட காலத்தில் என்கி [illegible]. இதை மறுக்கவேணுமானால் – அந்நாள் தொடங்கி இடையறாமல் [illegible] ஆசார்யர்களும் [illegible] வடகலை [illegible] இருந்துவருகிறார்கள் என்று ஆர்ஜவத்துடன் நிரூபித்துக் [illegible]கவேண்டும்.

இந்த ப்ரகரணத்தில் ஒரு இதிஹாஸம் செவிப்பட்டதை உள்ளபடி யெழுது [illegible] திருமலை திருப்பதியில் ப்ரதிவாதிபயங்கரத் திருமாளிகைத் தலைவர் [illegible] வேதாந்தாசாரியர் ஸ்வாமி யென்று ப்ரஸித்தராயிருந்தார். அவர்க்கு [illegible]ராபாத் ப்ராந்தத்தில் சிஷ்யர்கள் விசேஷமாக இருந்தார்கள். [இற்றைக் [illegible] இருக்கிறார்கள்.] அந்த ஸ்வாமி ஹைதராபாத் நகரத்தில் கந்திகல்மெட்டு [illegible]விடத்தில் சக்ரவர்த்தி திருமகன் ஸந்நிதியொன்று ப்ரதிஷ்டை செய்வித் [illegible] அதில் ஆழ்வாராசாரியர்களெல்லாரையும் ப்ரதிஷ்டை செய்வித்திருக்கிறார். [illegible] வேதாந்ததேசிகனையும் ப்ரதிஷ்டை செய்வித்திருக்கிறார். அந்த ஆலயத்திற்கு [illegible]விலாரிகுடி என்று பெயர் வழங்கி வருகிறது. இற்றைக்கும் தக்ஷிணதி [illegible]டன் உத்ஸவாதிகள் விசேஷவைபவமாக நடந்து வருகின்றன. இது [illegible]யிருக்க, காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் பெரிய அனந்தாசாரியர் ஸ்வாமி [illegible] ஸ்வாமி) என்று ப்ரஸித்தராயிருந்த மஹான் ஹைதராபாத் எழுந்தருளின [illegible]தனிகர்களான ஸேட்டுகள் ஸ்வாமிக்கு சிஷ்யர்களாயினர். அவர் [illegible] வேண்டுகோளுக்கிணங்கி (ஹைதராபாதில்) ஸீதாராம்பாக் என்னும் பெரிய [illegible]டத்தில் தேவப்பெருமாள் ஸந்நிதியை ப்ரதிஷ்டை செய்வித்தார். [இந்த [illegible]ந்நிதி இப்போது விசேஷவைபவம் பொலிய நடந்து வருகின்றது.] இதிலும் [illegible] ஆழ்வாராசாரியர்களை யெல்லாம் எழுந்தருளப்பண்ணியிருக்கிறார். அப்போது

தேசிகனையும் எழுந்தருளப்பண்ணுவதைப்பற்றி விசாரம் நடந்ததாம். அஸ்மதாசார்யரான ஸ்ரீ ஜகத்குரு காதிஸ்வாமி ஸாதிக்கக் கேட்டதை எழுதுகிறேன். திருமலை திருப்பதி ஆகிவாஷிலயங்கரம் ஸ்வாமி கந்திகல்பெட்டு என்னுமிடத்தில் ஆலயநிர்மாணம் செய்வித்தபோது வடகலை வகுப்பினர் தேசிகனோடு உறவு கொண்டாடாமலிருந்ததனாலும், அப்போது (நமது நாட்டில்) எந்தக் கோவிலிலும் எவ்விதமான சண்டை சச்சரவும் இல்லாமலிருந்ததனாலும், அப்போது தேசிக விக்ரஹப்ரதிஷ்டைவிசாரமின்றிநடந்துவிட்டதாம். அதற்குப்பின் 75 வருஷகாலம் கழித்து வீதாராம்பாகில் ஸன்னிதி ப்ரதிஷ்டை நடந்ததாம். அப்போது தென்னாட்டில் சில கோவில்களில் தேசிகனைப் பற்றி விசேஷசச்சரவுகள் நீதிமன்றங்களிலுமேறி மிக்க களேபரமாயிருந்ததாம். அதனால் விலை கொடுத்து வினைவாங்க வேண்டாமென்று பெரிய ஸ்வாமி ஸாதித்து விட்டாராம். ஸ்ரீ காதி ஸ்வாமி இச்செய்தியை பாம்பே மகாநகரத்தில் பனஸவாடியில் தாம் திருவேங்கட முடையான் ஸன்னிதி திருப்ரதிஷ்டை செய்தருளினபோது பலருமறிய ஸாதித்தருளினர்.

இக்காலத்தவர்கள் 'இதுவொரு கட்டுக்கதை' என்று ஸஹஸா சொல்லிவிடக்கூடும். அன்னவர்கள் ஒன்று ஆலோசிக்கவேண்டும்; தேசிகனுடைய திருவவதாரஸ்தலமான காஞ்சீபுரியில் விளக்கொளி ஸன்னிதியிலும் தேவப்பெருமாள் ஸன்னிதியிலும் தேசிகனெழுந்தருளியிருக்கச் செய்தேயும், ஸ்ரீரங்கராஜ வீதியில் ஒரு புதிய ஸன்னிதி; விளக்கொளி ஸன்னிதிக்கெதிரேயே வேறொரு ஸன்னிதி; திருவரங்கம் பெரியகோயில், திருவல்லிக்கேணி, ஸ்ரீபெரும்பூதூர், திருவிந்தளூர் முதலானவிடங்களில் ஸன்னிதிக்குள் புராதனதேசிக திவ்ய மங்கள விக்ரஹம் ஸேவைஸாதிக்கச் செய்தேயும் வெளி நிலங்களில் வேறொரு ஸன்னிதி கட்டியிருப்பது எதற்காக? இந்த நிர்மாண ப்ராரம்பம் முதன் முதலாக எந்த வருஷத்தில்?... எவ்வூரில்? இதையெல்லாம் ஆராய்வாரில்லையே. மனத்தை நடுநிலையில் வைத்து விவேகிகளாய் இதை ஆராய்ந்தால், [எதை? இந்த நூதன நிர்மாணங்கள் எதற்காக? எப்போது ப்ராரம்பம் என்பதை], உண்டிராக்கிடக்கும்போது ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்தால், எவ்வளவோ மருமங்கள் விள்ளுமே. நீதி மன்றங்களும் ஸாக்ஷியாக விளங்குகின்றனவே.

இனி, தேசிக க்ரந்தங்களினுள்ளேயிறங்கி ஆராய்வோம். வடகலை வகுப்பில் வித்வான்கள் இல்லாமற்போகவில்லை, விவேகிகள் இல்லாமற் போகவில்லை. ஐம்பது வருடங்களுக்கு மேலாக அடியேன் எழுதிவரும் நூல்களைப் பாராதாருமில்லை. பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் * நிஷூ ரஹோஷுவ .... காதர ஜாமசா ஜாவாடிகி* என்கிறார். நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் "சோம்பாதிப்பல்லுருவையெல்லாம் படர்வித்தவித்தா !" என்றருளிய பாசுரத்தை பட்டர் மொழிபெயர்த்தபடி. ஸஹஸ்ரநாமத்தில் " அநிர்விண்ணநாம பாஷ்யத்திலும் எம்பெருமானுடைய சோம்பலில்லாமையை (ஸஹவஹுணைஷவக்ஷணை) ஸாதிக்கிறார். எம்பெருமானைப் போலே அடியேனும் சோம்பலின்றியெழுதி வருகிறேன். என்றேனுமொரு நாள் பயன்படுமென்கிற நசைதான் எம்பெருமானுக்கும் அடியேனுக்கும். இனியாவது பயன்படவேணும்.

...க்ருதம் நம் திருக்கள்ளம் ஸ்வாமி எழுதியிருப்பதில்—"ஶரணாகதி செய் ...தான் எம்பெருமான் மோக்ஷமளிப்பனென்று தேஶிகன் மதம்; எம்பெருமான் ...து நிர்ஹேதுக க்ருபையினால் மோக்ஷமளிக்கிறானென்று பிள்ளைலோகாசாரியர் ..." என்றெழுதியுள்ளார். இது மருளா? தெருளா? என்பதை உலகமறிய ...டாமா? இந்த ஆக்ஷேபத்தில் இந்த ஒரு விஷயமேயன்று, மற்றும் பல ...களையும் விஜ்ஞாபிக்கிறேன். பிள்ளைலோகாசார்யர் என்ன ஸாதித்திருக் ...ரோ, அதைத்தான் தேசிகன் ஸாதித்திருக்கிறார் என்று கண்ணாடிபோல் காட்டு ...றேன். இந்த்ரஜாலமன்று. ஸாப்புடுவித்யையன்று. கண்ணுடையீர்! ...மின். பிள்ளைலோகாசார்யர் ஸாதித்திருப்பதை நம் திருக்கள்ளம் ஸ்வாமி ...டியாயிற்று. [எம்பெருமான் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே மோக்ஷ ...க்கிறானென்பது ஸ்ரீ லோகாசார்ய மதம்—என்றெழுதியுள்ளார்.] இதைத் ...னே தேசிகன் ஒரு காரிகையாக [அநுஷ்டுப்பாக] ஆக்கி வைத்துள்ளார். "...ணே ஸ்வாமிஸௌஹார்த்தம் ... ...யா ...ஸா: ஸ்வ..." என்பது ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார ஸ்ரீ ஸூக்தி. இதன் ...ருளை நாம் விவரிக்கவேணுமோ? த்ராணே—சேதநர்களை எம்பெருமான் ...க்ஷிக்குமிடத்து என்றபடி. இங்கு ரக்ஷிக்கையாவது ... ...களை ...ஷ்டமாகக் கொடுத்து ஸம்ஸாரிகளின் குடும்ப வாழ்க்கையை நிர்வஹித்துப் ...கையன்று; "நலமந்தமில்லதோர் நாட்டையளித்து உய்யச் செய்கையே ... அதில் [ஸ்வாமித்வம் ஔசித்யம்] ஸொத்துக்கு உடையவன் தன் ஸொத்தை ...க்ஷிக்கக் கடவனாகையாலே ஸர்வஸ்வாமியான எம்பெருமானுக்கு ஸ்வகீய ஸம்ர ...ணம் கடமையாயிற்று. இதற்குச் சில வியாஜங்களைக் கல்பித்து வைக்கிறான் [...ஸாத்யாஸ் ஸஹகாரிண:] பக்தி ப்ரபத்திகளென்று சிலவற்றை வைக்கிறான். [ஸ்வாதந்த்ர்ய விசிஷ்டா விபோ: கருணா ப்ராதாநஹேது:] "விபோ: கருணா ப்ரதாந ஹேது:" என்றால் போதாதோ? கருணைக்கு (ஸ்வாதந்த்ர்ய விசிஷ்டா) என்றொரு ...ஷணமிடவேணுமோ? என்பது இங்கு முக்கியமாக விமர்சிக்கத்தக்கது. ...முக்தி ப்ரஸங்கம் என்றொரு வாதம் கிளம்புமே; அதைச் செம்மட்டியிட்டு ...க்க இந்த விசேஷணம். ஆசார்ய ஹ்ருதயத்தில் "பட்டத்துக்குரிய ஆனையும் ... செய்யுமவை ஆராயாது" என்றுள்ள சூர்ணையை ஆரத்தழுவினபடி. இந்த காரிகையில் "ந்யாஸாத்யாஸ் ஸஹகாரிண:" என்றொன்று இருக்கையாலே ...தைப் பிடித்துக் கொண்டு மெல்லுவர்கள் சிலர். அதைப்பற்றி தேசிகன் ...வு ஸாதித்திருக்கிறார் தெரியுமோ? சோம்பலைவிட்டு எழுதுகிறேனென்று ...ஞை ப்ரதிஜ்ஞை செய்திருப்பதை மறவேல்மின். ஸஹகாரிகள் ஒன்றன்று. ...ண்டன்று; அவற்றைப்பற்றி ஒரே வார்த்தையில் முடித்திட்டார் தேசிகன். ...பனித்தாஞ்ஜநத்தில் "கிம் புநஸ் ஸஹகாரிணாம்" என்றார். இந்த ச்லோகம் ...க்கியமாகத் தெரியுமன்றோ? "இயம் கேவல லக்ஷ்மீபோபாயத்வ ஆத்யாத் ..., ஸ்வஹேதுத்வதியம் ருந்தே—அதற்குமேல் தான் கிம்புநஸ் ஸஹகாரிணாம். ... ஸஹகாரிகளின் ஸமாசாரத்தையும் ஸ்வாமி தாமே பலபல விடங்களில் ...த்தருளுகிறார் ..... இங்கே ஒரு தேசிக திவ்யஸூக்தியைக் காட்டுகிறேன். ...ன்றே போதுமானது தெளிவுபெறுவதற்கு. (அதாவது)

(ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரே) "கர்த்நா சாஸ்த்ரார்த்தவத்த்வாத்" என்கிறபடியே ஜீவனுக்கு கர்த்ருத்வம் ப்ராமாணிகமே யாகிலும் இது பராதீனமுமாய் அல்ப விஷயமுமாய் ப்ரதிஹதி யோக்யமுமாயிருக்கும். ஆகையால் இவன்தான் உபாயாநுஷ்டானம் பண்ணிற்றும் "வரத! தவ கலு ப்ரஸாதாத்ருதே சரணமிதி வசோபி மே நோதியாத்" என்று சொல்லுகிறபடியே அவன் கடாக்ஷமடியாக வருகையால் அவனாலே ப்ரேரிதனாய், அவன் ஸஹகரியாதபோது நீட்ட முடக்கமாட்டாதே அவன் கொடுத்த கரணகளேபரங்களைக் கொண்டு அவன் தான் காட்டின வுபாயத்தை அவன் துணைசெய்ய அநுஷ்டித்து அவனால் கொடுக்கப்படுகிற பலத்துக்கு சாதகம் போலே அண்ணாந்திருக்கிற விவனை ஸ்வாதீந ஸர்வ விஷய அப்ரதிஹத கர்த்ருத்வ முடையவனோடே துல்யமாக இரண்டாம் ஸித்தோபாயமாக எண்ணுகை விவேகியான முமுக்ஷுவுக்கு உசித மன்று .... 'என்னுணர்வினுள்ளே யிருத்தினோன் அதுவுமவனதின்னருளே' யென்றும் "இசைவித்தென்னையுன் தாளிணைக் கீழிருத்துமம்மானே யென்றுஞ் சொல்லுகிறபடியே உபாய பூதனை அவன் செய்விக்கச் செய்கிற வ்யாஜமாத்ரத்தை அவனோடொக்க உபாயமாக எண்ணுகை உசிதமன்றென்று ஏகப் தந்ருக்கு தாத்பர்யம்." இவ்வளவும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரஸ்ரீஸூக்திகள்.

இந்த வாக்யஶ்ரேணியில் ஒவ்வோரெழுத்தும் பொன்னேபோல் போற்றத் தக்கதன்றோ. இதுதான் பிள்ளைலோகாசார்யருடைய மதம்; இதுதான் மணவாள மாமுனிகளின் மதம்; இதுதான் ஸகல தென்னாசாரியர்களின் மதம்; இதுதான் தென்கலையாருடைய மதம். [இதுதான் நிகமாந்த மஹாகுருவின் ஸித்தாந்தம் — என்பதைச் சொல்லவேணுமோ ?] இதுவேதான் வடகலையாருடைய ஸித்தாந்தமும்" என்று நம் திருக்கள்ளம் ஸ்வாமியும் திருவுள்ளமுகந்து எழுதிவிட்டால் சண்டை ஏது? சச்சரவு ஏது? ஆனால் இதாலம்பூதாபஹூர்கள் என்ன ஸாதிக்கப் போகிறார்கள் தெரியுமோ ? இப்போதே தெரிவிக்கிறேன்; நாம் எடுத்துக்காட்டின ஸ்ரீஸூக்திகளை விட்டு விட்டு வேறுசில தேசிகஸூக்திகளைத் தேடி யெடுத்துக் காட்டி "இங்கே இப்படியிருக்கிறது பாருங்கள்; இதைப்பாருங்கள்! இதோ பாருங்கள் !" என்று ஸாதிக்கப்போகிறார்கள். அப்போது, "பரஸ்பரவ்யாஹததமாஷணமுள்ளது" என்று ஸ்தாபிப்பதாகத்தான் தேறும்.

ஸ்ரீ தேசிக ரஹஸ்ய ஜாலங்களில் விரோத பரிஹார மென்பது ஒரு நூல்; அதிலுள்ள சில ஸ்ரீ ஸூக்திகளை யீண்டெடுத்துக் காட்டுகிறேன், காண்மின்;—

"பக்தி போலே ப்ரபத்தியும் சொதிதமான உபாயமாய் நின்றது. இது பகவத் ப்ரஸாத வ்யவஹிதமாகையாலே ஸாக்ஷாத் பல ஹேதுவன்று என்னுமிடமும் பக்தியாதிகளுக்கும் துல்யமாயிருந்தது. இப்படியிருக்க ப்ரபத்தியை உபாயமன்றென்று விசேஷித்துச் சொல்லுகிறவர்களுக்கு தாத்பர்யமென்னென்னில், சாஸ்த்ரங்கள் பக்தியைப்போலே ப்ரபத்தியையும் உபாயமாக விதிக்கச் செய்தேயும் இவ்வுபாயத்தினுடைய அநுஷ்டான சரீரத்தைப் பார்த்தால் ஸாந்யாஸப்ரதாநமாய் நீயே உபாயமாக வேண்டுமென்று அபேக்ஷிக்கிறபடியோமாத்ர ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு உபாயாந்தரஸ்தானத்திலே நிற்கிற ஈச்வரனுடைய நிரபேக்ஷோபாயத்வம் இவ் வித்யைக்கு வேத்யாகாரமாய் நிற்கையாலே வித்யாந்தரங்களிற் காட்டில் இவ்வாசியைப்பற்ற ப்ரபத்தியை விசேஷித்து உபாயமன்றென்றார்கள்".

[illegible] அந்த விரோத பரிஹார ரஹஸ்ய ஸ்ரீ ஸூக்தி. இத்தால் ஆபத்தியின் [illegible] வாசம் கண்ணழிவற்றதென்று தாமே இசைந்தருளினாராயிற்று. [illegible] ஸ்ரீ ஸூக்தி ரத்னங்களை ஸ்வாமி எதற்காக ஸாதித்தருளினாரென்று விமர் [illegible] வேண்டாவா? கேண்மின்; "ஆபத்தியுங்கூட உபாயமன்றென்று சிலர் அதி [illegible] பண்ணினார்கள்" என்று தாம் பணித்திருந்ததற்கு அநுஶயித்து இது [illegible] ஸாதித்தருளினபடியென்று சொற்போக்கில் நன்கு விளங்கவில்லையா? * [illegible] [illegible] என்ற ந்யாஸஸூக்தியொன்று [illegible] (ஸார்த்தமியா) என்னுல் போதாதா? (ஸமியா) என்றும் ஸாதித்திருப் [illegible] காணவேண்டாமா? மேலே காட்டிய விரோத பரிஹார ஸ்ரீ ஸூக்தியை [illegible] திலகத்தில் "[illegible]" என்கிற ஶ்லோகத்தினுல் தம் [illegible] ஸித்தாந்தமாகவே யன்றோ தலைக்கட்டினார்.

ந்ருஸிம்ஹப்ரியாவிலிருந்து கீழே அடியேனெடுத்துக்காட்டியுள்ள ஸ்ரீமத் [illegible] ஸ்வாமியின் வாக்யஶ்ரேணியில் (உபக்ரமத்திலேயே) "வடகலை தென் [illegible] ஸம்ப்ரதாயங்களுக்குள் சுமார் பதினெட்டு விஷயங்களில் அபிப்ராய பேதம் இருக் [illegible]" என்றுள்ளது. இங்கு அடியேன் விஜ்ஞாபிக்கிறேன்; பதினெட்டுமில்லை, [illegible] முக்கியமாக ஐந்தாறுதான் இருக்கும். அஸக்ருந் நமஸ்காரம், விதவா [illegible] ஏகாதசீச்ராத்தம், மணி யடித்தல் ...... போன்ற விஷயங்களைச் சேர்த்துக் [illegible] பதினெட்டு என்ன? இருபத்தெட்டு முப்பத்தெட்டும் தேறும். ரஹஸ்ய [illegible] த்தில் ஐந்தாறுக்குமேல் தேராது. வாத்ஸல்யம் [illegible]? [illegible]? [illegible]? [illegible]? — இத்யாதி விசாரங்கள் லகுவானவை. அப்படிப்பட்டவற்றைத் தள்ளிக் [illegible] ஐந்தாறுக்குமேல் தேறவே தேராது. அவற்றில் ஸ்வாமி தேசிகன் [illegible] தென்னசார்ய ஸம்ப்ரதாய ஸித்தாந்தத்திற்கு ஓர் அணுவளவும் மாறு [illegible] – [illegible]த்தும் மாறுபடாதது – என்பது பேர்க்கவும் போகாது. ஆதிஜ்ஞை [illegible] வனல்லனே அடியேன். நின்று நிருபிக்கிறேன். நன்கு நிரூபிக்கிறேன். [illegible] ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலிருந்து அடியேன் எடுத்துக்காட்டின விஷயங் [illegible] சார்பாக தேசிகன் ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களிலும் ஸாதித்துள்ளார். [illegible] காட்டவேணும்? முக்கியமானவற்றைக் காட்டுகிறேன்.

[illegible] ஸங்க்ரஹஸுதாயாம்) (*நிஜகர்மாதீத்யாதி ச்லோக விவரணே). "முக்த [illegible] ந்யாயேந ஸ்வயம் ஸ்வாதுத்வாத் க்ஷணிகஸ்ய காலாந்தரபாவி பல [illegible] அநுபபத்திதர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதா [illegible] ஸ்யாத் இதி பாவ:; அந்தத: தைஸ்தைராராதிதோ பகவாநேவ [illegible] ஸர்வத்ர உபாய:" என்று ஸாதித்திருப்பதைப் பன்முறையும் காட்டி [illegible]ருக்கிறேன்.

[illegible] சந்த்ரிகாயாம்) 8 – 14. "அநந்ய சேதாஸ் ஸததம்" என்ற [illegible] பாஷ்யத்தில் "தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே [illegible] - உபாஸநவிபாகம் தத்விரோதிநிரஸநம் அத்யர்த்தமத் [illegible] அஹமேவ ததாமி இத்யர்த்த:, "யமேவைஷ வ்ருணுதே

தேத லப்ய: * இதி ஹி ச்ரூயதே என்ற விடத்து (தாத்பர்ய சந்த்ரிகையில்) *உக்தஸ்ய அதிவாதமாத்ரத்வ ஶங்காவ்யுதஸநாய ச்ருதிமூலதாமாஹ — யமேவேதி.* என்றுள்ளது. இதையும் பலகால் எடுத்துக்காட்டியுள்ளேன்.

மேலேகாட்டிய ஸ்ரீதாத்பர்யஸங்க்ரஹாக்ஷரஸூக்திகளில் (முக்தவ்யாபாரந்யாயோ) என்று ஸாதித்திருப்பதுண்டே. அந்தோ! இதன் சுவையை ஆரே அறிவார்! இங்கு நாம் செய்வதை யெல்லாம் அங்கு முக்தர்களும் செய்கிறார்கள். அவர்களில் "உபாயாநுஷ்டானம் ஆச்சுதோ?" என்று வினவுவாருமில்லை; "உபாயாநுஷ்டானத்திற்காகத்தான் வந்திருக்கிறோம்" என்று விடை கூறுவாருமில்லை. ரஹஸ்யில் உடனே "நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதாபுத்திரபி ...... " என்று ஸாதித்த ஸ்ரீஸூக்திக்கு *விண்ணெல்லாமுண்டோவிலை? ஸ்வவ்யாபாரத்தில் உபாயபுத்தி பண்ணுகிறவர்களைக் கண்டிக்கும் வார்த்தையன்றோவிது? அப்படி பண்ணுகிற மஹாநுபாவர் யார் என்பது தெரியவேணும். நாங்கள்தானென்ன வேணுமிவர்கள். அடுத்த தாத்பர்ய சந்த்ரிகா ஸ்ரீஸூக்தியில் *நாயமாத்மாஶ்ருதியில் ஸ்வதந்த்ரர்களின் அகாண்ட தாண்டவங்கள் அடியறுக்கப்பட்டிருப்பதை ஆழ்ந்து பார்க்கவேண்டா; மேலெழப்பார்த்தாலும் போதும்.

நியாய ஸித்தாஞ்ஜநத்தில் — * உபாயம் கேவலைவ ஸ்ரீ ஸர்வோபாயஸமுச்சயாதிகா, ... * என்கிற காரிகை ஐம்பது வருஷகாலமாக வாதவிவாதங்களில் அடிபட்டுக்கொண்டிருக்கிறது. இதைக் காணுக்கண்ணிட்டிருக்கிறார்கள். இதில் இரண்டு விஷயம்; [இயம் ப்ரபத்தி: ஸ்வஹேதுத்வதியாம் ......] என்றது தெரிந்த விஷயம்; ப்ரபத்தியின் அநுபாயத்வம் ...... மென்று காட்டினபடி. *கேவலா ஸர்வோபாயஸமுச்சயாதிகா* என்றதுது மற்றொன்று. இங்கு (கேவல) பதம் எதற்கு என்பது தனிவாராய்ச்சி. (ஸ்வஹேதுத்வதியம் ருத்தே) என்று எதற்காக ஸாதித்தார்? யாரைநோக்கி ஸாதித்தார்? என்பது தலையான ஆராய்ச்சி. ஹேதுவென்பாரைத்தானே இதனால் கண்டிக்கிறார். அவர்கள் யார்?

*உபாயஸ் ஸ்வப்ராப்தே: என்கிற ரஹஸ்யத்ரயஸாரச்லோகத்தின் ஈற்றடியில் ஹேது:, காரணம், பீஜம் .... என்றதே ...... என்று ஏன் ஸாதித்தார்? ஈச்வர:, ப்ரபு:, விபு: என்றதே *அகில நிர்மாணநிபுண:* என்று *...... ...... வர்ணிதாசுரா:* என்ற அலங்காரத்திற்கு லக்ஷ்யமாக ஸாதித்தது எந்த அபிப்ராயத்தை உட்கொண்டது? கேண்மின்; *ஸ்ருஷ்ட்யவதாராதிமுகத்தாலே பண்ணின க்ருஷிபலம் என்கிற பிள்ளைலோகாசாரியர் ஸ்ரீஸூக்தியைத் தழுவியருளிச்செய்ததென்பது பரமார்த்தம். வேறுண்டாகில் நின்றுகூறுமின்.

கீழே *கேவல லக்ஷ்மீஸர்வோபாய .... காரிகா வ்யாக்யானம் வந்தபடியாலே பிராட்டியின் உபாயத்வ விஷயத்திலும் ஸ்வாமி தேசிகனுடைய ஸித்தாந்தம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது.

இவ்விஷயத்தில் ரஹஸ்யக்ரந்த ஸூக்திகளும் சதுச்ச்லோகீபாஷ்ய ஸூக்திகளும் கண்ணாடி போலுள்ளன காண்மின்; "எம்பெருமான் தான் மோக்ஷமளிப்பவன்; பிராட்டிக்குப் புருஷகாரத்வமேயுள்ளது. என்கிற தென்னாசார்ய ஸம்பிரதாயமே ஸ்வாமி தேசிகனுக்கும் ஸித்தாந்த மென்பதில் விப்ரதிபத்தியுண்டாக சங்கைத்தாவது வழியுண்டா? என்று பார்க்கவேணும் விவேகிகள்.

(ரஹஸ்யரத்நாவளியில்) * ஸ்ரீமானான நாராயணனொருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்........ஸர்வ ஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிருள்.* என்பது நிஸ்ஸந்தேஹ நிர்விவாத ஸ்ரீஸூக்தி. (ரஹஸ்ய ரத்நாவளீ ஹ்ருதயே) *ரக்ஷணஹேதுவாகிருளென்று தாமே செய்தருளின விவரணம்.

(சதுச்ச்லோகீபாஷ்யே) * மோக்ஷப்ரதே பகவதி முமுக்ஷூணாம் ஸ்ரீடகதயா ஆச்ரயணீயா நிஷ்டதீதி ஸர்வஸம்மதம் * * அஸ்தி கர்மார்ஹ பலதே பத்யௌ க்ருத்ய ஸ்வயம் ச்ரிய:. நிக்ரஹாத் வாரணம் காலே ஸந்துக்ஷணமநுக்ரஹே * * ஸபத்நீஸம்ம ஸாம்ராஜ்யம் ஸர்வதா ஸுப்ரதிஷ்டிதம்.* என்று ஸாதித்துள்ளவை அரண்ய ரோதநமா? மேலே *ஸ்ரீ விஷ்ணு சித்தார்யாதி பூர்வாசார்ய ஸூக்திகளை இந்த ப்ரகரணத்தில் உதாஹரித்தருளியிருப்பதும் காண்க.

மேலே உதாஹரித்த தமிழ் வாக்யங்களிலும் ஸம்ஸ்க்ருத வாக்யங்களிலும் கிஞ்சித்தாவது ஸந்தேஹத்திற்கோ விப்ரதிபத்திக்கோ இடமுள்ளதாவென்று பார்க்கவேணும். உண்டெனில் அருளவேணும். இவ் விஷயத்தில் கலஹாதிகர்களின் க்ரந்தர் சண்டைகளோ அபாரம்.

அடுத்தபடி, மாநுஷமதி, ஸாநுராஸம், ஸாரஸ்ரயம், உபாயாநுஷ்டாநம்....... என்றும் விஷயத்திலும் ஸ்வாமி தேசிகனுடைய திருவுள்ளம் வெட்ட வெளிச்சமாகவுள்ளது. இதைப்பற்றியும் தமிழ், ஸம்ஸ்க்ருதம் இரண்டிலும் எழுதியுள்ளார் ஸ்வாமி. (சரணாகதிகத்யபாஷ்யாவஸாநே) *ஏதேந அநாதிகாலம் ஆஜ்ஞாதிலங்கநமூல பகவத்அப்ரஸாதேந ஸம்ஸரதோ மே பகவத் க்ருபாமூலக ஸதாசார்யாங்கீகாரேண த்வயோச்சாரண அநுச்சாரண பூர்வக ஸ்வரக்ஷாபரந்யாஸே ஸித்தே ஸமாநதரேஷ * அஸ்மாத் அப்யதிகஸ்ய அபாவாத் விச்வஸ்தோ நிர்ப்பரோ நிர்ப்பயஸ் ஸந்துஷ்டோ பவேதி நிமமிதம் பவதி.* (ரஹஸ்யத்ரயஸாரஸூக்தி விசேஷமொழி பெயர்ப்பு இது.) அந்த ஸூக்திகளையும் கேண்மின். [நாம் பலபல தடவை எடுத்துக் காட்டியவை] ''அநாதிகாலம் ஆஜ்ஞாதிலங்கனமடியாகவுண்டான பகவந்நிக்ரஹத்தாலே ஸம்ஸரித்துப்போந்த நமக்கு அவஸரப்ரதீக்ஷையான பகவத் க்ருபையடியாகவுண்டான ஸதாசார்யகடாக்ஷ விஷயீகாரத்தாலே வந்த த்வயோச்சாரணநுச்சாரணத்காலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு சரண்ய ப்ரமாணங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே நிக்ரஹஹேதுக்களையெல்லாம் க்ஷமித்து.* ௳தி.

இவற்றுள் முன்னே அவதரித்தது ஸம்ஸ்க்ருத வாக்யமா? தமிழ் வாக்யமா? என்பது அடியேனுக்குத் தெரியவில்லை. அந்யூநாநதிரிக்தமான மொழி பெயர்ப்பு என்பதில் ஐயமில்லை. ஈதொன்று கேளீர்; பஞ்சாசார்ய பதாச்ரிதரென்று ஆஸித்த வான் எம்பெருமானார் இன்னாரிடத்தில் ஸ்ரீராமாயணம் கேட்டார், இன்னாரிடத்தில் திருவாய்மொழிப் பொருள் கேட்டார்; இன்னாரிடத்தில் ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார், இன்னாரிடத்தில் அருளிச்செயலாதி நல்வார்த்தைகள் கேட்டார் .... என்பதை இரண்டு ரஹஸ்யக்ரந்தங்களில் எழுதிவைத்திருக்கிற ஸ்வாமி தேசிகன் –

"இன்னொரிடத்தில் அத்ருஷ்டார்த்தம் பண்ணிக் கொண்டார்" என்று எழுதிவைக்க வில்லையே; ந்யாஸதிலகத்தில் "லக்ஷ்மண முநேர் [illegible] விதீர்ணம் ச்ருத்வா வரம்" என்று குன்றிலிட்ட விளக்காக ஸாதித்திருக்கிறார்; அந்த வரம் எவ்விதமான தென் பதை உடனே "[illegible] மயி" என்பதனால் தாமே விளக்கிவைத் தார். ஸ்ரீ பாஷ்ய மங்களச்லோகத்தில் "[illegible]" என்றதில் (விவிய) ([illegible]) என்கிற இரண்டு சொற்களிட்டதன் ப்ரயோஜநத்தை ச்ருதப்ரகாசிகையில் விவரித்திருப்பதையும், அதை ஸ்வாமி தத்வடீகையில் மிகமிக விளக்கியிருப்பதையும் வித்வான்கள் நடுநிலையில் நின்று நோக்கவேணும். தற்கா லம் இவ்வளவோடு நிற்கிறேன். இதெல்லாம் அடியேனெழுதியது – தேசிகன் பக்கலில் தென்கலையார் மாச்சரியம்கொள்வதற்கோ. அவர் வேறு ஸம்ப்ரதாயஸ்தர் என்று நினைப்பதற்கோ அணுவளவும் ப்ரஸக்தியில்லையென்று மூதலிப்பதற்காகவே யன்றி விவாதத்தை மேன்மேலும் வளரச்செய்வதற்கன்று.

உபஸம்ஹாரம்—இந்த விரிவுகளெல்லாம் கைவல்ய விஷய விசாரத்தி லிருந்து தோன்றியவையாதலால் அதைப்பற்றி இரண்டொரு வார்த்தை பேசித் தலைக்கட்டுகிறேன். "மதிராபிந்துமிச்ரமான [illegible] கும்ப [illegible] ஸலிலம் போலே அஹங்காரமிச்ரமான உபாயாந்தரம்" என்கிற திருக்குருகைப் பிரான் பிள்ளான் ஸ்ரீ ஸூக்தியை மறுப்பது பலர்க்குத் தெரியாதபடிக்கு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் "[illegible]" [illegible]காரிகையை அ[illegible] மாக இட்டருளினதுபோலே கைவல்ய விஷயத்திலும் கீதா பாஷ்ய [illegible] தைப்பற்றி ஒரு காரிகை இட்டருளியிருக்கலாம். அன்றியும் நடாதூரம்மாளருளிச் செய்த தத்வஸாரத்தில் "ஆத்மவிச்வரத்தயைவ புருஷ:...." இத்யாதி ச்லோகத்தை யும் அதற்கு மூலமான ஸ்ரீ பாஷ்ய ஸூக்தியையும் ஸ்வாமி தேசிகன் கடாக்ஷித் தருளி, அதிகரண ஸாராவளியில் "[illegible]" என்றருளிச் செய்ததுபோல, கைவல்ய விஷயத்திலும் நியாய ஸித்தாஞ்ஜனத்தில் "[illegible]" என்று ஒரு சுலோகமிட்டிருக்கலாம்; அப்படியன்றிக்கே கீதா பாஷ்ய ஸூக்தி அஸ்வரஸ மென்றே பேசி முடித்திருப்பதனால் இவ்விஷயத்தில் விவாதத்தை வளரச் செய்யாமலிருப்பது நன்று. எந்த ஸூக்திக்கும் அஸ்வாரஸ்யகல்பன மின்றிக்கே நிர்வஹிக்கும் வழியொன்று காட்டினால் அதை உகந்து ஏற்றுக் கொள்வது யுக்தமல்லவா?

தேசிகன் முதன் முதலாக ஸாதித்தருளின ஸம்ப்ரதாய பரிசுத்தி ரஹஸ்யத் தில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்ப்ரதாயங்களொன்றிலும் அர்த்த விரோத மில்லை யோஜநாபேதமாத்ரமேயுள்ளது" என்று அருளியதை இந்த ஸமீக்ஷை யினால் விவரித்தோமானோம்.

(சுலோகம்) [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ॥

ஸ்ரீராமாயணப் பகுதி

"மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹத்"

(ஸ்ரீ உ. வே. வித்வான் தி. அ. அக்காரக்கனி ஸம்பத்குமாராசாரியர், M.A.)

சக்ரவர்த்தி திருமகனார் அம்பினால் எய்யப்பட்ட மாரீசன், "ஹா லக்ஷ்மண! ஹா ஸீதே!" என்று பெருமான் குரல்போலவே உரத்த குரலில் கதறியதைக் கேட்ட சீதாபிராட்டி அது பெருமானுடைய கூக்குரலே யாயிருக்கவேணுமென்று நினைத்து மிகவும் வியாகுலப்பட்டு, இளையபெருமாளை உடனே சென்று தமையனை நோக்கவேணுமென்று கட்டளையிட்டனள். ஆனால் உண்மையறிந்த அவர் கொடிய காட்டில் பிராட்டியைத் தனியே விட்டுப்போக மனமில்லாமல், பெருமானுக்கு தீங்கு விளைவிக்கவல்ல தீரன் மூவுலகிலும் ஒருவனுமில்லை யென்று விளக்கி ஆறுதல் கூறினார். பிராட்டி இதைச் சிறிதும் ஏற்கமாட்டாதவளாய் இளையோன்பேரில் அதிசங்கைபண்ணி மிகக் கொடிய சொற்களால் அவரை நிந்திக்க, அவர் அதைப் பொறுக்கமாட்டாமல் சினங்கொண்டு தானும் சிலகொடிய சொற்களைப்பொழிந்து பெருமானைத் தேடிச்சென்றுவிட்டார். உடனே ராவணன் அவ்விடம் வந்து பிராட்டியைக் கவர்ந்து இலங்கைக்குக் கொண்டுபோய்விட்டான். இது எல்லோருமறிந்த கதை.

மாயமானைப் பிடித்துத் தரவேணுமென்று தான் வேண்டியதும், இளைய பெருமாளைக் கொடுஞ்சொற்களால் துாத்தியதும் தான் இராவணனால் கவரப்பட்டு, பெருமானைப் பிரிந்து, இலங்கையில் சிறைவாசம் செய்யக் காரணமாயிற்றென்று பிராட்டி பிறகு நன்கறிந்து அதற்காக மிகவும் வருந்தினாள். ஆனால் அவள் இதற்காக ஏதாவது ப்ராயச்சித்தம் செய்துகொண்டனளா, மன்னிப்பாவது கேட்டுக் கொண்டதுண்டா என்று ஆராயவேண்டும்.

திருவடியின் மூலம் பெருமானுக்கு தூது அனுப்பிய பிராட்டியின் மொழிகளில் ப்ரஸித்தமான ச்லோகமிது—"மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி ந ஸம்சய:, ஸமர்த்தாவபி யந்மாம் தௌ நாவேக்ஷேதே பரந்தபௌ". (ஸு. 38—48) இதன் பொருளாவது—"என்னை இச்சிறையிலிருந்து விடுவிக்கவல்லவரா யிருந்தும் அவ்விருவரும் என்னை இப்படி உபேக்ஷிப்பதற்குக் காரணம் என்னுடைய ஏதோ சிறிய பெரிய பாவமன்றி வேறில்லை." இதில் சிறிய பாவமென்பது பகவதபசார மென்றும், பெரியபாவமென்பது பாகவதாபசாரமென்றும் பெரியோர்கள் விளக்கியுள்ளார்கள்.

இதைச் சிறிது விவரிப்போம். எம்பெருமானை விரும்பாமல் அற்பமான அநித்யமான வஸ்துக்களையே விரும்பும் நம்மைப் போலவே பிராட்டியும் பெருமானுடன் கூட அநுபவித்து வரும் நிலைமையில், அதை வெறுத்தனளோ என்று நினைக்கலாம். இனி, மாயமானைப் பிடித்துத் தரவேண்டுமென்று அவரையே ஏவியது பெரும் தவறன்றோ? "பெரும! எனக்கு நீ வேண்டா, மாயமானே யமையும்" என்று சொன்னதோடொக்குமிது. இதுவோர் அபசாரம். இரண்டாவதாக அயோத்தியில், தந்தையின் உத்தரவினால் நாட்டைவிட்டு காட்டுக்குச்செல்ல நினைத்த பெருமான், தன்னை கூட வரவேண்டாவென்று மறுத்ததைக் கேட்ட பிராட்டி, தானும்

கூடச்சென்றே தீருவேனென்று அடம் பிடித்து. "ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம்" (ஆண்வேடம் பூண்ட பெண்) என்றும், "சைலூஷ இவ மாம் ராம பரேப்யோ தாதுமிச்சஸி" (நாட்டியக்காரன் போல மனைவியை பிறர்க்கு விற்க நினைக்கிறீர்) என்றும் ஏசியது அபசாரமே யாகுமன்றோ? ஆக இவை இரண்டும் பகவதபசாரங்களாயின.

இனி பாகவதாபசாரமாவது கீழே விவரித்தபடி இளையபெருமாளை இங்கு நாம் அநுவதிக்கத்தகாத கொடிய சொற்களால் தாக்கியதுமல்லாமல், ஒரு பாவமுமறியாத பரதாழ்வானையும் இழுத்துப்போட்டுக்கொண்டு, அவ்விருவரும் பெருமாளுக்குத் தீங்கு விளைவிக்க சதிசெய்வதாக வசை கூறியதுமாகும். ஆக, இவையெல்லாவற்றையும் நினைத்தே பிராட்டி "மம கிஞ்சித் மஹத் துஷ்க்ருதம் அஸ்தி" என்று சொல்லிக்கொண்டபடி.

இப்பொழுது இப்பாவத்தின் பேச்சு எதற்காக வென்றால், "அடியாள் (அன்பினால்) ஏதோ அறிவுகெட்டுச்செய்த இக்குற்றங்களை அவ்விருவரும் பொறுத்துக் காத்தருளவேணும்" என்று பிரார்த்தனை செய்வதற்காக வென்றறியவேணும். மன்னிக்கவேணுமென்கிற வார்த்தையைக் காணோமே என்று மயங்காதீர்கள். இத்தூதின் ப்ரகரணத்தில் முக்கியமான வாக்கியம், 'கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ, தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச சிரஸா சாபிவாதய' என்பதாம். இதன் பொருளாவது—"விசால மனம் படைத்த கௌஸல்யையார் மூவுலகையும் ரக்ஷிக்கவல்ல விச்வபதியை மகனாகப்பெறவேணுமென்று தவம்புரிந்து படைத்த திருக்குமாரரான பெருமாளுக்கு அடியாள் தலையால் வணங்கி குசலப்ரச்நம் பண்ணினதாக அறிவிக்கவேணும்" இவ்விடத்தில் லோகபர்த்தா என்று அடைமொழி யிட்டதும், தலையால் வணங்கச்சொன்னதும் கவனிக்கத்தக்கவை. பர்த்தாவாகையால் அவரவர்கள் செய்திருக்கக்கூடிய நன்மை தீமைகளைக் கணிசியாதே அனைவரையும் ரக்ஷிப்பதே அவருக்குப் பணியாகுமென்பதை நினைப்பூட்டி, தான் செய்திருக்கக்கூடிய பிழைகளைப் பொறுத்தருள வேணுமென்று வேண்டிக்கொள்ளவே தலையால் வணங்கச்சொன்னது. இப்படியொரு பிரார்த்தனை யில்லாவிட்டால், ஸாதாரணமாக நாயகி நாயகனைத் தலையால் வணங்க ப்ரஸக்தியில்லையன்றோ? ஆகையால்இவ்விடத்தில் அபராதக்ஷாமணமே உத்தேச்யமென்றுதேறிற்று.

ஆக பிராட்டி பெருமாளிடம் அபராத க்ஷாமணம் செய்துகொண்ட விதம் காட்டப்பட்டது. இனி அடுத்த பல ச்லோகங்களால் இளையபெருமாளிடம் மன்னிப்பு வேண்டியது வெகு அற்புதம். கீழே விவரித்த "மமைவ துஷ்க்ருதம்" என்கிற சுலோகத்தில் "நாபேக்ஷே பரந்தபௌ" என்று இருவரையும் ப்ரஸ்தாவித்திருப்பதால் இருவரிடமும் மன்னிப்பு வேண்டினமை தோன்றும். ஆகிலும் "கௌஸல்யா லோகபர்த்தாரம்" என்கிற சுலோகத்தில் தனிப்பட பெருமாளிடம் தலைவணங்கி மன்னிப்பு வேண்டிக்கொண்டது போலவே, இளையபெருமாளிடமும் தனியாக மன்னிப்பு வேண்டியிருப்பது கவனிக்கத்தக்கது. பெருமாளுக்கு ஸந்தேசம் ஒரு ச்லோகம். இளையவருக்கு எட்டு ச்லோகங்கள். இதனால் அவரிடம் மன்னிப்பு வேண்டுவது அதிகம் இருக்கிறதென்பது வெளிப்படையாகிறது. இனி தூதுமொழியின் பொருளைக் கேளுங்கள். "மாலைகள், பல ரத்தினங்கள், இஷ்டமான பாதர்

கள், உலகில் வேறு யாராலும் அடையமுடியாத பெருஞ் செல்வம், இன்பமான வாழ்ச்சி, தாய், தந்தை ஆகியவற்றையெல்லாம் விட்டிட்டு, தமையனைப் பின் தொடர்ந்தவரும், ஸுமித்ரா தேவியின் ஸுபுத்ரனும், ஸுகங்களையெல்லாம் துறந்து தமையனுக்கு அநுகூலமாக நடந்துகொண்டு காட்டில் அவரை நோக்கிக் கொண்டு சென்றவரும், மஹாபுருஷலக்ஷணங்கள் பொருந்தியவரும், பெருமாளைத் தந்தைபோலவும் என்னைத் தாய்போலவும் நடத்தி வந்தவரும், அன்று இராவண னால் நான் கவரப்பட்டதை யறியாதவரும், பெரியோர்களை யடிபணியுமவரும், மித பாஷியும், எனது மாமனுக்கு ஒப்பானவரும், அவருடைய பொறுப்பை நன்கு ஏற்றுக்கொண்டவரும், எவரைப் பார்த்து எனது பர்த்தா தனது தந்தை இறந்து விட்டதாக நினைக்கவே மாட்டாரோ, எவர் என்னைவிட அவருக்கு மிகவும் ப்ரிய மானவரோ, அப்படிப்பட்ட மிருதுஸ்வபாவரும், தூயவரும், ஸமர்த்தரும், பெரு மாளுக்கு மிகவும் வேண்டியவருமான இலக்குமணனை நான் மிகவும் விசாரித்ததா கச் சொல்வாயாக.''

இவ்விடத்தில் இளைய பெருமாளுக்கு இவ்வளவு அடைமொழிகள் இடுவதற்கு காரணமென்னவென்று யோசித்தால், பிராட்டி தான் அவரிடத்தில் செய்த கொடிய அபராதத்திற்கு மன்னிப்பு வேண்ட முயன்றனளென்பது நன்கு விளங்கும். ''ராமம் தசரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம்'' (இராமனை தசரதனாகவும் ஜானகியை தாயாகவும் நினைத்துக்கொள்) என்கிற ஸுமித்ரா தேவியின் ஆணையின் படியும், ''பிதா ச மம ராகவ:'' (எனக்கு தமையன், ஸ்வாமி, மற்றும் உறவினர், தந்தை, எல்லாம் இராகவனே) என்கிற தன் சொற்படியும் இலக்குமணன் உண்மை யாகவே நடந்துகொண்டவன் என்று கொண்டாடுவதன் கருத்து, அவன் விஷயத் தில் தான் கொடிய சொற்களைப் பொழிந்தது தவறென்று காட்டி அவரிடத்தில் மன்னிப்பு வேண்டுவதே யன்றோ?

இது திருவடிமூலம் பிராட்டி மன்னிப்பு வேண்டியபடி. இனி நேரில் நடந்த அபராத க்ஷாமணத்தின் படியையும் காட்டுவோம். இராவணனை முடித்து விபீட ணனுக்கு முடி சூட்டிய பிறகு, பெருமாள் அவன் மூலமாக பிராட்டியை வர வழைத்து, தான் அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள முடியாதென்று பலகோடி வாநர வீரர்களின் மத்தியில் கூறிவிட, அதைக்கேட்ட பிராட்டி தன் தூய்மையைப் பலபடிகளால் எடுத்துரைத்தும் பெருமாள் திருவுள்ளமிரங்காமையை யுணர்ந்து, தான் திருவடிமூலம் மன்னிப்பு வேண்டிய செய்தி அவர் திருச்செவிகளுக்கு எட்ட வில்லைபோலும், அல்லது எட்டியும் அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லைபோலும் என்றெண்ணி, அதற்காக தான் பெரியதோர் ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமெனத் துணிந்து, இலக்குமணனை தீமூட்டித்தரச்சொல்லி தீக்குளித்தன ளென்பது எல்லோருமறிந்த கதை.

பிராட்டிக்கு தீ வேண்டியிருந்தால் இலங்கையை தீக்கிரையாக்கின அநும னையோ, அல்லது லங்காதிபதியான விபீடணனையோ வேண்டியிருக்கலாம். இளைய பெருமாளை வேண்டியதின் கருத்து, தான் அவர்பால் செய்த அபராதத்திற்கு அவர் மூலமாக தண்டனை பெறவேணுமென்கிற துணிவேயாகும். இளைய பெருமாள் பிராட்டியை தண்டிக்கவேணுமென்றெண்ணி அவளுக்குத் தீமூட்டித் தந்தார்—

என்பது இதன் கருத்தன்று. அவர் பிராட்டியின் ஆணையையும் செய்கையால் காட்டப்பட்ட பெருமாள் கருத்தையும் பின்சென்று, தம் இஷ்டத்திற்கு மாறாகவே தீ மூட்டினரேயன்றி தண்டிக்கும் நினைவு அவருக்கு கனவிலும் கிடையாது. பெருமாள் நினைவு எப்படியென்பது ஸரிவர விளங்கவில்லை. பிராட்டியைக் கண்டதும் அவருக்கு "ஹர்ஷோ தைந்யஞ்ச ரோஷச்ச ராகவம் த்ரயமாவிசத்" (யு, 117–17) ஸந்தோஷமும் துக்கமும் கோபமுமுண்டாயிற்றென்று வால்மீகி சொல்கிறார். ஆனால் கோபத்திற்குக் காரணமின்னதென்று தெரியவில்லை. நிக்ரஹிக்கவேணுமென்று பெருமாள் தம் வாயால் சொல்லவுமில்லை. பிராட்டி பேரில் யாதொரு குற்றத்தையும் அவர் சாட்டவுமில்லை. "தீபோ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே" (யு 118-17) "கண்ணோய் உடையானுக்கு விளக்குபோல எனக்கு உன் பார்வை பொறுக்க முடியவில்லை" என்று பிராட்டியை வெறுப்பதற்குக் காரணம் தன்குற்றமேயென்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஆகிலும் அவர் அவளை பரீக்ஷிக்க விரும்பினாரென்று கொள்ளவேண்டியிருக்கிறது; ஆனால் அப்பரீக்ஷை தனக்காகவன்று, பிறர்க்காக என்பதும் நன்கு புலப்படுகிறது. "ஸ்த்ரீயம் புருஷவிக்ரஹம்" என்று பிராட்டி (ப்ரணயாதேவ ஸங்க்ருத்தா) அன்பினால் கடிந்ததை பெருமாள் வெறுத்தாரென்றும் சொல்ல முடியாது. அன்பர்களின் ஊடுதல் மடலெடுக்கை முதலிய செய்கைகளால் பெருமான் திருவுள்ளமுகக்குமென்றே பெரியோர் சொல்லுகிறார்கள். இளையபெருமாள் விஷயத்தில் பிராட்டி அபசாரப்பட்டதற்குப் பெருமாள் அவளை வெறுத்ததாக வால்மீகி எங்கும் சொல்லவில்லை. இளையவரும் அக்கொடிய சொற்களைக் கேட்ட க்ஷணத்தில் சிறிது சினங்கொண்டனரேயன்றி பிறகு அதைப் பற்றி நினைக்கவே இல்லை. அச்சமயத்தில் சினங்கொண்டதற்குக் காரணம் தான் அவளை விட்டுப் பிரிந்து சென்று ஆபத்திற்கு இடமளிக்க நேர்ந்ததே என்கிற சிந்தையேயன்றி வேறில்லை. பொன்மானைப் பார்த்தபோதே, அது மாரீசன் மாயையென்றும், அவன் ஏதோ தீங்கு செய்யவே மாயவேடத்தைப் பூண்டு வந்திருக்கின்றனனென்றும் அவர் நன்கு அறிந்தவராகையால், தான் பிராட்டியைத் தனியே விட்டுச் செல்ல விரும்பவில்லை. ஆக பெருமாளும் இளையபெருமாளும் பிராட்டியை தண்டிக்க வேணுமென்று கருதினவரன்றென்பது விளங்கிற்று.

"ஸ்த்ரீயம் புருஷவிக்ரஹம்" என்கிற சொல்லைக்கேட்டு திருவுள்ளம் கன்றின பெருமாள் அவ்வபவாதத்தைப் போக்கிக்கொள்ளவேணுமென்று துணிந்து, கரன் தூஷணன் முதலிய பதினாலாயிரவர் அரக்கர் படையெடுத்து வந்த பொழுது பிராட்டியையும், அவளுக்குத் திருமேனிக் காவலாக இளையோனையும் வெகுதூரம் அனுப்பிவிட்டு "கதம் யுத்தம் பவிஷ்யதி" (பதினாலாயிரம் கொடிய அரக்கருடன் கள்ளங்கபடமறியாத பெருமாள் ஒருவராயிருந்து எப்படி போர் புரிவார்?) என்று அன்பர்கள் வயிறு பிடிக்கும்படி, தான் தனியாக போரிலிழிந்து அவ்வளவரையும் அநாயாஸமாகமுடித்திட்டார். அப்போர் நடக்கும் ஸமயத்தில் பிராட்டி பெருமானுக்கு என்ன தீங்கு விளையுமோ என்று தானும் மிகவும் வியாகுலப்பட்டு, ஸத்தையே இழந்துபோம்படியான நிலைமையிலிருந்தனளென்றும், பிறகு பெருமாள் வெற்றிமாலைசூடி மீண்டதைக்கண்டு ஸத்தை பெற்றனளென்றும் வால்மீகி முனிவர், "தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம்...பபூவ" இத்யாதி ச்லோகத்தினால் ஸூசிப்பித்திருக்கிறார். ஒருவிதத்தில் இதையும் பிராட்டிக்குக் கிடைத்ததொரு தண்டனையெனலாம்.

இப்படி யிருக்கபோதிலும் பிராட்டி மனத்தில்தான் அநியாயமாய் இரண்டு [illegible]டத்திலும் கொடிய அபசாரம் செய்துவிட்டதாகவும், அது தான் தன் சிறை [illegible]ருக்க் காரணமாயிற்றென்றும், ப்ராயச்சித்தத்தினால் தான் அதைப் போக் [illegible]வேண்டுமென்றும் திடமான எண்ணமிருந்தபடியால் அவள் திருவடி [illegible] மன்னிப்பு வேண்டவும், அது போதாதென்று பிறகு தீக்குளிக்கவும் துணிக் [illegible]. இதனால் தப்பு செய்பவர்கள் எப்படியும் அதற்கு ப்ராயச்சித்தம் செய்து [illegible]டே யாகவேணுமென்கிற சாஸ்த்ரார்த்தம் சிக்ஷிக்கப்படுகிறது.

இனி பிராட்டி பாதாழ்வானிடமும் அபசாரப்பட்டவளாதலால் அதற்காக [illegible] என்ன ப்ராயச்சித்தம் செய்துகொண்டனளென்று சிலர் கேட்கிறபடியால் [illegible] விடை கூறுகிறோம். பிராட்டி தனியாக பரதனை நிந்திக்கவில்லை. இலக்கு [illegible]டன் அவனையும் சேர்த்து குறை கூறினவள். இலக்குமணன் விஷயமாகத் [illegible] சொன்னதெல்லாம் தவறு, அபசாரம் என்று அவள் சொன்னபிறகு பரதன் [illegible] அதற்குள் அடங்கிவிட்டது; ஆகையால் அவனிடம் தனியாக வேண் [illegible] என்ன விருக்கிறது? மேலும் அதற்கேற்ற ஸந்தர்ப்பமும் கிடைக்க [illegible]. ஆகிலும் அவன் விஷயமாகவும் அவள் இரண்டொரு சீரிய சொற்கள் [illegible]பது கவனிக்கத்தக்கது. அதாவது, திருவடியிடம் அவள் பேசும்போது [illegible]. "அயோத்தியில் நின்று அடிக்கடி குசல ஸமாசாரங்கள் தெரியவருகின் [illegible]? பரதன் என்னை மீட்பதற்குப் பெரியதோர் படையைத் திரட்டி அனுப்பித் [illegible]" (கச்சித் அக்ஷௌஹிணீம் பீமாம் பரதோ ப்ராத்ருவத்ஸல:. த்வஜிநீம் [illegible]ப்தாம் ப்ரேஷயிஷ்யதி மத்க்ருதே - ஸு 36-21) என்றும் வினவியிருப்பது [illegible] சித்ரகூடத்தில் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு பரதன் [illegible] சென்ற பிறகு பெருமான் அயோத்திக்கு எழுந்தருளும் வரையில் காட்டுக் [illegible] யாதொரு தொடர்பும் கிடையாதென்றே புலப்படுகிறது. தன்னைக் [illegible]வேணுமென்று அயோத்தியிலிருந்து யாராவது அடிக்கடி வந்துவிடப்போகிறார் [illegible] யென்றஞ்சி பெருமாள் அவ்விடத்தையே விட்டு தண்டகாரணியத்துக் கெழுந் [illegible] விட்டாரென்று அயோத்யாகாண்டத்தின் முடிவில் சொல்லப்பட்டுள்ளது. [illegible]ருக்க, பரதனின் குசலத்தை வினவுவதும், அவன் தனக்காக பெரும் [illegible] அனுப்புவனோ என்று கேட்பதும் அர்த்தமற்றதென்று தோன்றவில்லையா? [illegible] பரதனிடம் தான் வைத்திருந்த நல்ல மதிப்பை வெளியிடுவது தான் இதற்கு [illegible]மென்றறியவேணும். இதனால் அவனிடம் தான் பட்ட அபசாரத்திற்கு ஒரு [illegible] ப்ராயச்சித்தமும் செய்தபடியாயிற்று.

அறிவிப்பு :—

ஸ்ரீ உ. வே. ஆகம்பாக்கம் கண்ணன் ஸ்வாமி அச்சிடுவித்த இரண்டு பாரங்கள் [illegible] பக்கங்கள்) இந்த ஸஞ்சிகையில் சேர்க்கப் பட்டிருக்கிறது. "அண்ணன் ஸ்வாமி [illegible] ஸஹஸ்ராப்ருதம்" என்கிற நூல் தொடர்ச்சியாக ஸ்ரீராமாநுஜனில் [illegible]வதன்று. இப்படியொரு வெளியீடு நடந்துகொண்டிருக்கிறதென்று அனை [illegible] தெரிந்து கொள்வதற்காகமட்டும் இந்த இரண்டு பாரம் இதில் சேர்க்கப்பட் [illegible]. எனவே, Sample—ஆதர்சம் என்றபடி. அங்காங்கு புஸ்தக வியாபாரிகளின் [illegible] விக்ரய சாலைகளில் (டிஸம்பர் மாதத்திலிருந்து) இதன் பகுதிகள் விற்பனை [illegible]டுமென்று தெரியவருகிறது. இங்ஙனம், **நீ. அ. அக்காரக்கனி அனந்தாழ்வான்.**

ஒரு ஸஹ்ருதயரின் சுவைமிக்க வார்த்தை

[இந்த ஸஞ்சிகையில் வரும் த்ருவிம்ஹப்ரியாஸமீக்ஷாவை பெங்களூரிலிருந்து வந்த ஒரு ரஸிகவித்வான் முழுதும் வாசித்துப்பார்த்துச் சொன்ன வார்த்தை.]

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ஸ்ரீஸூக்தியின் இன்சுவை!

சரமச்லோகத்தில் ஏராளப்தார்த்த விசேஷங்கள் அருளிச்செய்கிற தேசிகன்—மிகவும் அற்பர்களான நாம் செய்கிற அல்பவியாபாரத்தை உபாயமென்று நினைக்கவும் சொல்லவும் கூடாதென்று பரக்க உபபாதித்து வருகையில்—"விவேகியான முமுக்ஷுவுக்கு உசிதமன்று" என்று ஸாதித்திருப்பதை நோக்குவாரில்லையோ! வாதி ப்ரதிவாதிகள் நேரில் வாதிக்கும்போது "ஏன்டா! உனக்கு விவேகமில்லையா? நீ உப்பு போட்டுண்டு உண்பதில்லையா?" என்றெல்லாம் பேசுவது வழக்கம். எப்போது? மிகவும் பொருத்தமற்ற பேச்சைப் பேசும்போது. தேசிகனுடைய விபவத்தில் ஸ்வாமியோடு நேரே ஒருவன் [உபாயம் உபாயம்] என்று மன்றாடினான். அவனுக்கு வேண்டியது உரைக்கருளினார். எவ்வளவு உரைத்தும் அவன் மூளையில் ஏறவில்லை. ஸித்தோபாயமிருந்தாலும் ஸாத்யோபாயம் வேண்டாமோ? நாம் ஒன்றும் செய்யாமல் அவன் க்ருபைபண்ணிவிடுவனோ? என்று ஏதேதோ அவன் சொல்லிக்கொண்டிருந்தான். அப்போது ஸ்வாமிக்கு மிக்க சீற்றமுண்டாகி "நீ விவேகியாயிருந்தால் இப்படி பேசமாட்டாய்" என்று ஸாதித்துவிட்டு எழுந்தருளினார் போலும். அதுவே எழுத்தில் வடிக்கதாயிற்று. உபாயவாதிகளிடத்தில் தேசிகனுக்கு எவ்வளவு சீற்றமிருந்ததென்பதை "விவேகியான" என்கிற ஒரு சொல்லினால் விவேகிகள் உணரலாம். தேசிகன் வேறு எங்கேயாவது (விவேகியான) என்று பிரயோகித்திருக்கிறாரா? என்று தேடிப்பார்க்கவேணும்.

ஒருவர் சொல்லவந்தார்—ஸாத்யோபாயத்தை ஸித்தோபாயத்தோடொக்க நினைத்துச் சொல்லுமவர்களை தேசிகன் க்ஷேபித்தாரேயொழிய வேறில்லை—என்று. கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷையில் 'நாஸ்ய ஸ்வவ்யாபாரே உபாயத்வபுத்திரபி ஸ்யாத்' என்றருளிச்செய்த தேசிகன் இந்த குத்ஸிதவாதங்களைச் சிறிதும் ஸஹிக்கமாட்டார். ஶரணாகதிதீபிகையில் 'ஸ்வேநைவ க்லுப்தமபதேஶமவேக்ஷமாணா:' என்றருளியது எல்லாவற்றுக்கும் மேல் தூக்கிவிட்ட விளக்கு. பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீவசநபூஷணத்தில் 'த்ரிபாத்விபூதிகுணிகையில்—"தனக்கேற இடம் பெற்றவாறே என்னடியாரை நோக்கினாய் என்னூரைச் சொன்னாய் என்பேரைச் சொன்னாய்...... அவர்கள் விடாயைத் தீர்த்தாய். அவர்களுக்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்...... என்று மடிமாங்காயிட்டு" என்றருளிச் செய்த திவ்ய ஸூக்திகளைக் கண்டபாடம் செய்திருந்தன்றோ 'ஸ்வேநைவ க்லுப்தமபதேஶம்' என்று பணித்தருளினார். இம்பறைநார்? தேசிகனை ஆசார்யனாக வரிக்கத் தொடங்கினபோது இந்த ஸ்ரீஸூக்திகளில் கண் செலுத்தாமலே போயினர் என்பது ஸாரமான வார்த்தை.

இது ஸாதித்தவர்— ஞானப்பிரான் என்பவர்.

திருக்குறுங்குடியில் திரு. ஜீயர் ஸ்வாமியின்

அறுபத்தோராவது திருநக்ஷத்ர திருவிழா கொண்டாட்டம்

(திரு திருநாராயண ஐயங்கார், திருஜீயர் மடம், திருக்குறுங்குடி)

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் தனது ஸகல கல்யாணகுணங்களும் பொலிய விளங்கும (அர்ச்சாவதார) திவ்யதேசங்களில் ஒன்றான திருக்குறுங்குடி என்கிற வைஷ்ணவவாமநக்ஷேத்ரத்தில் நிறைந்த நீலமேனியின் ருசிஜநக விபவலாவண்யம் பூர்ணமென்று ஆழ்வார் கருத்தையறிந்த நம் பூர்வாசாரியர்கள் கருதியுள்ளார்கள். நின்ற நம்பி (பூர்ணன்) என்கிற இவ்வெம்பெருமானுடைய திருநாமமே ஸாக்ஷியாகும். எம்பெருமானார் இவ்விடம் எழுந்தருளியிருந்தபோது இந்நம்பியின் ஸ்ரீ பண்டார ஸ்ரீகார்ய நிர்வாஹத்திற்காகவும், தர்சன ப்ரவர்த்தனத்திற்காகவும் மடமொன்றையமைத்தருளினார். இதில் ஜ்ஞாநுஷ்டாந ஸம்பந்நர்களான பல பெரியோர்கள் பீடாதிபதிகளாக விளங்கி பல வகைகளாலும் நம்பியின் கைங்கர்யங்களை நடத்தியும் விசேஷமாக தர்மப்ரசாரம் செய்தும் போந்தார்கள். 46-வது பட்டத்தில எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ சடகோப ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணும் ஆள்வர் மண்ணூடே" என்கிற ஸ்ரீ ஸூக்திப்படி 96 திருநக்ஷத்திரங்கள் இவ்விபூதியில வீற்றிருந்து செய்துபோன திருப்பணிகள் உலகப்ரஸித்தம்.

வர்த்தமான பீடாதிபதியான 48-வது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி கலியன் ராமாநுஜஸ்வாமியின் 61-வது திருநக்ஷத்திர (ஷஷ்டி பூர்த்தி) மஹோத்ஸவம் புரட்டாசியீ சதய நக்ஷத்திரத் திருநன்னாளன்று (16—10—75) வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது முதல்நாள் அவிட்ட நக்ஷத்திரத்தன்று 47-வது பட்டம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ பட்டர்பிரான் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஷஷ்டிபூர்த்தி மஹோத்ஸவத்தன்று காலை ஸ்ரீஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ குழாங்களும் சிஷ்ய பரிஜந பரிசாரக வர்க்கங்களும் புடைசூழ மடத்தினின்றும் புறப்பட்டு ஸ்ரீ நம்பி ஸந்நிதிக்கெழுந்தருளி பட்டு பீதாம்பரங்களையும் விசேஷமான தளிகைகளையும் ஸமர்ப்பித்து மங்களாசாஸநம்செய்து, உடுத்துக் களைந்த பீதகவாடை, திருமாலை முதலான ஸகல மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு பிறகு அங்கிருந்து வீடுகோறு வரிசையாக சிங்கப்பிரான் ஞானப்பிரான் தேவபிரான் திருக்குறுங்குடிநாச்சியார் (பெரிய பிராட்டியார்) திருவேங்கடமுடையான் வீற்றிருந்த நம்பி மலைகொண்ட நம்பி மாறனடி பணிந்துய்ந்த விராமாநுசன் மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த மங்கையர் கோன் முதலானவர்களையும் யதீந்த்ரப்ரவணரான மணவாள மாமுனிகளையும் மங்களாசாஸநம் செய்தருளி, ஆங்காங்கு ப்ரஸாதங்களையும்பெற்று, ஸ்ரீவைஷ்ணவத்திரள் புடைசூழ மடத்துக்கு எழுந்தருளியாயிற்று பிறகு வேத பாராயண திவ்யப்ரபந்த ஸேவை தொடங்கப்பட்டு ஸ்ரீஸ்வாமிக்கு நவதிருப்பதிகள் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய பல திவ்யதேசத்து எம்பெருமான்கள் அனுப்பிய திருப்பரிவட்டம் முதலிய ப்ரஸாத மரியாதைகள் பஹு

மானிக்கப்பட்டு சாத்துமுறையும் நடந்தேறியது. அங்கு திரண்டிருந்த ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் மற்றும் மஹாஜநங்களுக்கும் தக்கபடி சந்தனம், தாம்பூலம், பலம், வஸ்த்ரம், ஸம்பாவனை, பூரிதக்ஷிணை முதலியன அதிவிமர்சையாக விநியோகிக்கப்பட்டு விசேஷமான ததீயாராதநமும் நடைபெற்றது. அச்சமயம் ஸ்ரீஸ்வாமியின் பெருமைகளை விளக்கிக்காட்டும் பத்ய மாலிகையொன்று ஸமர்ப்பிக்கப்பட்டது. மடத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் ஸ்ரீராமாநுஜ திவ்யப்ரபந்த பாடசாலை வித்யார்த்திகளை ஸ்ரீஸ்வாமி பரீக்ஷித்து இருபத்து மூவர்க்கு வஸ்த்ரபஹுமானம் செய்தருளினார்.

அன்று இரவில் ஸ்ரீவைஷ்ணவக்குழாங்களும் சிஷ்யபரிஜனங்களும், கோவில் அனைத்துக் கொத்தும் புடை சூழ, ஸகல விருதுகளுடன் ஸ்ரீஸ்வாமி பட்டத்துத் தங்கப் பல்லக்கில் எழுந்தருளியிருந்து பட்டணப்ரவேசம் (திருவீதிவலம்) செய்தருளின வைபவம வாசாமகோசரம். ஸ்ரீமத் ஆதி பேரருளாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியின் திருவடி நிலைகள் முன்பு எழுந்தருள, யதிராஜவிம்சதி தாம பஞ்சகம் முதலிய ஸ்தோத்ரங்களும் வெகு கம்பீரமாக ஸேவிக்கப்பட்டன.

மறுநாள் கடைவெள்ளிக்கிழமை யாதலால் நம்பியெம்பெருமான் காலை விசேஷமான அலங்கார திருமஞ்சனமும் போஜ்யாஸநமும், இரவு பரமவிலக்ஷண மான திருவீதிப்புறப்பாட்டையும் கண்டருளினன். கூடியிருந்த பக்த பாகவதோத்தமர்களெல்லாம் மிகவும் மனமுவந்து இந்த விலக்ஷணமான கோஷ்டிக்கு நித்ய ஸ்ரீர் நித்யமங்களமென்று பல்லாண்டுபாடிக் களித்தனர்.

சோதிடர்க்கு விருதளித்தல்

தில்லைத் திருச்சித்திரகூடமென்னும் (சிதம்பர) க்ஷேத்ரத்தில் வாழும் ஸ்ரீமான் உ. வே. S. **ராமஸ்வாமி ஐயங்கார்** என்பவரை பலர் நன்கு அறிந்திருக்கிறார்கள். இவர் ஸ்ரீராமாநுஜமிஷன் (இந்தியா) என்கிற தர்ம ப்ரசாரக்குழுவின் ப்ரசாரகராக (Chief Organiser) பணியாற்றி வருகிறார். மற்றும் பல லௌகிக வைதிக நற்பணிகளிலும் பங்குகொண்டு வருகிறார். இவர் சோதிட நூல்களையும் கற்றறிந்து ஜாதகப்பலன் முதலியவற்றை விளக்குவதில் நல்ல திறமைபெற்றிருப்பதால், இதை யறிந்த நாம் மனமுவந்து இவர்க்கு,

"தைவஜ்ஞ சக்ரவர்த்தி"

என்கிற விருதை அன்புடன் சூட்டியிருக்கிறோம். —P. B. A. 2—11—75

ஸ்ரீ:

ஆதர்பாக்கம் கண்ணனடியேன் செய்யும் விண்ணப்பம்

உத்யோக முறையில் லௌகிகமாகக் காலங்கழித்துவருமடியேன் இரண்டொரு வருஷகாலமாகவே ஸ்ரீகாஞ்சீபுரம் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்வாமிகளின் காலக்ஷேபங்களில் ஈடுபடவும், ஸ்வாமியின் மாஸாந்தப் பத்திரிகையான ஸ்ரீராமாநுஜனையும், மற்றும் பலபல நூல்களையும் வாசிக்கவும் பாக்கியம் பெற்றேன். மாதந்தோறும் ஸ்ரீராமாநுஜன் பத்திரிகையை வாசிக்கும்போது, இதுகாறும் வெளிவந்த பழையபத்திரிகைகளையெல்லாம் தருவித்து ஒன்று விடாமல் எல்லாவற்றையும் பூர்த்தியாக வாசிக்கவேணுமென்கிற அபிலாஷைமேலிட்டது. இப்பத்திரிகை இருபத்தெட்டு வருஷங்களுக்கு மேலாக நடைபெற்று வருவதாய்த் தெரிந்தது. 313வது ஸஞ்சிகையுள்ள பத்திரிகையிலிருந்துதான் அடியேன் இதில் அந்வயிக்கும் பாக்கியம் பெற்றேன். திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான் உ.வே. M. A. வேங்கடகிருஷ்ணன்ஸ்வாமி ஸ்ரீராமாநுஜன் ஆரம்பம்முதல் வெளிவந்துள்ள வியாஸங்களுக்கெல்லாம் அகராதிப்பட்டவணையெழுதிவெளியிட்டிருந்தார்; அதைக்கண்டபோது ஸ்ரீராமாநுஜன் ஆரம்பஸஞ்சிகை தொடங்கி வரிசையாக எல்லாவற்றையும் ஒன்று விடாமல் ஸம்பாதித்து வாசிக்க வேணுமென்று குதூஹலம் அதிகரித்து விட்டது. ஸ்ரீஸ்வாமியின் க்ரந்தமாலா ஆபீஸுக்கு எழுதினேன், நேரிலும் விடைகொண்டு என் அபேக்ஷையைத் தெரிவித்தேன். பழைய பத்ரிகைகள் தொடர்ச்சியாகக் கிடைக்க வழியில்லையென்று தெரிந்துகொண்டேன். கீழே ப்ரஸ்தாபித்த ஸ்ரீவேங்கடகிருஷ்ணன் ஸ்வாமி ஆதிமுதல் எல்லாச்சஞ்சிகைகளையும் பல ஸம்புடங்களாக பைண்டு செய்வித்து வைத்துக் கொண்டிருக்கிறாரென்றறிந்து அவரிடம் சென்று கெஞ்சிக்கேட்டு வாங்கிப்பார்த்து, பெரிய அமுதக்கடல் கண்டதாகவே [illegible] உள்ளமும் உடலும் பூரித்தேன்.

விஸ்தாரமாக எழுதுவதை நிறுத்தி இந்த விண்ணப்பத்தைச் சுருக்கமாக முடிக்கிறேன். ஸ்ரீராமாநுஜன் பத்திரிகையிலும், இப்பத்திரிகை ஆரம்பிப்பதற்கு முன்னே ஸ்ரீஸ்வாமிகள் நடத்திவந்த அம்ருதலஹரீபத்திரிகையிலும் உபந்யாஸரூபமாக வெளிவந்துள்ள கட்டுரைகளையெல்லாம் இவ்வுலகம் நீடூழிகாலம் அனுபவிக்க வேண்டுமாதலால் **அண்ணாஸ்வாமி ஸூக்திஸஹஸ்ராம்ருதம்** என்று பெயரிட்டு ஸ்ரீஸ்வாமியினுடையவைகளாக வெளிவந்துள்ள எல்லா வ்யாஸங்களையும் வைணவவுலகுக்கு வாரி வழங்கவேணுமென்று தீர்மானித்து முதல் தொகுப்பை அச்சிட்டு வெளியிட ஆரம்பம் செய்து விட்டேன். எம்பெருமான் திருவருளினாலும் பக்தபாகவதோத்தமர்களின் ஆசியினாலும் அடியேனுடைய இந்த பெரியமனோரதம் இடையூறின்றி நிறைவேறுமாக. இந்த ஆசையைப் பல பெரியோர்களிடம் விண்ணப்பம்செய்தேன்; ஒவ்வொருவரும் ஏககண்டமாக அபிநந்தனம் செய்தபடியால் அதையே சுபசகுனமாகக் கொண்டு இன்று விஜயதசமியன்று ஆரம்பம் செய்துவிட்டேன். அடியேனுக்கு ஆசைமட்டும் பெரிதேயொழிய அறிவு [illegible] ஆயினும் ஸ்ரீஸ்வாமியினுடைய திருப்பேரனான உபயவே. அக்காரக்கனி [illegible] ஸ்வாமியினுடையவும், திருவல்லிக்கேணி ஸ்ரீவேங்கடகிருஷ்ணன் ஸ்வாமியினுடையவும் திருவருளைக்கொண்டே இதில் ப்ரவர்த்தித்திருக்கிறேன்.

இந்த வெளியீட்டின் கார்யாலயம் முதலான விவரங்களைப்பற்றி
அடுத்த மாதத்தில் தெரிவிக்கலாகும்.

[illegible]—[illegible]—1975 } இப்படிக்கு,
[illegible], திருவோணம் } தாஸன், கண்ணன்.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

அண்ணங்கராசார்யஸ்வாமி உபந்யாஸ ஸஹஸ்ராம்ருதத்தில்

முதலுபந்யாஸம்

★ அம்ருதஸாகராந்தர் நிமக்ந ஸர்வாவயவஸ் ஸுகமாஸீத ★

ஸ்வாமி யெம்பெருமானார் அருளிச்செய்த திவ்யக்ரந்தங்கள் நவவிதிக
ளென்றும் நவரத்னங்களென்றும் ப்ரஸித்தமானவை அவற்றுள் ஸ்ரீவைகுண்ட
கத்யத்தின் ஸமாப்திவாக்யம் அடியேனுடைய சித்தத்தில் நிச்சலுமுள்ளது.
அதாவது ❖அம்ருதஸாகராந்தர் நிமக்நஸர்வாவயவஸ் ஸுகமாஸீத❖ என்பது.
"அமுதக்கடலுள் அழுந்திய தனது ஸர்வாவயவங்களையு முடையனாக இருக்
கக்கடவன்" என்பது இந்த வாக்கியத்தின்பொருள். பகவத் பாஷ்யகாரருடைய
ஸ்ரீஸூக்திகளை அடியேன் ஆழ்ந்து நோக்கும் போது பலவிடங்களில் "இன்ன
ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை யடியொற்றி இங்ஙனே யருளிச்செய்கிறார் ஸ்வாமி"
என்று ஆசார்ய கடாக்ஷவிசேஷத்தினால் அடியேனுக்குத் தோன்றுவதுண்டு.
மேலெடுத்த ❖அம்ருதஸாகராந்தர் நிமக்நேத்யாதி ஸ்ரீஸூக்தி எந்த ஆழ்வார்
பாசுரத்திலிருந்து அவதரித்தது? என்று ஆராய்ந்தவளவில் நம்மாழ்வாருளிச்
செய்த நான்கு திவ்யப்ரபந்தங்களுள் இரண்டாவதான திருவாசிரியத்தில் இரண்டா
வது பாசுரத்திலிருந்து அவதரித்ததென்று திண்ணமாக எண்ணலாயிற்று. அப்பா
சுரத்தின் முற்பகுதியும், "அம்ருதஸாகராந்தர் நிமக்நேத்யாதி ஸ்வாமி ஸ்ரீஸூக்தியின்
முற்பகுதியும் பாஷைவேற்றுமையேயன்றிக் கருத்துவேற்றுமை யற்றிருப்பதை
நன்கு காணலாம். திருவாசிரியப்பாசுரம் "உலகுபடைத்துண்டவெந்தை. அறை
கழல் சுடர்ப்பூந்தாமரை சூடுதற்கு. அவாவாருயிருருகியுக்க, நேரியகாதலன்பிலின்
பின் தேறல், அமுதவெள்ளத்தானாஞ்சிறப்ப..." இத்யாதி. இதையே மொழிபெயர்த்
தருளியுள்ளார் ஸ்வாமி ஸ்ரீவைகுண்டகத்யாவஸானத்திலெனபதை அடுத்தபடியாக
விவரிக்கிறேன். மேலேகாட்டிய திருவாசிரியப்பாசுரப்பகுதியின் பொருளை முந்துற
முன்னம் விவரிக்கிறேன். [உலகுபடைத்துண்டவித்யாதி-] எம்பெருமானுடைய
திருவடித்தாமரைகளை நாம் சிரமேல் அணிந்துகொள்ள வேணுமென்று ஆவல்
கொண்டு அந்த ஆவலினால் நெஞ்சு நீர்ப்பண்டமாக உருகி மேன்மேலும் பரபக்தி
பரஜ்ஞான பரமபக்திகள் தலையெடுத்து அந்தநிலைமையில் அமர்ந்திருக்கையாகிற
அம்ருதஸாகரத்திலே ஆழ்ந்திருப்பவனாய்...என்றவாறு இப்பாசுரத்தில் "அறை
கழல் சுடர்ப்பூந்தாமரை சூடுதற்கு......நேரியகாதல் அன்பிலின்பின்தேறல் அமுத
வெள்ளம்" என்றவிடத்து, "காதல் அன்பு இன்பு தேறல் அமுதவெள்ளம்" என்ற
ஒருபொருட்பன்மொழிகளையே அடுக்கியிருக்குமழகைநோக்கி உள்குழைந்தருளின
எம்பெருமானார், கத்யத்தில்

> ❮ கதா அஹம் பகவத்பாதாம்புஜத்வயம் சிரஸா தாரயிஷ்யாமி! கதா
> அஹம் பகவத்பாதாம்புஜத்வயபரிசர்யாஶயா......கதா அஹம் பகவத்
> பாதாம்புஜத்வய பரிசர்யா கரணயோக்ய:.........பகவத் பரிசர்யாயாம்
> ஆஶாம் வர்த்தயித்வா ❯

இத்யாதிஸூக்திகளைத் தாம் வாய்வெருவும் முறையிலே அருளிச்செய்தாராயிற்று.

ஸ்வாமி ஸாதித்தருளின *அம்ருதஸாகராந்தர் நிமக்ந ஸர்வாவயவத்வம் ஸ்ரீவைகுண்டத்திலே; *முகில் வண்ணவானத்திலமையவர் சூழவிருப்பர் பேரின்ப வெள்ளத்தே' (7-2-11) என்று திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச்செய்த பேரின்பவெள்ளத் திருப்பும் திருநாட்டிலேயாம். *இச்சுவைதவிர...அச்சுவைபெறினும் வேண்டேன்* என்றிருக்கிற நாம் *வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம் புகழவே(8-8-11) *இங்கேகாண இப்பிறப்பே மகிழ்வர் எல்லியுங்காலையே*(8-5-11) என்கிறபடியே இக்கலத்திலேயே உலகமெல்லாங்காணப் பேரின்பவெள்ளத்தில் அமர்ந்திருக்கவேணுமானால் 'முன்னவராம் நங்குரவர்மொழிகள் உள்ளப்பெற்றோம் முழுதுமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்* என்ற மணவாளமாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்தியின்படியிருத்தலொழிய வேறொன்றும் நானறியேன்.

அமரகோசத்தில் அமரர்களின் பெயர்களைச் சொல்லிவருமிடையில் "அமர்த்யா அம்ருதாந்தஸ:" என்று கூறப்பட்டது. (அம்ருதாந்தஸ:) என்பதற்கு அமுதத்தை உணவாகவுடையவர்கள்' என்று பொருள். அந்த அமுதம் எப்படியிருக்குமென்று யாருங் கண்டிலர். **அமர்த்யா:** என்னும் பெயர்க்கு எதிரிடையாக **மர்த்யா:** என்று பெயர் பெற்றிருக்கின்ற நாம் பருகும் அமுதமும், அல்லும் பகலும் அடைக்கூடும் அமுதக்கடலும் அந்த அமரர்களுக்கு ஒருகாலும் கிடைக்காது. இவ்வுலகத்திலுள்ளவர்களிலும் *தேகாவலோக்ய **ந்ருந்ந:** பரிபுஞ்ஜதே தம்* என்று பட்டர் அருளிச்செய்தபடியே சில பாக்யசாலிகளுக்கேயன்றோ கிடைக்குமது. குலசேகராழ்வார் தமது திருமொழியில் *எம்பெருமானுறன் சரிதை செவியால் கண்ணாரப் பருகுவோம் இன்னமுதம் மதியோமன்றே* என்கிறார். பெரியாழ்வார் தமது திருமொழியில் *அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொண்டதே* என்கிறார் அவரே தமது திருமொழியைச் சாற்றும்போது (5-4-11) ***அந்தணர்தமமுதம்*** என்று எம்பெருமானுக்கொரு திருநாமம் சாத்துகிறார். [ஆயரேற்றையமரர் கோவை அந்தணர்தம அமுதத்தினை]என்கிற பாசுரம் அமுதமே வடிவெடுத்தன்றோவிருப்பது.

பிள்ளைப்பெருமாளையங்கார் திருவரங்கக் கலம்பகத்தின் முகப்பில் நம்மாழ்வார்க்குக் காப்புச் செய்யுள் இடுகின்றவர் 'மறைப்பாற்கடலைத் திருநாவின்மந்தரத்தால் கடைந்து, துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிழ்தம், கறைப்பாம்பணைப்பள்ளியா னன்பரீட்டங் களித்தருந்த, நிறைப்பான் கழலன்றிச் சன்ம விடாய்க்கு நிழலில்லையே* என்றார். இப்பாசுரம் *கண்ணிநுண்சிறுத்தாம்பையும் பெயரன்றோ விளக்குகின்றது. அந்தக் கலம்பகந்தன்னிலேயே அழகியமணவாளனுடைய திருப்புயங்களை வருணிப்பதற்கு ஒரு பிரமாணமான பாசுரம் பணிக்கின்றாரையங்கார்; *கதநதி வழங்கு தடுபடு செம்பொன்* என்று தொடங்கி *அழகியமணவாளர் தோற்றப் புயங்களே* என்று தலைக்கட்டுவது அந்தச் செய்யுள். அதில் *அருமறை துணிந்த பொருள்முடிவை யின்சொலமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பியருளிய சடகோபர் சொல்பெற்றுயர்ந்தன* என்பது ஓர் அடைமொழி. இதில் *அமுதொழுகுகின்ற தமிழ்* என்றது திருவாய்மொழியை.

பதினாறடி வேங்கைப் புலியென்று பல பெரியார் வழங்குமிச் செய்யுள் முழுவதையும் ஒரு ஸமயம் அடியேன் திருவரங்கம் பெரிய கோயிலில நாலுநாள் உபந்யஸிக்க ப்ராப்தமானபோது *அருமறைதுணிந்த பொருள்முடிவை யின்சொல

அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பியருளிய சடகோபர் சொல்பெற்றுயர்ந்தன* என்று இவ்வடியைச் சொல்லக் கேட்டவர்கள்—பொருளில் மனஞ்செலுத்தாமல் சொல்வடிவந்தன்னிலேயே கண்ணநீர் கைகளாலிறைப்பவர்களாயினர். *அமுதொழுகுகின்ற தமிழ்* என்ற சொற்றொடரை எத்தனை தடவை சொன்னாலும் பர்யாப்தி பிறவாதே. அமுது ஒழுகிக்கொண்டேயிருக்கிறதே!

சக்ரவர்த்தி திருமகனார்படியைப் பிராட்டியிடம் பேசுகின்ற திருவடி °அநித்ரஸ் ஸததம் ராம: ஸுப்தோபி ச நரோத்தம:: ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே° என்கிறார். இங்கு (ஸீதேதி **மதுராம் வாணீம்**) என்றதில் மிகமிக ஆராய்ச்சி செலுத்தவேணும். உண்ணாதுறங்காதிருக்கும் பெருமான் கதாசித் உறங்கினாலும் உணர்ந்தெழும்போது ஸீதே! என்று சொல்லிக்கொண்டே எழுகிறாராம். அப்போது அமுதொழுகினபடியைத் திருவடி கண்டிருந்தபடியால்தான் *ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே* என்று கூறலாயினன் என்பர் பேராசிரியர்கள். **மதுராம் வாணீம்** என்று ஒரு ஸாகாம்ருதம் சொல்ல ப்ரஸக்தியுண்டோ? நெஞ்சு கனிந்து சொல்லவல்லார் சொல்லும்போதன்றோ அமுதொழுகக் காண இயலும்.

இந்த ப்ரஸங்கத்தில் பலபல அமுத வெள்ளங்கள் நினைவுக்கு வருகின்றன. எதையெழுதுவேன்! எதைவிடுவேன்! °**அமுதிலு மாற்றவினியன்**° என்கிற திருவாய்மொழிப்பாசுரம் ஒருபாஷண்டியின் நெஞ்சை உருக்கிவிட்டதென்கிற இதிஹாஸத்தை ஸ்மரித்து நிற்கிறேன். ஸ்ரீமந்நாதமுனிகள் திருவாய்மொழிக்குத் தனியனிடத் தொடங்கும்போதே °பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்° என்றார். இதற்கு மூலம் °தொண்டர்க்கு **அமுதுண்ணச்** சொல்மாலைகள் சொன்னேன்° என்கிற திருவாய்மொழிப் பாசுரம்......நெஞ்சழிந்து இவ்வளவோடு நிற்கிறேன். ...

2. ஸம்பந்தஜ்ஞானமே ஸகலநன்மைகளுக்கும் மூலம்

எம்பெருமான், சேதனர்களையும் அசேதனங்களையும் சரீரமாகக் கொண்டவன். அவன் பெருமையில் தலைநின்றவன். நாம் சிறுமையில் தலை நிற்பவர்கள். நாம் அப்பெருமானை வழிபடுதற்கு உரியோம். அப்பெருமான்திறத்து நாம் செய்யக்கூடிய வழிபாடுகள் பலவகைப்பட்டிருக்கும். அவற்றைப்பற்றின விரிவுகள் சாஸ்திரங்களில் விசதமாகக் காணக் கிடைக்கும். அந்த வழிபாடுகளெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். அவாப்த ஸமஸ்தகாமனான பெருமானுக்கு நாம் செய்யும் வழிபாடுகள் என்ன பயனைத் தரப்போகின்றன! நம்முடைய ஸ்வரூபம் நிறம் பெறுதற்காகவே நாம் வழிபடுவோமத்தனை. எம்பெருமான் அல்பஸந்துஷ்டன். அநாதிகாலமாக அவனோடு எதிரம்பு கோக்கின்ற (அதாவது—விவாதப்படுகின்ற) கொடிய ஸம்ஸாரிகள் நாம். இந்நிலைமையில்நின்றும் நாம் நீங்கி அவனோடு நமக்குண்டான ஒழிக்கவொழியாத உறவுகளைத் தெரிந்துகொண்டோமாயின் இதுவே பரம பூஜையாகும். ஸம்பந்தஜ்ஞான மாத்திரமே நமக்கு, மேலான நன்மைகளுக்கு எல்லை; அஃது உண்டானால் நாம் எம்பெருமானோடு விவாதப்படமாட்டோம். விவாதம் தொலைந்ததென்னில் எவ்விதமான பணிவிடைகளும் நாம் செய்தோமாவோம். மநுஸ்ம்ருதியில் (8—92) "யமோ வைவஸ்வதோ ராஜா யஸ் தவைஷ ஹ்ருதி ஸ்தித:, தேந சேத் அவிவாதஸ் தே மா கங்காம் மா குரூந் கம:" என்று சொல்லிற்று; இதன் கருத்

னாவது:—ஸர்வநியாமகனும் தண்டதரனும் (அல்லது ஸூர்யவம்சத்திற்பிறந்தவனும். (அல்லது) ஆதித்யமண்டலவாஸியாயும்) எல்லார்க்கும் இனியனுமிருக்கிற எம்பெருமான் உனது உள்ளத்திலுள்ளேயுளன்; அவனோடு விவாதம் நெடு நாளாக அநுவர்த்தித்துக்கொண்டு வருகின்றது; அதாவது, இந்த ஆத்ம வஸ்துவை அவன் தன்னுடையதாக அபிமானித்தால் அதற்கு இசையாதே 'இது என்னுடையதுதான்' என்று செருக்கியிருப்பதுவே விவாதம். இது தொலைந் தொழியுமாகில், கங்கை முதலிய புண்ய க்ஷேத்ரங்களை ஸேவிக்கப் போகவும் வேண்டா. அஹங்கார மமகாரங்களை உள்ளே வைத்துக்கொண்டு பிராயச்சித்தம் பண்ணுகையாவது ஒரு பாத்திரத்தினுள்ளே அசுத்த வஸ்துவை யிட்டுவைத்து மேலே பளபளவென்று சுத்தி செய்வது போன்றதாதலால், உள்ளே எம்பெருமானோடு விவாதத்தை வைத்துக்கொண்டே க்ஷேத்ர தீர்த்தயாத்திரை செய்வது எதற்கு? அந்த விவாதம் தொலைந்துவிட்டால் இருந்தவிடத்திலேயே பரமசுத்தியுண்டாதலால் ஒரு க்ஷேத்திரத்தையும் ஒரு தீர்த்தத்தையும் தேடிப் போகவேண்டா என்றபடி. ஆகவே விவாதம் நீங்குமளவே வேண்டுவது. கூரத்தாழ்வானும் வரதராஜஸ்தவத்தில் "த்வத்ஸ்வஸ்வமஸ்ய ஹி மம ஸ்வைரஸப்ரஸக்தம் தச்சோரயந்நயமஹம் கில சஸ்கல ப்ராக், த்வம் மாமிதே இதி மாம் அபிமத்யவேஸ்ம ஹஸ்திச! ஸம்ஸமய நஸ் தமிமம் விவாதம்"—என்ற ச்லோகத்தினால் இதனைத் தெரிவித்தருளினார். ஸம்பந்தவுணர்ச்சி உறைப்பாக உண்டாவதுதான் விவாதம் தொலைந்தபடியாகக் கருதத்தக்கது. ஸம்பந்தஜ்ஞான முண்டான வளவிலேயே நாம் வாழ்ச்சிபெற்றோமாவோம். இதுபற்றி ஈடு முப்பத்தாறுயிரப்படியில் (1-2.7) ஒரு இதிஹாஸம் விநோதமாகக் காட்டப்பட்டுள்ளது; அதாவது—

ஒரு நகரத்தில் ஒரு வணிகர்தலைவன் இருந்தனன். அவன் வெளிநாடுகளில் நீண்டகாலம் வஸித்து வர்த்தகஞ் செய்து விசேஷமாகப் பொருள் படைக்க விரும்பி த்வீபாந்தரப்பயணம் செய்ய முயன்றான். அத்தருணம் அவனது மனைவி கருவுற்றிருந்தாள். அப்போதே அவன் புறப்பட்டு த்வீபாந்தரம் சென்று சேர்ந்தனன். பிறகு இரண்டொரு மாதங்கடந்த பின் அவனது மனைவி ஊரில் ஒரு புதல்வனையீன்றாள். அம்மகன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சுக்லபக்ஷச் சந்திரன் போன்று வளர்ந்து வருகின்றான். த்வீபாந்தரத்தில் வர்த்தகஞ்செய்து வாழ்ந்துகொண்டிருக்கும் அவ்வணிகன் மகப்பேறு உண்டான செய்தியை யறிந்து பெருமகிழ்ச்சிகொண்டு விரைவிலேயே ஊர்வந்துசேருவதற்குப்பெருமுயற்சிசெய்தும் மேன்மேலும் வர்த்தகத்தில் மீதூர்ந்துசென்ற மிகைப்பினால் சடக்க மீண்டுவரமுடியாமல் நெடுங்காலம் அங்கேயே தங்கிவிட்டான். மகன் தானும் உரியவயது வாய்ந்தனையில் தனது குலத் தொழிலாகிய வர்த்தகத்தையே கைப்பற்றி வந்தான். வயது முதிர்ந்தவளவிலும் இவனது தகப்பன் த்வீபாந்தரத்திலேயே வாழ்கிறான். பின்பொரு நாள் அவ்வணிகனது மகன் தொழில் முறையில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்து பல சரக்குகளுடன் கடல் வழியாய் ஊர்த்துறைமுகம் வந்து சேர்ந்தான். அவன் வந்த கப்பலிலேயே அவனது தந்தையும் த்வீபாந்தரத்திலிருந்து பல மூட்டைகளுடன் ஊர் வந்தனன். அந்தக் கப்பல் துறைமுகஞ் சேர்ந்தவுடனே குமாரன் தனது மூட்டைகளை இறக்குவதாக உத்தேசித்த ஓர் இடத்திலேயே தகப்பனும் தான்

கொணர்ந்த முட்டைகளை இறக்க நினைத்தனன். இவ்விருவரும் தங்களுக்குள்ள பித்ருபுத்ரபாவ ஸம்பந்தத்தை அறியாதவர்கள்; 'இவன் நம் மகன்' என்று தந்தை அறியான். 'இவர் நம் தகப்பனார்' என்று மகனுமறியான். உண்மையில் இவர்கட்கு இவ்வுறவுமுறை தெரிவதற்கு ப்ரஸக்தியில்லையே. இக்குமாரன் பிறப்பதற்கு முன்னமே யன்றோ அவ்வணிகன் வெளிநாடு சென்றிட்டான். ஆகவே 'இவன் ஒரு வெளிநாட்டு வர்த்தகன்' என்று மகன் பாவிக்கலானான். தந்தையும் மகனை அங்ஙனமே பாவித்தான். வாணிகன் இறக்குமதியிடத்தைப்பற்றிய விவாதம் இவர்கட்கு முற்றிவிட்டது. 'இவ்விடத்தை நானே முதலில் உத்தேசித்தேன்' என்று இருவரும் நெடும்போதாக வாதாடுகின்றனர். அப்போது இவ்விருவருடையவும் உறவுமுறையை உணர்ந்திருப்பானொரு கிழவன் கண்டு 'அந்தோ! உறவு அறியாமல் இது என்ன விவாதம்?' என வருந்தி 'இவன் உன் தந்தை, நீ இவனது மகன்; ஆயிருக்க ஏதுக்கு இங்ஙனே வீண்விவாதம்? என்றறிவித்தனன். அதன் பிறகு அங்கு என்ன நடந்திருக்கவேணும்! ஸம்பந்த உணர்ச்சியுண்டானவுடனே கழிந்த நாளைக்குச் சோகித்து, இருவர்சரக்கும் ஒருசரக்காய், தந்தை ரக்ஷகனாய், மகன் ரக்ஷ்யனாய் விவாதம் தொலைத்து பரமரஸ்யத்தைப்பற்றி வாய்க்கொண்டவாறு பேச்சுக்கு நிலமாமோ?

அதுபோலவே நாமும் நிருபாதிக பிதாவாகிய ஸ்ரீமந்நாராயணனோடே 'உன் தன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது' என்னும்படியான உறவின் உறுதியை உற்றுநோக்கி ஈச்வரன் 'த்வம் மே' [நீ எனக்கு அடியவன்] என்றால், ''அஹம் மே'' (நான் எனக்கே உரியேன்) என்னும் விவாதத்தை விட்டொழித்தால் ''பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ'' என்னும்படியாக உபயவிபூதியும் நாம் தாராளமாக அநுபவிக்கும் செல்வமாகுமன்றே

மாலைப்பொழுதில் விஹாரார்த்தமாக வெளியேசென்ற ராஜகுமாரன் வழியில் அழகியதொருதோட்டத்தைக்கண்டு உள்ளே புகுந்து நோக்க நினைந்தும் கட்டுங் காவலுமாயிருந்ததுகண்டு அஞ்சிநிற்குமளவில் 'இஃது உன் தகப்பனாருடைய தோட்டங்காண்' என்று ஒரு பெரியார் தெரிவிக்க, பிறகு அச்சிறுவன் தேங்காதே புக்கிருந்து நோக்கலாயினன்-என்றவொரு கதையையுங்காட்டியருளினர் நம்பிள்ளை, ஸம்பந்தவுணர்ச்சியினாலாகும் நன்மை சொல்லுந்தரமன்று. ... ...

3. நவவிதஸம்பந்த விவரணம்

எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தம் ஒன்றன்று, இரண்டன்று; ஒன்பதுவகையான ஸம்பந்தங்கள் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்திலிருந்து கிடைக்கின்றன. அத்திருமந்த்ரம் நமக்கு மங்கலஸூத்ரம் போன்றது என்று ஆசார்யர்கள் அருளிச் செய்கிறார்கள். உலகில் ஒரு கன்னிகையின் கழுத்தில் தாலி ஏறினவாறே தம்பதிகளுக்கு பர்த்ருபார்யாஸம்பந்தம் என்ற ஒரு உறவு தான் ஏற்பட்டதாகும். திருமந்த்ரமாகிற தாலி நமது கழுத்தில் ஏறினவாறே ஒரு உறவு அல்ல; ஒன்பது உறவுகள் ஏற்பட்டனவாகும்.

எங்ஙனே யென்னில்; அதில் முதல் பதம் ப்ரணவம். அது அகாரமென்றும் உகாரமென்றும் மகாரமென்றும் [மூன்றக்ஷரமான] மூன்று பதங்கொண்டது. முதற் பதமான அகாரத்தில் மூன்று உறவுகள் தோன்றும். 1. பிதாபுத்ரபாவம். 2. ரக்ஷ்ய ரக்ஷகபாவம். 3. சேஷசேஷிபாவம். அந்த ஒரு அக்ஷரத்தில் இந்த மூன்று உறவுகள் எங்ஙனே தோன்றுகின்றன வென்னில்; அகாரத்திற்கு ப்ரக்ருதி சக்தியென்றும் தாதுசக்தியென்றும் இரண்டு வகையான சக்திகளுண்டு. "அகாரோ வை ஸர்வா வாக்" என்றும் "அகரமுதல வெழுத்தெல்லாம்" என்றும் சொல்லுகிறபடியே அகாரமாவது எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாயிருந்துகொண்டு, தனக்கு அர்த்தமான எம்பெருமான் உலகுக்கெல்லாம் முதல்வன் என்று காட்டுதலாகிற விது ப்ரக்ருதிசக்தி யெனப்படும். "ஆதிபகவன் முதற்றேயுலகு" என்ற குறளும் இதனையே காட்டிற்றுகும். ஆகவே, அகாரத்தில் ப்ரக்ருதிசக்தியினுல் ஏற்பட்ட வுறவு கார்யகாரண பாவம் (அல்லது) ஜந்ய ஜநகபாவம், (அல்லது) பிதாபுத்ர பாவம் என்பதாம்.

அந்த அகாரமானது (அவ-ரக்ஷணே) என்கிற தாதுவிலிருந்து தேறினதாகை யாலே எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்றதாகும். இதனுல் (2) ரக்ஷ்ய ரக்ஷகபாவ மாகிற வுறவு தேறிற்றுகிறது. இதுதான் தாதுசக்தி ஸித்தமெனப்படும்.

இந்த அகாரத்தின்மேல் வியாகரண சாஸ்த்ரப்படி (வைதிக ப்ரக்ரியையில் சதுர்த்தீ விபக்தியிருந்து லோபித்ததாகக் கொள்ளப்படுகிறது. இல்லையாகில் அந்வயிக்கமாட்டாது. அந்த விபக்தியானது 'அவனுக்கு சேஷப்பட்டது' என்கிற பொருளைக் காட்டுதலால் (3) சேஷ சேஷி பாவம் என்கிற வுறவு தேறிற்றுகும்; ஆக அகாரத்தில் மூன்றுறவுகள் தேறின.

இனி அடுத்துள்ள உகாரமானது அவதாரணப் பொருளதாய் எம்பெருமானுக்கே சேஷப்பட்டது என்று காட்டுதலால் "கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லாலறியாக் குலமகள் போல்" (பெருமாள் திருமொழி 5-1) என்கிறபடியே (4) பதிபத்நீபாவமாகிற உறவு தேறுகின்றது.

அதற்கு அடுத்துள்ள மகாரமானது "மந-ஜ்ஞானே" "மந-அவபோதநே" என்கிற தாதுக்களிலிருந்து நிஷ்பந்நமாகி ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுதலால் (5)ஜ்ஞாத்ரு ஜ்ஞேயபாவமென்கிற உறவு தேறிற்றுகும். எம்பெருமான் அறியப்படுமவன், ஆத்மா அறிகின்றவன் என்றவாறு. "ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்கிற பொய்கையார் பாசுரம் இங்கு அநுஸந்தேயம்.

அதற்குப்பிறகு உள்ள நம: பதத்தினுல் தன்னை ரக்ஷித்துக்கொள்வதில் தனக்கு ஸம்பந்தமான உரிமையும் இல்லையென்று காட்டுகிற முகத்தினுல் ஆத்ம வர்க்கமெல்லாம் எம்பெருமானுடைய ஸொத்து என்று தெரிவிப்பதனுல் (6) ஸ்வஸ்வாமி பாவம் என்கிறவுறவு தேறிற்றுகிறது.

இனி நாராயணபதத்தை யெடுத்துக்கொண்டால் இதற்குத் தத்புருஷ ஸமாஸமென்றும், பஹுவ்ரீஹி ஸமாஸமென்றும் இருவகையான வ்யுத்பத்தி மார்க்கங்கள் கொள்ளப்பட்டு, நாரபதார்த்தமான ஸகலவஸ்துக்களுக்கும் எம்பெருமான்

ஆதாரமென்றும், அந்த ஸகல வஸ்துக்களையும் தான் ஆதாரமாகவுடையவனென்றும் தெரிந்துகொள்ளுகிறோம். ஆதலால் நாராணும் அயநம் என்கிற தத்புருஷனால் (7) ஆதாராதேயபாவமென்கிற உறவு தேறுகின்றது. நாரா: அயநம் யஸ்ய ஸ: என்கிற பஹுவ்ரீஹியால் (8) சரீரசரீரிபாவமென்கிற வுறவு தேறுகின்றது. நாரங்கள் பகவானிடத்திலே யிருக்கின்றன என்பது தத்புருஷ ஸித்தம். நாரங்களிலே பகவானுளன் என்பது பஹுவ்ரீஹி ஸித்தம். அவற்றிலே இவனிருப்பதாவது அவற்றை உடலாகக்கொண்டு தான் அவற்றுக்கு உயிராக இருப்பதேயாதலால் இதனால் சரீராத்மபாவம் ஸித்தித்ததென்னக் குறையில்லை.

இனி அந்த நாராயண பதத்திலுள்ள சதுர்த்தியானது, காகாக்ஷிந்யாயத்தாலே முன்னும் பின்னும் தன்னிடத்திலும் அந்வயிக்கின்ற நமஸ்ஸினால் பரிஷ்காரம் பெற்று, நாராயணனுக்குச் செய்யப்படுகின்ற கைங்கரியத்தினாலாகும் போகமும் அவனுக்கேயன்றி இந்த ஜீவனுக்கில்லையென்று நிஷ்கர்ஷித்துக் காட்டுதலால் (9) போக்த்ருபோக்யபாவம் என்கிற உறவைத் தெரிவிக்கின்றது. எம்பெருமான் போக்தா, ஜீவாத்மா போக்யன் என்றவாறு. ஜீவாத்மாவை போக்தாவாகவும் எம்பெருமானை போக்யனாகவும் கொள்வதும் ஒருபுடையுண்டெனினும் திருமந்திரத்தில் வடிக்கட்டின பொருள் முந்துறப் பணித்ததேயாகும் ஆகத் திருமந்திரத்தினால் நவவித ஸம்பந்தங்கள் தெரியவந்தன இவற்றைச் சிந்தையில் பதியவைத்துக்கொள்ளுதற்காக 'பிதா ச ரக்ஷகச் சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:, ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்யமநூதித:" என்கிற ச்லோகத்தைப் பெரியார் பணித்தனர். ... ...

4. ரஸிகர்களிருவரின் ஸம்பாஷணை

ஓரிடத்தில் ஒருநாள் ரஸிகர்களிருவர் கூடினர். மதுரமான வஸ்துவைச் சொல்லென்று ஒருவர் மற்றொருவரைக் கேட்கிறார். அவர் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார், அதை மறுத்துப் பரம மதுரமானது இன்னதென்கிறார் முதலில் வினவினவர். இதை ஒரு சுலோகமாக அமைத்திருக்கின்றேன், அது வருமாறு—

அம்ருதமம்ருதம் கஸ் ஸந்தேஹ:? ஸிதாபி ச ஸா ஸிதா
மது ச மது தத் த்ராக்ஷா த்ராக்ஷா ததேவ ச பாயஸம்;
மதுரமகிலம் வஸ்து ப்ராப்தம் மயேதி யதி க்ஷிதௌ
கதிசித்அபிதித்ஸேயுஸ் ஸத்யம் ததேவ மடாரிவாக்.

(விவரணம்) மதுரமானவொரு வஸ்துவைச் சொல்லென்று கேட்டதற்கு அம்ருதம்—என்று விடைகூறினன். [அம்ருதமம்ருதம் கஸ் ஸந்தேஹ:] அம்ருதம் அம்ருதந்தான், என்ன ஸந்தேஹம்? என்றான் வினவினவன். இதன் கருத்து மேலே விளங்கும்.) இன்னொரு மதுரவஸ்துவைச் சொல்லென்ன, ஸிதா என்றான். (வெள்ளை சர்க்கரை யென்றபடி.) வெள்ளை சர்க்கரை வெள்ளைசர்க்கரைதானென்றான் வினவினவன். இன்னொரு மதுரவஸ்துவைச் சொல்லென்ன, மது என்றான்; மது மதுதான் என்றான் வினவினவன். இன்னுமொரு மதுரவஸ்துவைச் சொல்லென்ன, த்ராக்ஷா என்றான். த்ராக்ஷை த்ராக்ஷைதான் என்றான் வினவினவன். இன்னொரு மதுர

[illegible]வைச் சொல்லென்ன, பாயஸம் (கன்னல்) என்றான். கன்னல் கன்னல்தான் என்றான் வினவினவன். அதன்மேல், அது அது தான், அது அது தான் என்று சொல்லிவருகிற உன்னுடைய கருத்து யாதோ? என்று கேட்டான் வினவப் பட்டவன்.

உத்தரார்த்தம் முழுவதும் அதற்கு விடை கூறுவதாம். "அம்ருதம், ஸிதா, மது, த்ராக்ஷை, பாயஸம் முதலான மதுரவஸ்துக்களெல்லாவற்றையும் நான் பருகி னேன்" என்று இந்நிலத்தில் சிலர் சொல்ல விரும்பினால் அது ஒரே ஒரு வஸ்துதான்; அதுவென்னில், நம்மாழ்வாருடைய திருவாய்மொழியொன்றே அது — என்பது [illegible]னுடைய கருத்து. ஆழ்வார் எம்பெருமானை யநுபவிக்கும்போது "யானுந் தானுமெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம், தேனும் பாலும் நெய்யுங் கன்ன லமுதுமொத்தே" என்றும், "கன்னல்பாலமுதாகிவந்து என்னெஞ்சங்கழியானே" என்றும், "எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே திருமாலிருஞ்சோலைக்கோனே" என்று மருளிச்செய்து அநுபவிக்கிறார். அந்த போக்யவஸ்துக்களெல்லாம் நமக்கு எது வென்றால், நம்மாழ்வாருடைய திருவாய்மொழியொன்றேயென்னத் தட்டில்லை. இதனை "பக்தாம்ருதம்" என்ற ஸ்ரீமந்நாதமுனிகளின் திருவாக்குக்கு வ்யாக்கியானமாகக் கொள்க. மேலேயுள்ள ச்லோகத்தின் முடிவில் காணும் (சடாரிவாக்) என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள். 'சடாரே: வாக்' என்று சொல்வது ஸாதாரணம். 'சடாரிரிதி வாக்' என்று கொள்வது சிறக்கும். மதுர கவிகள் "தென்குருகூர்நம்பி என்றக்கால், அண்ணிக்குமமுதூறு மென்னு நாவுக்கே" என்று பணித்ததை விவரித்தபடி. ... ...

5. நம்பெருமாள் திருமஞ்சனத்தில் பட்டருடைய ஈடுபாடு

எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள நவவித ஸம்பந்தங்களையும் நாம் உணரப் பெறாவிடினும் "அவன் சேஷி நாம் சேஷபூதர்" என்று இத்தனையேனும் அறிய வேண்டியதும். இவ்வளவையே எம்பெருமான் எதிர்பார்த்திராநின்றான். கூரத்தாழ் வான் திருக்குமாரராகிய ஸ்ரீ பராசரபட்டர் கோயிலில் வாழும் நம்பெருமாளு டைய திருமஞ்சனங்களை ஸேவிக்குங்காலங்களில் அந்த ஸந்நிவேசத்தில் ஈடுபட்டும் [illegible] ஈடுபட்டும் சமத்காராதிசயம் பொலியப் பலச்லோகங்களை அருளிச்செய் திருக்கிறார் அவை தானைக்கும் அவருடைய திருவம்சஸ்தர்களால் திருமஞ்சன ஸமயங்களில் விண்ணப்பம் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றுள் "த்வாம் மேஹம் மே" என்ற ஒரு ச்லோகம் மிகவும் அற்புதமாக அமைந்தது. அதனை நம் ஆசாரியர்கள் [illegible]ான க்ரந்தங்களிலே கையாண்டு வருகின்றனர் இதன் அரிய பெரிய [illegible] இங்கு விவரிக்கலாகிறது. ஸ்ரீரங்கநாதன் தோளிணைமேலும் நன் மார்பின் மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலையை [illegible] திருமஞ்சனம் கொண்டருள ஸந்நத்தராயிருக்கும்படியைப் பார்த் [illegible] ப்ரயாணம் செய்ய ஸித்தராயிருக்கிறாரோ! என்று உத்ப்ரேக்ஷிக்கலாம்படி [illegible] என்று பட்டர் திருவுள்ளம் பற்றுகிறார். உலகத்தில் ப்ரயாணம் செய்ப [illegible] நூனிமாலையை யணிந்து கொண்டு ஒரு முழுக்குப்போடுவது வழக்கமாத

லால் எம்பெருமானும் அங்ஙனே செய்கிருனே என்று உல்லேகிக்கிருர். பிரமாணம் செய்யவேண்டிய ஆவச்யகதை எம்பெருமானுக்கு என்ன வந்தது என்னில், உலகத்தில் பிரமாணம் செய்பவர்கள் எதற்காகச் செய்வது வழக்கம் என்று பார்த்தால், ஒருவன் தன்னுடைய ஸொத்தைப் பிறர் கொள்ளைகொண்டால் அதைத் தனக்கு ஸ்வாதீனப்படுத்தித் தரவேணுமென்று நியாயாலயத்தில் விண்ணப்பம் செய்து கொண்டு உண்மையில் அந்த ஸொத்து யாருடையது என்று தெரிந்து கொள்வதற்காக ஸாக்ஷி விசாரணை முதலியன செய்யப்படுங்காலத்திலே தகுந்த ஆதாரங்களைக் கொண்டு உண்மையை ஸ்தாபித்துக்கொள்ள முடியாமல் அந்தோ! நம்முடைய ஸொத்தை அநியாயமாய் இழந்துவிட நேருகின்றதே! என்கிற அனுதாபமுடையார் கடைசியாக ஒருவார்த்தை சொல்லுவது-"இது என்னுடைய ஸொத்துதானென்று பிரமாணம் செய்ய நான் துளசிமாலையணிந்து முழுக்கிட்டுவிடுகின்றேன்" என்று; நியாயாதிகாரிகளும் அதனை ஆகரித்துத் தீர்ப்புக்கொடுப்பதுண்டு. இது இன்னமும் வழக்கத்திலுள்ளது. இவ்விதமாகவே எம்பெருமானுக்கும் பிரமாணம் செய்ய வேண்டிய ஆவச்யகதை நேர்ந்து விட்டதாம். அது ஏதெனில், சேதநவர்க்கம் என்கிற ஸொத்து எம்பெருமானுடையது; ஆனால் அந்த ஸொத்தை "கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்றும், "பண்டே யுன்தொண்டாம் பழவுயிரை யென்னதென்று கொண்டேன்" என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸாரிகள் கொள்ளை கொண்டார்கள். இந்த ஸொத்து என்னுடையது என்கிருன் எம்பெருமான். ஸம்ஸாரிகளோ 'இது உன்னுடையதல்ல, எங்களுடையதே' என்கிருர்கள். விவாதம் முற்றிவிட்டது. ஸம்ஸாரிகள் அடாவடியில் பலிஷ்டர்களாகையாலே அவர்களுடைய வாதமே மேம்பட்டு எம்பெருமானுடைய வாதம் தோல்வியடையும்படியான நிலைமையிலே வந்துவிட்டது. அந்தோ! அநியாயமாய் நம்முடைய ஸொத்தை இழந்துவிட நேருகின்றதே! என்கிற பரிதாபம் எம்பெருமானுக்கு உண்டாய்விட்டது 'இந்த ஸொத்து என்னுடையதுதான்' என்று பிரமாணம் செய்தாகிலும் இதனை நாம் இழவாமல் அடைந்தே தீரவேண்டும்' என்கிற அபிநிவேசம் எம்பெருமானுக்கு உண்டாய்விட்டது. அது துளசிமாலையணிந்து முழுக்கிட்டுச் செய்ய வேண்டிய காரியமாதலால் இந்தத் திருமஞ்சனமென்கிற வியாஜத்தாலே அது செய்யப்படுகிறது போலும் என்று பட்டருடைய உல்லேக சமத்காரம். ஈச்வரனுக்கும் சேதநனுக்கும் நடந்த விவாதம் ஒரு ஸம்வாதரூபமாக இந்தச் ச்லோகத்தில் அழகாய்க் காட்டப்படுகிறது. ச்லோகம் வருமாறு:—

> த்வம் மேஹம் மே குதஸ் தத் ததபி குத இதம் வேதமூலப்ரமாணாத்
> ஏதச்சாநாதிஸித்தாதநுபவவிபவாத் ஸோபி ஸாக்ரோச ஏவ!
> க்வாக்ரோச: கஸ்ய? கீதாதிஷு மம விதித:, கோத்ர ஸாக்ஷீ? ஸுதீ: ஸ்யாத்
> ஹந்த! த்வத்பக்ஷபாதீ ஸ இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத் த்வம்.

இதன் பொருள் சுருக்கமாகக் காட்டப்படுகிறது. த்வம் மே — இது எம்பெருமான் ஸம்ஸாரிசேதநனை நோக்கிச் சொல்லும் வார்த்தை. 'சேதநா! நீ என்னுடைய சரக்கு' என்றுனெம்பெருமான். அதாவது நீ எனக்கு அடிமைப்பட்டவனென்றபடி. சேதநன் ஸ்வாதந்திரியம் பாராட்டி வணங்காமுடி மன்னனாய்க் கிடந்தபடியாலே எம்பெருமான் இவ்வார்த்தை சொல்லவேண்டியதாயிற்று.

(ஸம்ஸாரி) அஹம் மே-நான் உனக்கு அடிமைப்பட்டவனல்லேன், எனக்கு நானே அரசன் என்றான். (இதைக் கவனிக்க) எம்பெருமான் 'த்வம் மே' என்றாப்போலே ஸம்ஸாரியும் பதிலுக்கு 'த்வம் மே' என்னலாமே; அதாவது, 'நானுனக்கு அடிமைப்பட்டவனோ? நீதான் எனக்கு அடிமைப்பட்டவன்' என்று ஸம்ஸாரி சொல்லியிருக்கலாமே, ஏன் அங்ஙனம் சொல்லவில்லை என்னில், இப்படிப்பட்ட பதில் ஸம்ஸாரி சொல்லியிருக்கானாகில் எம்பெருமான் பெறும்பேறு பெற்றானவனே; தான் சேஷியாயிருப்பதிலும் காட்டில் சேஷபூதனாயிருக்கையிருப்பிலே மிகவும் குதூஹலமுடையானன்றோ அவன். ஏதேனுமொருபடியாலே சேதநனோடு தனக்கு ஸம்பந்தம் ஏற்பட்டால் போதும் என்று பாரிப்பவனன்றோ அவன்; சேஷியாகவே தானிருக்கவேணுமென்கிற எண்ணம் இல்லையே அவனுக்கு. ஸம்ஸாரிகள் தன்னோடு உறவை அறுத்துக்கொண்டு போகாமல் தன்னை அடியானாகக்கொண்டு பரிமாறினாலும் பரமதிருப்தி பெறுபவனன்றோ அவன். அது தோற்றவன்றோ **'த்வம் மே'** என்று ஸாவசேஷமாய்க் கிடக்கிறது. **த்வம் மே நாத:** என்றோ **த்வம் மே ப்ரபு:** என்றோ விவக்ஷித்துச் சொன்னபடி. ஸம்ஸாரி மஹாசதுரனாகையாலே 'இவனோடு நமக்கு எவ்விதமான உறவும் தேவையில்லை; அவன் நமக்கு அடியவனாக இருக்க இசைந்தாலும் அதற்கும் நாம் இசையக்கூடாது: அடியவன்போல் இருந்து காலக்கிரமத்தில் நம்மையே அடிமைப்படுத்திக் கொள்ளவல்ல க்ரியான் இவன்; ஆதலால் இவனுடைய எல்லையிலும் நாம் செல்லாமல் இருந்து விடுவதே நமக்குக் கருதி, என்று ஸம்ஸாரி நினைத்தானாகையாலே 'அஹம் மே' என்று எம்பெருமானுக்குப் பிடிகொடாமலே விடையளித்து விட்டான். இவனும் **'த்வம் மே'** என்று பதில் சொல்லியிருந்தானாகில் அவ்வளவோடு விவாதம் சாந்தமாயிருக்குமே; அந்த பாக்யமில்லை யெம்பெருமானுக்கு.

(எம்பெருமான்)—**குதஸ் தத்** (கத்) குத:? 'அஹம் மே' என்று சொன்ன ஸம்ஸாரியை நோக்கி எம்பெருமான் கேட்கிறான். எதனால் அப்படிச் சொல்லுகிறாய்? (ஸம்ஸாரி)—**தத் அபி குத:?**—நீ, த்வம் மே என்று சொன்னாயே, அது நீ எதைக் கொண்டு சொன்னாய்? (எம்பெருமான்)—**இதம் வேதமூலப்ரமாணாத்**—சேதநனே! வேதமாகிற மூலப்பிரமாணத்தைக்கொண்டு நான் 'த்வம் மே' என்று சொல்லுவேன். *பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்* *க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:* இத்யாதி ப்ரமாணங்கள் இங்குக் கொள்ளத்தக்கன. (ஸம்ஸாரி)—**ஏதத் அநாதிஸித்தாத் அநுபவவிபவாத்**—நீ சொல்லுகிற ப்ரமாணம் ஓலைப்பட்ட ப்ரமாணமாகையாலே வெளிக்கு வரமாட்டாதது; "அஹம் மே" என்று சொன்னதற்கு ஸாதகமான ப்ரமாணம் அப்படிப்பட்டதன்று. அநாதிகாலமாக நான் ஸ்வாதந்த்ரியத்தை அநுபவித்துக்கொண்டு வருவதால், அநுபவமே ப்ரபல ப்ரமாணமாகையால் இதனால் உன்னுடைய வேதம் அடிபட்டொழிந்ததுபோமன்றோ. உலகத்திலும் ஒரு க்ருஹம் ஒருவனுடையதென்று சாஸநபத்திரங்கள் இருந்தாலும் நெடுநாளாக அந்த க்ருஹத்தை வேறொருவன் அநுபவித்துவந்தால் அவனே அதற்குச் சொந்தக்காரனாய்விடுவன் என்றும், உண்மையான உடையவன் இழந்து போய்விடுவன் என்றும் காண்கிறோம். அதுபோல் எம்பெருமானை உடையவன் என்று சாஸனமிருப்பினும் அநாதியான அநுபவம் ஸம்ஸாரியினுடையதாகையாலே அந்த சாஸநம் துர்ப்பலமாக இதனால் நிரூபிக்கப்பட்டது. ஸம்ஸாரி

யும் கிரமமான வழியிலேயே வழக்காடுகிறான் போலும். (எம்பெருமான்)—ஸோபி ஸாக்ரோச ஏவ — சேதநா! உனக்கு ஸ்வாதந்திரிய அநுபவமுண்டென்பது உண்மையே; அதை நான் அபலபிக்கவில்லை. ஆனால் அந்த அநுபவம் நிராக்ஷேப மாக இருந்தாலன்றோ செல்லும். அப்படியில்லையே. உனது அநுபவம் ஆக்ஷேபத் தோடு கூடியதாயிற்றே அதனை நீ சொல்லிக்கொள்வதனால் லாபமில்லையே! என்று னெம்பெருமான். உலகத்திலும் ஒருவனுடைய கிருஹத்தை இன்னொருவன் நெடு நாளைய அநுபவத்தில் வைத்திருந்தாலும் அந்த அநுபவத்தை அடிக்கடி சொந்தக் காரன் ஆக்ஷேபித்துக் கொண்டிருப்பதாகப் புலப்பட்டுவிட்டால் அவ்வநுபவம் செல்லமாட்டாதென்பது ப்ரஸித்தம். அதையிட்டு எம்பெருமான் இங்ஙனே வாதித்தான். (ஸம்ஸாரி) — ஆக்ரோச: க்வ? கஸ்ய ஆக்ரோச:? — என்னுடைய ஸ்வாதந்திரியாநுபவம் ஆக்ஷேபத்தோடு கூடியதென்று சொன்னாய்; அப்படிச் சொல்லிவிட்டால் போதுமா? ஆக்ஷேபம் செய்திருப்பது யார்? ஆக்ஷேபம் எவ் விடத்தில் செய்யப்பட்டிருக்கிறது? அதையெல்லாம் விசதமாகச் சொன்னா லல்லவோ உனது வாதம் ஏறும். (எம்பெருமான்)—கீதாஸு மம விதித:—(இது எம்பெருமானுடைய மறுமொழி.) 'க்வ' என்று கேட்டதற்கு 'கீதாஸு' என்பது பதில். சேதநா! பகவத்கீதை முதலானவற்றிலே (உன் ஸமூஹத்தில் தலைவனை அர்ஜுனனென்கிறவொருவனை வைத்துக்கொண்டு) சேதந ஸ்வாதந்திரியத்தை நான் ஆக்ஷேபித்திருக்கிறேனென்பதை நாடு நகரமும் நன்கறிந்ததே. என்றைக்கோ ஒருநாள் ஏதோவொரு மூலையிலே நீ ஆக்ஷேபித்திருந்தால் அது செல்லுமோ? என்று ஸம்ஸாரி சொல்லுவதற்கு இடமில்லாதபடி 'விதித:' எனப்பட்டது. கீதை நடையாடாத இடமில்லை; கீதைக்கு ப்ரசாரமில்லாத காலமுமில்லை; கீதையைத் தெரிந்துகொள்ளாதவ்யக்தியுமில்லை என்ற அபிப்ராயங்கள் இச்சொல்லில் பொதிந் துள்ளன. (ஸம்ஸாரி)—அத்ர க: ஸாக்ஷீ—வ்யவஹாரம் என்று வந்துவிட்டால் ஸாக்ஷி விசாரணை இருந்தே தீரவேண்டும். எத்தனை சாஸநபத்திரங்கள் இருந்தா லும் ஸாக்ஷிகளைக்கொண்டு நிரூபிக்கவேண்டியது முறைமை. உனக்கு ப்ரமாண மான வேதங்களும் கீதை முதலியனவும் கிடக்கட்டும். பெட்டியின்மீது ஏறிச்சொல் லுவதற்கு ஒரு ஸாக்ஷி வேணுமே. யார் ஸாக்ஷி? என்கிறான் ஸம்ஸாரி. எம்பெரு மான் தவிர மற்ற எல்லா சேதநர்களும் ஸம்ஸாரிகளேயாதலால், அவர்களும் அஹம் மே என்றிருப்பவர்களேயாதலால் இவனுக்கு ஸாக்ஷிகள் எங்ஙனே கிடைக் கப்போகிறார்களென்பது சேதனனுடைய எண்ணம். எம்பெருமானுடைய பாக்யத் தாலே ஸம்ஸாரிகளினிடையே முமுக்ஷுக்களும் சிலர் இருப்பதால் அவர்கள் தனக்கு ஸாக்ஷிகளாக இருக்கத் தகுதியுடையார் என்று எண்ணின எம்பெருமான் "ஸாதிஸ் ஸ்யாத்" என்றான். ஞானிகளெல்லாரும் என் பக்ஷத்தில் ஸாக்ஷிகளாக நிற்கக்கூடும் என்றபடி. (ஸாதி: என்பதை ஜாத்யேகவசநமாகக் கொள்க.) ஸாதி: ஸாக்ஷீ அஸ்தி" என்று உறுதியாய்ச் சொல்லாமல் ஸ்யாத் என்று சொன்னது ஏனெனில், இவ்விருள் தருமாஞாலமானது ப்ரஹ்லாதாழ்வானையுமட்பட எதிரப்புநோக்கப் பண்ணின தாகையாலே ஞானிகளும் ஸமயத்திலே நம்மைக் கை விடும்படி நேர்ந்துவிடுமோ, என்னவோ! என்கிற அதிசங்கை தோன்றி அதை ஸ்யாத் என்பதனால் காட்டின னென்க. "விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் செறும் ஐம்புல னிவை" ஆகலால் யாரையும் நம்புவதற்கில்லையே என்றெண்ணினான் பெருமான் எம்

பெருமான். (ஸப்ஸாரி) ஹந்த! ப்ரத்யக்ஷபாதினः— ஸாக்ஷிகள் மத்யஸ்தர்களாக இருக்கவேணும். உறவினர்களையே கொண்டு சொல்லுவிக்கப்படுகிற ஸாக்ஷியம் உபயோகப்படாது. ஞானிகளை ஸாக்ஷியாகச்சொன்னது பொருந்துமோ? 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்று கீதையில் நீயே சொல்லியிருக்கிறாயே; உனது உயிர் நிலையாகவன்றோ ஞானிகள் இருப்பது. வாதியே ஸாக்ஷி என்று சொன்னதாகத் தேறிற்றேயல்லது பிறனொருவன் ஸாக்ஷியாகக் கூறப்பட்டானில்லையே என்றான்.

இதற்குமேல் எம்பெருமான் என்ன செய்வன்? ஸப்ஸாரிகள் யாவரும் ப்ரதிவாதியாக ஆய்விட்டபடியால் அவர்களில் ஒருவரும் ஸாக்ஷிகளாக நில்லார். முமுக்ஷுக்களோ தன் வகுப்பில் சேர்ந்துவிட்டபடியாலே அவர்களுடைய ஸாக்ஷியம் அப்ரயோஜகமென்று கண்ணழிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஸப்ஸாரிகளையும் விடமாட்டிற்றிலன்; வ்யவஹாரத்திலோ தான் தோல்வியடைய வேண்டியதாக முடிந்துவிட்டது. 'நம்முடைய சரக்குகளை நாம் அநியாயமாய் இழந்துவிடுவதா!' என்று பரிதபிக்கின்றான். இந்த நிலைமையில் வைதாநிலமாய் ஒரு உபாயம் ஸ்புரித்ததாம்; அதாவது ஸம்ஸாரிகளுடைய வாயாடித்தனத்தினால் நமக்கு வ்யவஹாரத்தில் மழுங்கு ஏற்பட்டாலும் ஸொத்து நம்முடையதே யென்பது திண்ணமாதலால், கடைசியாக ப்ரமாணம் பண்ணிக்கொடுத்து ஸொத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முறைமையும் அரசாங்கத்தில் இருப்பதால் அந்த வகையில் நாம் வெற்றி பெறக்கடவோம் என்று தோன்றிற்றும் எப்பெருமானுக்கு. [இதி நருகலஹேம்ருக்ய மத்யஸ்தவத் த்வம்] இதி—இவ்விதமாக, நருகலஹே — சேதநனோடு விவாதமுண்டாகித் தனக்குத் தோல்வி விளைந்தவளவில். த்வம் ம்ருக்யமத்யஸ்தவத் (ப்ரகாசிநோ — தேவரீர் ப்ரமாணஞ்செய்ய ஸந்நத்தர்போலே விளங்காநின்றீர், "ப்ரமாணம் கர்த்து முத்யுக்தோ ம்ருக்யமத்யஸ்த உச்யதே" என்பது நிகண்டு.

துளபமாலை யணிந்துகொண்டு தீர்த்தமாடுவதை நோக்குமிடத்தில் 'சேதநர்களெல்லாரும் என்னுடைய ஸொத்துக்களே" என்று ப்ரமாணம் பண்ணுவான் போலேயிருந்ததென்கிற விசாரல், அஹம்மே என்று இறுமாந்து கிடக்கிற ஸம்ஸாரிகளுங்கூடத் தோற்றுஈடுபடும்படியாயுள்ளது திருமஞ்சனஸேவையென்றதாம்.

இந்த உத்ப்ரேக்ஷையினால் நமக்குக் கிடைக்கும் பொருள் யாதெனில்; எம்பெருமானோடு நாம் விவாதப்படாமல் இருக்குமளவே போதுமென்பதும், எவ்வகையினாலும் நம்மை அடிமைப்படுத்திக் கொள்ள அவன் வழிதேடுகின்றவன் என்பதும், நாமெல்லாம் அவனுடைய உடைமையாதலால் நம்மை ஆட்படுத்திக்கொள்வதிலேயே நோக்குடையவனான அவனது திருவருளை நினைத்து நாம் மார்பிலே கைவைத்துறங்கலா மென்பதுமாம் ... ...

6. திவ்யப்ரபந்த வ்யாக்யான ப்ரவசன யோக்யதை

ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமாகக் கிடைத்திருக்கிற "உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்ய" பிருதத்தை ஸார்த்தகமாக்கிக்கொள்ளும் பாக்கியம் படைத்தவர்களை மஹாதபஸ்விகளென்று சொல்லவேணும். காலை வேளைகளில் ஸ்ரீபாஷ்ய ப்ரவசனமும், மாலை வேளைகளில் பகவத் விஷய ப்ரவசனமும் செய்து போரும் மஹான்கள் 'தென்திசைக்குத் திலதமன்ன மறையோர்' என்றும்

திருமங்கையாழ்வாரருளிச்செயலுக்கு இசைகாரர் ஸ்ரீவைஷ்ணவவுலகுக்குத் திலகமாகவே கொள்ளப்படுவர்கள். "நான் ஸ்ரீபாஷ்யம் ஸேவித்திருக்கிறேன்" என்றோ, "இவர் ஸ்ரீபாஷ்யம் ஸேவித்திருக்கிறார்" என்றோ சொல்லக்கூடிய மஹான்கள் சிலரோ பலரோ தேறலாமாயினும், ஸ்ரீபாஷ்யத்தைநன்கு ப்ரவசனம்செய்யமுன் வரும் மஹான்கள் மிகச்சிலரே தேறக்கூடும். அன்னவர்கள் சாஸ்த்ரங்களில் வ்யுத்பத்தி பெறுமல் ப்ரவசனத்திற்குத் துணிந்து முன்வர முடியாதாதலால் அன்னவர்களைப் பற்றி நாம் இங்குச்சொல்லவிரும்புவதொன்றுமில்லை. ஆனால், ஸம்ஸ்க்ருதம் பயிலாத சிஷ்யர்களுக்குச் சில காரண விசேஷங்களினால் ஸ்ரீபாஷ்ய ப்ரவசனம் செய்ய வெழுந்து எதையோசொல்லி, காலக்ஷேபம் என்கிறசொல்லின் பொருளை யதார்த்தமாக்குவதுமுண்டு சிலர்; அன்னவர்களைப் பற்றியும் இங்கு நாம் ஒன்றும் சொல்ல விரும்புகின்றிலோம். த்ராவிட வேதாந்த ப்ரவசன நிஷ்ணாதர்களைப்பற்றியே சில விஜ்ஞாபிக்க விருப்பம். ஸ்ரீபாஷ்ய ப்ரவசனத்திற்கு எப்படி ஸம்ஸ்க்ருத பாஷாஜ்ஞானம் இன்றியமையாததோ, அப்படியே பகவத்விஷய ப்ரவசனத்திற்குத் தமிழறிவு இன்றியமையாததாம். நாம் தமிழ் நாட்டில் பிறந்திருப்பதும் தமிழ் பேசத் தெரிந்திருப்பதுமே தமிழறிவுக்குப் போதுமானதென்றே தமிழ் நூல்களை நிர்வஹிப்பதற்குப் பர்யாப்தமானதென்றே நினைக்கலாகுமோ? அசை சீர் எதுகை மோனை முதலான சிலவற்றையாவது தெரிந்துகொள்ளவேண்டாமா? (ந-ண) (ர-ற) வல்லின இடையினங்களையாவது தெரிந்துகொள்ளவேண்டாமா? காலக்ஷேப பார்களான சில ஸ்வாமிகள் ஆப்தர்களுக்கு ஸ்ரீமுகம் ஸாதிக்கும்போது "இங்கே காலக்ஷேபம் குறைவர நடபத்துக்கொண்டிருக்கிறது" என்றெழுதுவர்கள். 'நடபத்துக்கொண்டிருக்கிறது' என்பது கிடக்கட்டும். குறைவில்லாமல் என்கிற தாத்பர்யத்தில் (குறைவர) என்றெழுதுகிறார்கள். இவர்களுடைய விவக்ஷைக்கு நேர்விபரீதமான பொருளைத் தானே அது தரும். அருளிச்செயல் ஸேவிக்கும்போதும் "இராசகிர்வாழ்" என்றும் "உனக்கென்ன வேறுடைமை" என்றும் "அணிபுதுவைப் பெங்கமலச்சண்டரையில்" என்றும் சித்திரமும் விசித்திரமுமாக ஸேவிப்பர்கள். யாராவது கேட்டால் 'இளமையில் பாடம்' என்பர்கள். 'காலக்ஷேபத்திற்கும் இதற்கும் என்ன ஸம்பந்தம்?' என்றும் சிலர் சொல்லுவர்கள்.

திவ்யப்பிரபந்தங்களில் வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும் தனிமை பெற்று விளங்குவன. இவற்றின் முக்கிய இலக்கணமாகிய வெண்பாவை ஓரேயொரு நாளில் தெரிந்துகொள்ளமுடியும். தெரிந்துகொண்டால் அதனால் எவ்வளவு ஆனந்தமென்பது பின்னையன்றோ அறியப்படும். "காய்முன் நேரும் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது வெண்டளை" என்றுமிவ்வளவே வெண்பாவின் இலக்கணம். இதில் — காய், மா, விள, நேர், நிரை என்றால் என்ன என்பதை ஸாமான்ய புத்திமான்களுங்கூட இரண்டே நாழிகையில் தெரிந்துகொள்ளமுடியும். இனி, கட்டளைக் கலித்துறையின் இலக்கணம்—"அடிமடிதோறும் ஐஞ்சீராகி, முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக், கடையொருசீரும் விளங்காயாகி, நேர் பதினாறே நிரைபதினேழென்று, ஓதினர் கலித்துறை யோரடிக்கெழுத்தே." என்னுமிவ்வளவே கட்டளைக்கலித்துறையின் இலக்கணம். ஒரு தமிழறிஞரிடம் இவற்றை ஒரே நாளில் உணரமுடியுமென்பதை மீண்டும் விஜ்ஞாபிக்கிறேன்.

இந்த ப்ரஸங்கத்தில் நினைவுக்கு வந்ததொன்றை உபேக்ஷிக்கமுடியாமல் விண்ணப்பஞ்செய்கிறேன். திருவாய்மொழியில் 'வீடுமின் முற்றத்தின் ஈற்றுப் பாசுரம் 'சேர்த்தடத் தென்குருகூர்' என்பதன்றோ. இப்பாட்டின் ஈடுமுப்பத்தாறு யிரப்படியில் "சேர்த்தட மென்கிற வித்தைச் சேர்தடமாக்கி" என்றருளிச் செய்யப் பட்டுள்ளது. இதற்கு என்ன பொருளென்பதை மேலே விவரிப்போம். பல பல வித்வான்கள் கூடி பகவத் விஷயத்தை ஸகலவியாக்கியானங்களோடுங்கூட முதன் முதலாக அச்சிட்ட தெலுங்குலிபி ஸ்ரீகோசத்தில் "சேர்த்தடமென்கிற வித்தைச் சேர்த்தடமாக்கி" என்று அச்சிட்டு, கீழே டிப்பணியெழுதியுள்ள விதமாவது—"சேர் என்றதை தடங்களுக்கு விசேஷணமாக்கி யென்றபடி. மேல் ஊருக்கு விசேஷணம் என்றிருக்கையாலே" என்று. பல பெரியார்கள் கூடி இங்ஙனே யெழுதி யிருக்கிற போது நாம் என்ன சொல்லுவது? இங்குத் தத்துவம் கேளீர். இவ்விடத்திற்கு ஈட்டில் மூன்று யோஜனைகள் பணிக்கப்பட்டன. (1) தடாகங்கள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கப்பெற்ற தென்குருகூர். (2) தடாகங்கள் சேர்ந்த தென்குருகூர் (3) சேர் என்பதை வினைமுற்றாகக்கொண்டு 'இப்பத்தே சேர்' ஆக இம்மூன்று யோஜனை களிலும் சேர்தட மென்று இயல்பாக இருக்கவேணுமேயல்லது சேர்த்தடமென்று தகர வொற்று மிக்கிருக்கக்கூடாது. ஆயினும் பேடிகளுக்குச் சேர (எதுகைக்குச் சேர) சேர்த்தடமென்று வலிமிக்குளளது அர்த்தாநுஸந்தான காலத்தில் சேர்தட மென்று இயல்பாகக் கொள்ளவேணுமென்று நம்பிள்ளை சிக்ஷித்தருளினபடி தமிழறிஞர் இங்கே மருளமாட்டார்கள். ... ... *


7. ஈட்டில் ஒரு விநோத கதை

திருவாய்மொழியில் (1—5—5) 'மானேய் நோக்கி மடவாளை' என்னும் பாசு ரத்தினிரண்டாமடியில் 'கூனே சிதைய வுண்டைவில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா!' என்றவிடத்து (கூனே சிதைய) என்றது க்ருஷ்ணாவதார சரிதையாக முந்துற வியாக்கியான மிட்டருளி, உடனே ராமாவதார கதையொன்றைச் சொல் விற்றுக வியாக்கியானித்து, அப்போது கோவிந்தா! என்கிற விளி சேருவதற்குப் பொருத்தம் ரஸோக்தியாக ஸாதிக்கும் நம்பிள்ளை "தீம்பு சேருவது க்ருஷ்ணனுக்கே யாகையாலே "போம்பழியெல்லாம் அமணன் தலையோடே" யென்னு மாபோலே அவன் (கண்ணன்) தலையிலே யேறிட்டுச்சொல்லுதல்" என்றருளிச் செய்யப்பட் டுள்ளது போம்பழியெல்லாம் அமணன் தலையோடே யென்ற கதையின் விளக்கம் வருமாறு: ஒரு பிராமணன் தன் வீட்டுப் புழைக்கடையிலே சுவர் வைத்தான்; அன் றிரவு கள்ளன் அச்சுவரில் கன்னமிட்டு உள்ளே புக நினைக்கையில் அது ஈரச்சுவரா கையாலே கள்ளனை இறுக்கி உயிர்மாளச் செய்துவிட்டது. அஃதறிந்த அவன் மனைவி ஓடி வந்து பழிதரவேணுமென்ன; இருவரும் ராஜத்வாரத்திற்குச் செல்ல, அந்த மூர்க்கப்ரபு அந்தணனை நோக்கி ஏன் ஈரச்சுவர் வைத்தாயென்ன; எனக்குத் தெரியாது. சுவர் வைத்த கொத்தனைக் கேட்கவேணுமென்று அவன் சொல்ல, கொத்தனை யழைத்துக் கேட்க, 'என்மேல் பிழையில்லை; தண்ணீர் விட்டவன் மிகு தியாக விட்டிட்டான், நான் என்செய்வேன்? என்ன; அவனை யழைத்துக் கேட்க,

'குயவன் பெரியபானையைத் தந்தான்; அதனால் நீர் அதிகமாயிற்று; நான் என் செய்
வேன்?' என்ன; அரசன் குயவனை யழைத்து 'ஏன் பானையைப்பெரிதாகப்பண்ணினாய்?'
என்ன; அதற்கு அவன் 'நான் பானையைச் சிறிதாகவே பண்ண நினைத்தேன்; அது
பண்ணிக்கொண்டிருக்கும்போது ஒரு வேசி போக்குவரத்தாயிருந்தாள்; அவளைப்
பார்க்கிற பராக்கிலே பானை பருத்துவிட்டது. நானென் செய்வேன்?' என்ன; பிறகு
வேசியையழைத்து 'ஏன் நீ அக்குயவன் தெருவிலே சென்றாய்?' என்று கேட்க;
'வண்ணானிடம் சேலையைத் தோய்க்கக் கொடுத்திருந்தேன். அவனைக் காணச்
சென்றேன். என்ன; பிறகு வண்ணானையழைத்து ஏன் தாமதஞ்செய்தாய்? என்ன;
அவன் 'நானென் செய்வேன்? துறையில் கல்லிலே ஓர் அமணச்சாமி உட்கார்ந்
திருந்தான்; எவ்வளவு உரப்பியும் அவன் எழுந்துசெல்லவில்லை; அவனாகவே எழுந்து
சென்ற பின்பு சேலையைத் தோய்த்துக் தர வேண்டியதாயிற்று; என்மேல் என்ன
பிசகு?' என்ன. பிறகு அந்த திகம்பரச்சாமியைத் தேடிப்பிடித்துக்கொணரச்செய்து
விசாரிக்க, அவ்வமணன் மௌனச்சாமியாகையாலே ஒன்றும் விடை கூறுதிருக்க,
'உண்மையில் பழி தன்னிடத்தேயுள்ளதனால் இவன் வாய்திறந்திலன். இவனே
இத்தனைக்கும் மூலமான குற்றவாளி; இவனைப் பழிவாங்குங்கள்' என்று அரசன் கட்
டளை யிட்டானாம். போம் பழியெல்லாம் அமணன் தலையோடேயானது இதுவே.
பெரியாழ்வார் திருமொழியில் (2—8—5) "பல்லாயிரவ ரிவ்வூரில் பிள்ளைகள் தீமை
கள் செய்வார், எல்லாம் உன்மேலன்றிப்போகாது எம்பிரான்! நீயிங்கே வாராய்"
என்ற யசோதை பாசுரம் இவ்விடத்திற்குச் சார்பாக அநுஸந்திக்கவுரியது

"கூனே சிதையவுண்டைவில் நிறத்தில் தெறித்த கதை ஸ்ரீராமாவதாரத்தி
லும் உண்டென்னும்போது இஃது அறியத்தக்கது—இராமன் சிறுவனாயிருக்கி
காலத்தில் ஒரு நாள் கையில் சிறு வில்லும் மண்ணுண்டையுங்கொண்டு விளையாடி
வருகையில் ஒருகால விற்கொண்டு எய்த உண்டையானது கைகேயியின் வேலைக்
காரியான மந்தரை யென்னுங் கூனியின் முதுகின் புறத்தே தெறிக்க, அவள் தனது
கூனுடைமையை இராமன் இங்ஙனம் பரிஹஸித்தனனென்று தவறாகக் கருதி மனம்
வருந்தி அவன் மீது சினங்கொண்டு ராஜபுத்திரனாகையாலே அப்பொழுது ஒன்றும்
செய்யமாட்டாமற் சென்று, தனக்கு வாய்க்குந்தருணம் நோக்கிக் கறுக்கொண்
டிருந்து பின்பு தசரதன் இராமபிரானுக்கு முடி சூட்ட நிச்சயித்ததை உணர்ந்தவள
வில் கோபதாபம் மிக்கவளாகி, அதற்கு எப்படியாவது தான் தடைசெய்ய நிச்சயித்
துக் கைகேயிக்குக் கலகஞ் செய்து அவள் மனத்தை மாற்றி அவளைக்கொண்டு
ஸ்ரீராம பட்டாபிஷேகத்தைத் தவிர்த்து அப்பெருமானை வனம் புகுவித்தனள்-என்று
சொல்லுவதொரு இதிஹாஸமுண்டு! இதனைக் கம்பரும் தமது இராமாயணத்தில்
கிட்கிந்தாகாண்டத்து அரசியற் படலத்தில் "சிறிய ரென்றிகழ்ந்து நோவு செய்வன
செய்யேல் மற்றிந், நெறியிகந்து யானோர் தீமையிழைத்தலா லுணர்ச்சிநீண்டு, குறிய
தாம் மேனியாய கூனியாற் குவவுத்தோளாய்! வெறியன வெய்தி நொய்தின் வெந்
துயர்க்கடலில் வீழ்ந்தேன்" என்ற செய்யுளிற் குறிப்பித்துள்ளார். அயோத்தியா
காண்டத்திலும் இதைப் பேசியுள்ளார். ... ...

ஸ்ரீ:



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சி நம்பிள்ளை மஹோத்ஸவ ப்ரகடன பத்திரிகை
(ராக்ஷஸ ௵ 1975)

ஸ்ரீ காஞ்சி தேவப்பெருமாள் ஸந்நிதியின் திருமுன்பே திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் **நம்பிள்ளைக்கு** நிகழும் ஐப்பசி ௴ 24௳ *(10—11—75)* திங்கட்கிழமை திருவோண நக்ஷத்திரத்தில் திருவவதார மஹோத்ஸவம் தொடக்கமாகி கார்த்திகை ௴ 3௳ *(19—11—75)* புதன்கிழமை திருக்கார்த்திகைத் திருநக்ஷத்திரத்தில் சாற்றுமுறையாகும். பத்து நாட்களிலும் அலங்கார திருமஞ்சனமும் இரண்டு வேளைகளிலும் திவ்யப்ரபந்த ஸேவை கோஷ்டிகளும் ததீயாராதனமும் விசேஷ வைபவமாக நடைபெறும். வித்வான்களின் உபந்யாஸங்களும் நடைபெறும். ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து அநுபவித்து ஆனந்திக்க வேணும். இம்மஹோத்ஸவ ஸேவார்த்தமாக வெளியூர்களிலிருந்து வரும் பக்த பாகவதோத்தமர்களுக்கு ஸ்தலவசதி முதலிய ஸௌகரியங்கள் விசேஷமாகச் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீ வைஷ்ணவ பக்த சிகாமணிகள் குழாங்கூடியிருந்து அநுபவிக்கக்கூடிய மஹோத்ஸவமிது.

சாற்றுமுறையன்று ஸ்ரீ யதோக்தகாரி எம்பெருமான் புறப்பாடு கண்டருளி நம்பிள்ளை ஸந்நிதியிலெழுந்தருளியிருந்து நடைபெறும். இரண்டாயிரம் ரூபாய் செலவில் விசேஷ வைபவங்களுடன் நடைபெற்றுவருகின்ற இந்த மஹோத்ஸவத்திற்கு பக்தர்கள் உகந்து யதாசக்தி பொருளுதவி புரிந்து ஆசார்ய ஸார்வபௌமருடைய இம் மஹோத்ஸவத்தை மிகவும் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இங்ஙனம்,

ஸ்ரீ காஞ்சீபுரம். }
7—11—75 }

P. B ANNANGARACHARYA
Founder, Sri Nampillai Sannidhi.